# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 043 வள்ளுவர் ஆண்டு: 2045

மார்கழி 24, வியாழக்கிழமை 08.01.2015


வானிலை
சேகரப்பான வானிலை காணப்படும்
மழை, இரவு வேளையில் குளிரான காலநிலை காணப்படும்.

08 JAN 2015



# இராணுவம் தடுத்தாலும் மீறி வாக்கிடுக

"பாதுகாப்புக் காரணங்களை கூறி வாக்காளர்களைத் தடுக்க முடியாது." - மஹிந்த தேசப்பிரிய

கொழும்பு, ஜன. 8
இலங்கையின் 7ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இந்தநிலையில் வடக்கு மாகாணத்தில் வாக்குப் பதிவின் போது இராணுவத்தினரின் தலையீடு காணப்படலாம் என்று பல தரப்பாலும் அச்சம் வெளியிடப்பட்டு வருகின்றது. ஆயினும், மக்கள் வாக்களிப்பதை எந்த வகையிலும் இராணுவத்தினர் தடுக்க முடியாது என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
இராணுவத்தினர் பாதுகாப்புக் காரணங்களைக் கூறி வாக்காளர்களை தடுக்க முடியாது. அவ்வாறு இராணுவத்தினர் தடுத்தால், அந்த உத்தரவைப் புறக்கணித்து வாக்களிக்கும் உரிமை பக்.19

## தமிழர்களின் பிரச்சினையை முதலில் தீர்க்க வேண்டும்

### பா.ஜ.க. கோரிக்கை

கொழும்பு, ஜன. 8
ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுபவர், முதலாவதாக தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி வலியுறுத்தியுள்ளது.
பா.ஜ.க.வின் தலைவர்களில் ஒருவரான விஜய் ஜோலி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். பக்.19

## வதந்தி பரப்புவோர் கம்பி எண்ணுவர்!

கொழும்பு, ஜன. 8
தேர்தல் காலத்தில் வதந்திகளைப் பரப்புவோர் உடனடியாக கைது செய்யப்படுவர் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.
குழப்பங்களை விளைவிப்போர் மற்றும் வதந்திகளைப் பரப்புவோரைக் கைது செய்ய சுமார் 20 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பக்.19

## போலியான சுவரொட்டிகளை நம்ப வேண்டாம் - த.தே.கூ.

யாழ்ப்பாணம், ஜன. 8
மக்களைக் குழப்புவதற்காக போலிச் சுவரொட்டிகள் அச்சிடப்பட்டுள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. கூட்டமைப்பு தேர்தலைப் புறக்கணிக்கின்றது என்று அர்த்தப்பட அந்தச் சுவரொட்டி வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன பக்.19

## வாக்களிப்பது உங்கள் உரிமை

கொழும்பு, ஜன. 8
வாக்களிப்பது மக்கள் உரிமை என்று தெரிவித்துள்ள தேர்தல்கள் திணைக்களம், அச்சுறுத்தல் இன்றி, சுதந்திரமாக வாக்களிப்பதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் இன்று நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ளது. குறிப்பாக வடக்கு மாகாணத்தின் தேர்தல் முடிவுகள் தொடர்பில் பல்வேறு தரப்பினரது கவனமும் திரும்பியுள்ளது. பக்.19



## வாக்களிக்க எவற்றை கொண்டு செல்ல வேண்டும்?

கொழும்பு, ஜன. 8
இன்று இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரையில் தமது வாக்குகளைப் பதிவு செய்ய முடியும். அதன்போது கீழ் வரும் ஆவணங்களில் ஏதாவது ஒன்றைக் கட்டாயம் எடுத்துச் செல்ல வேண்டும்.

*தேசிய அடையாள அட்டை*
*செல்லுபடியாகும் கடவுச்சீட்டு*
*செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்*
*ஓய்வூதியம் பெறுவோர் அடையாள அட்டை*
*முதியோர் அடையாள அட்டை*
*மதகுருமார் அடையாள அட்டை*
*தேர்தல் திணைக்களத்தால் அல்லது ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை*
*இவற்றில் ஏதாவது ஒன்றை எடுத்துச் சென்றால் மாத்திரமே வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.*
*அத்துடன் வாக்காளர் அட்டை கிடைத்தவர்கள் அதனை வாக்களிப்பு நிலையத்துக்கு கொண்டு செல்ல முடியும்.* (ந-5)

## மைத்திரியின் சின்னம் அன்னம் இல்லாத மாதிரி வாக்குச் சீட்டு!

### தீவகப் பகுதியில் நேற்றிரவு விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன. 8
பொது எதிரணி ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின், அன்னச் சின்னத்துக்கு பதிலாக வேறு சின்னம் பொறிக்கப்பட்ட போலி வாக்குச் சீட்டுகள் தீவகப் பிரதேசத்தில் நேற்று இரவும் வீடு வீடாக விநியோகிக்கப்பட்டுள்ளது. ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சியொன்றின் ஆதரவாளர்களே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.
ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று இடம்பெறவுள்ளது. இந்த நிலையில் மக்களை குழப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பக்.19

## சூடுபட்ட மைத்திரி ஆதரவாளர் நேற்றுச் சாவு

கொழும்பு, ஜன. 8
இரத்தினபுரி – கஹவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த பொது எதிரணி வேட்பாளர் மைத்திரியின் ஆதரவாளர் நேற்று உயிரிழந்துள்ளார்.
எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பரப்புரைக்கு மேடை அமைத்துக் கொண்டிருந்த போது கடந்த 5 ஆம் திகதி அதிகாலை துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது. பக்.19

இன்று நடைபெறும் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் யாழ் மக்கள் வாக்களிக்க இருக்கும் வாக்குப் பெட்டிகள் யாவும் பலத்த பாதுகாப்புடன் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் உள்ள 526 வாக்குச்சாவடிகளுக்கும் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டன. பக்.05



## தேவையற்ற பேச்சு பேசுகிறார் பான் கீ-மூன்! - இலங்கை அரசு

கொழும்பு, ஜன. 8
ஜனாதிபதித் தேர்தல் அமைதியான முறையில் நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூனின் கருத்தை அவரது பேச்சாளர் மீண்டும் வலியுறுத்தியமை குறித்து வெளிவிவகார அமைச்சு அதிருப்தி வெளியிட்டுள்ளது.
ஐ.நா பொதுச் செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை, ஐ.நா பொதுச் செயலர் ஏற்கனவே வெளியிட்ட கருத்தை மீளவும் நினைவுபடுத்தியிருந்தார்.
இது தேவையற்ற, அநாவசியமான கருத்து என்று வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.
1931ஆம் ஆண்டு தொடக்கம் ஜனநாயக அடிப்படையில், உரிய காலக் பக்.19

## தமிழ்க் கூட்டமைப்பு பெயரில் போலித் துண்டுப் பிரசுரங்கள்

### மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.8
தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணிக்கவேண்டும் அல்லது செல்லுபடியற்றதாக்க வேண்டும் என்று கோரும் பிரசுரங்கள் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இனந்தெரியாதோரால், விநியோகிக்கப்பட்டுள்ளது என்று பக்.19

## போலி நியமன கடிதம் வழங்கி அரச தொழில் புரிந்தவர் கைது

மன்னார் மாவட்ட செயலகத்தில் போலியான நியமனக் கடிதம் வழங்கி ஒன்றரை வருடங்களாக அரச ஊழியராகக் கடமை புரிந்த ஒருவர் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பக்.22

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அச்சம் ஏதுமின்றி மக்கள் வாக்களிக்கச் செல்வதை உறுதிப்படுத்த வேண்டும்

## சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள்

கொழும்பு, ஜன.8

மக்கள் அச்சமின்றியும் பாதுகாப்பாகவும் வாக்குச் சாவடிக்கு செல்வதை உறுதிப்படுத்துமாறும், அரச ஊடகங்கள் தற்போதைய ஜனாதிபதிக்கு சார்பாக செயற்படுவதை நிறுத்துமாறும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்ற பரப்புரை நடவடிக்கைகளின்போது பல வன்முறைச் சம்பவங்களும், மிரட்டல்களும் இடம்பெற்றன என இலங்கையைச் சேர்ந்த கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்தன.

வாக்காளர்கள், வேட்பாளர்கள், கண்காணிப்பாளர்கள், தாக்கப்படுதல், மிரட்டப்படுதல் போன்றவற்றை தடுப்பதற்காக இலங்கை அதிகாரிகள் சகல விதமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் வேண்டுகோள் விடுத்தார்.

தேர்தல் பரப்புரைக் காலத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் வாக்களிப்பு தினத்தன்று இடம்பெறுவதையும், வாக்கு எண்ணும் பணி பாதிக்கப்படுவதையும் அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார். தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் வன்முறைகள் இடம்பெறலாம் எனவே பொலிஸாரும் ஏனையவர்களும் பக்கச்சார்பற்ற விதத்தில் நடந்து மக்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதை தேர்தல் ஆணையகமும் ஏனைய தரப்புகளும் உறுதி செய்யவேண்டும்.

குறிப்பாக சிறுபான்மையினர் வாழும் பகுதிகளில் இதனை செய்யவேண்டும். தேர்தலுக்குப் பின்னர் இராணுவத்தினர் ஆற்றும் பங்களிப்பு இலங்கையில் எதிர்கால மனித உரிமைகள் நிலவரம் எவ்வாறு அமையும் என்பதை தெரிவிப்பதாக அமையும்.– என்று அவர் தெரிவித்தார். (ற)

## திங்கட்கிழமை பாடசாலைகள் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 8

தேர்தல் நடவடிக்கைகள் காரணமாக நாளை வெள்ளிக்கிழமை வரை மூடப்படும் சகல பாடசாலைகளும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்காக எதிர்வரும் திங்கட்கிழமை மீள ஆரம்பமாகும் என்று வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்துக்கான கல்விச் செயற்பாடுகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி தேர்தல் பணிகளுக்காகப் பாடசாலைகள் கடந்த செவ்வாய்க்கிழமை தேர்தல் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. தற்போது சகல பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து பாடசாலைகள் மீளத் திறக்கப்படும் என்று திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

(த-4)

## பொலிஸாருக்கு எதிராக 483 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜன.8

கடந்த வருடத்தில் பொலிஸாருக்கு எதிராக 483 முறைப்பாடுகள் பொதுமக்களிடமிருந்து கிடைத்துள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவிக்கின்றது. அதில் 426 முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் பண்டார தென்னகோன் குறிப்பிட்டுள்ளார். பொலிஸாரின் செயற்திறனின்மை தொடர்பிலேயே கூடுதலாக 206 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

பக்கச்சார்பாக செயற்பட்டமை தொடர்பில் 127 முறைப்பாடுகளும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியமை தொடர்பில் 97 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 071 036 10 10 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பொலிஸார் குறித்து முறைப்பாடு செய்யலாம் என ஆணைக்குழுவின் செயலாளர் கூறியுள்ளார். (ற)

## எலிக்காய்ச்சலால் 43 பேர் பாதிப்பு

### வடக்கு மாகாணத்தின் புள்ளிவிவரம் இது

யாழ்ப்பாணம், ஜன. 8

வடக்கு மாகாணத்தில் எலிக் காய்ச் சலால் கடந்த வருடம் 43 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 17 பேர் யாழ்.குடாநாட்டைச் சேர்ந்தவர்களாவர். நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 214 பேர் இந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் 11 பேரும், வவுனியாவில் 10 பேரும், மன்னாரில் 4 பேரும், கிளிநொச்சியில் ஒருவரும் இந்நோயினால் பீடிக் கப்பட்டுள்ளனர். அவர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

எலி மற்றும் மாடு, எருமை போன்ற மிருகங்களிலிருந்து தொற்றுகின்றன ஒரு வகைக் காய்ச்சலே எலிக் காய்ச்சலாகும். ஒரு வகைப் பக்றீரியா மூலமாக இந்தக் காய்ச்சல் பரவுகிறது. நோயால் பாதிக்கப்பட்ட எலியின் சிறுநீர் மூலமாக இந்தப் பக்றீரியா வெளிச் சூழலுடன் பரவுகிறது.

உடலில் வெட்டுக் காயங்கள், கீறல்கள், கண்ணுக்குத் தெரியாத சிராய்ப்புக்கள், புண் போன்றவற்றுடன் வேலை செய்கையில், வயலுக்கு அண்மையில் உள்ள ஓடாத நீர் தங்கியுள்ள இடங்களில் குளிப்பதால், கண்களிலுள்ள மெல்லிய படலங்கள் ஊடாக, எலியின் சிறுநீர் கலந்த நீரைக் குடிப்பதற்கோ அல்லது வாய் கழுவுவதற்கோ பயன்படுத் தும்போதும், கைவிடப்பட்ட வயலினுள் நுழையும் போதும் இந்த நோயால் பாதிக்கப்படக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

இந்த நோய் ஏற்பட்டால் காய்ச்சல், தசைகளில் கடுமையான வேதனை, கண்கள் கடுமையான சிவப்பாக மாறுதல் ஆகிய பிரதான அறிகுறிகளுடன் வாந்தி, தலையிடி, உடல் பலவீனம் போன்ற அறிகுறிகள் ஏற்படும். நோய் அறிகுறி தென்பட்டால் மருத்துவ சிகிச்சை பெறவும். இந்நோய் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தொற்றுவ தில்லை என்று சுகாதார அமைச் சுத் தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நோயால் கடந்த வருடம் நாடளாவிய ரீதியில் 4 ஆயிரத்து 276 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

(ற-4)




# இலங்கை ஜனாதிபதித் தேர்தலை அவதானிக்கின்றது இந்திய அரசு

## அந்நாட்டு ஊடகம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.8

இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகிறது. தேர்தலில் போட்டியிடும் யாருக்கும் சார்பான கருத்துக்களை இந்தியா வெளியிடவில்லை என்று இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்திய அரச தரப்புக்கலள கோடிட்டு வெளியிடப்பட்டுள்ள கருத்தில் தேர்தலின் மூலம் பொறிமுறை மாற்றம் ஒன்றை இந்தியா விரும்புவதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மஹிந்த ராஜபக்ஷவின் அரசுடன் இந்தியா தமது செயற்பாடுகளை மேற்கொண்டது. அதேபோல புதிதாக தெரிவு செய்யப்படும் அரசுடனும் இந்தியா உரிய வகையில் செயற்படும் என்று அரச அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிரணியானது கூட்டணி என்றபடியால் மைத்திரிபால சிறிசேன அனைத்து விடயங்களையும் நிறைவேற்ற முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே அனைத் தும் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்றும் அந்த இந்திய அதிகாரி குறிப் பிட்டுள்ளதாக அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.


(ற)

## அவள் வருவாளா? உடைந்து போன நெஞ்சை ஒட்ட வைக்க அவள் வருவாளா??



## முகநூலில் சுட்டவை

### எல்லாம் கொஞ்சக் காலத்துக்குத்தான் நண்பா



மாற்றம் ஒன்றுதான் உலகில் மாற்றமில்லாதது

## இணையத்திலும் போட்டி போடும் ஸ்ருதி - சமந்தா



அதிக படங்களில் நடிப்பதிலும், வாய்ப்பைப் பெறுவதிலும் போட்டியில் குதித்திருக்கும் ஸ்ருதி, சமந்தா தங்களது போட்டியை அத்தோடு நிறுத்தாமல் விளம்பரப் படங்களை கைப்பற்றுவது, முன்னணிக் கதாநாயகர்களின் படங்களில் அவர்களுடன் ஜோடி சேருவது என்று போட்டி தொடர்கிறது.



இந்த மோதல் இணையத் தளம் வரை விரிவடைந்திருக்கிறது. ஏற்கனவே திரிஷா, ஸ்ருதி ஹாசன் இருவரும் இணைய டுவிட்டர் பக்கத்தில் 10 லட்சம் ரசிகர்கள் எண்ணிக்கையை தொட்டிருக்கின்றனர். அந்த இடத்தை பிடிப்பதற்காக சமந்தாவும் விடாமல் டுவிட்டர் வலைப் பக்கத்தை கையாண்டு வருகிறார். அண்மையில் அவரும் அந்த இலக்கை எட்டியிருக்கின்றார்.

## (துண்ணி) பாம்பின் வகைகள்




மது உடல் நலத்துக்கும், உன் மானத்துக்கும் கேடு

## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

மனைவி : இந்த வீட்டில் ஒன்று, நான் இருக்க வேண்டும்! இல்லை உங்கள் அம்மா இருக்க வேண்டும்!

கணவன் : நீங்கள் இரண்டு பேருமே புறப்படுங்க! வேலைக்காரி மட்டும் இருக்கட்டும்!!

மனைவி : ?????

**facebook** சினிமாவில் ஹீரோயிசம் செய்பவனை ஆகா ஓகோ என்று சொல்லும் மக்கள்..., நிஜ வாழ்க்கையில் யாராவது, ஏதாவது தவறை தட்டிக் கேட்டால் சொல்வது இவனுக்கு எதுக்கு இந்த வேலை.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: விஜயா

**மேடம்:** நன்மைகள் கிடைக்கும். பலவிதமான துறைகளில் முன்னேற்றம் கிடைக்கும். பொருளாதார வளம் சிறப்படையும். செல்வாக்கில் முன்னேற்றம் ஏற்படும்.

**இடபம்:** சுபநிகழ்ச்சிகள் உடனடியாக நிறைவேறாமல் போகலாம். உத்தியோகம் பார்ப்பவர்கள் தொடர்ந்து சற்று சிரத்தை எடுத்து உழைக்க வேண்டியிருக்கும்.

**மிதுனம்:** உங்கள் பொறுப்புகளை பிறரிடம் ஒப்படைத்து விட வேண்டாம். வியாபாரிகள் பின்தங்கிய நிலையில் இருந்து மீண்டு முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பர்.

**கடகம்:** தொழில் நிமித்தமாக வெளியூர் அல்லது நீண்ட தூரம் பயணம் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம். கலைஞர்கள் சீரான நிலையில் இருப்பார்.

**சிங்கம்:** மிகவும் சிறப்பான காலகட்டமாகவே இருக்கிறது என சொன்னோம். அவ்வப்போது பொருள் இழப்பும், சிறுசிறு உடல் உபாதைகளும் ஏற்படலாம்.

**கன்னி:** குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகள் வந்தாலும் மகிழ்ச்சியான சூழ்நிலையே நிலவும். அதே வேளையில் காலகட்ட பிற்பகுதியில் பொருள் விரயமும் வேலையில் பின்தங்கும் சூழ்நிலையும் ஏற்படலாம்.

**துலாம்:** எந்தப் பிரச்சினைகளையும் முறியடிக்கும் வல்லமையும் பெறலாம். குடும்பத்தில் வசதிகள் தொடரும். சற்று சிரத்தை எடுத்தால் சாதனைகள் செய்யலாம். கணவன் மனைவி இடையே அன்பு நீடிக்கும்.

**விருச்சிகம்:** மிகவும் சிறப்பான பலன்களைப் பெறப் போகிறீர்கள். சிற்சில குழப்பங்கள் வந்தாலும் அதற்காக கவலை கொள்ள வேண்டாம். அனைத்தும் நன்மையே கிடைக்கும்.

**தனுசு:** காரிய அனுகூலம் கிடைக்கும், மதிப்பு மரியாதை சீராக இருக்கும். வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும்.

**மகரம்:** விருந்து விழா என சென்று வருவீர்கள். குடும்பத்தில் நிலவிவந்த பிரச்சினைகள் அனைத்தும் படிப்படியாக மறையும். குடும்பத்தில் நிலவி வந்த கருத்து வேறுபாடுகள் மறையும், பிரிந்திருக்கும் குடும்பம் ஒன்று சேரும்.

**கும்பம்:** உத்தியோகம் பார்ப்பவர்கள் பின்தங்கிய நிலை மாறி முன்னேற்றம் காண்பர். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். உங்கள் திறமை மேம்படும். கோரிக்கைகள் நிறைவேறும்.

**மீனம்:** பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவை கிடைக்கும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். சிலருக்கு முக்கிய பொறுப்புகள் வந்து சேரும். வேலையின்றி தவிக்கும் படித்தவர்களுக்கு வேலை கிடைக்கும்.

# செய்திகள்

## வாக்காளருக்கு இலஞ்சம்



மன்னார், ஜன. 8

தேர்தலில் பலவந்தமாக வாக்குகளைப் பெறும் வகையில் வாக்காளர்களுக்கு பல்வேறுபட்ட பொருள்களை இலஞ்சமாக வழங்குவதற்குச் சிலர் செயற்படுவது தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன், இவ்வாறு பொருள்களைக் கொடுக்க வரும் நபர்கள் தொடர்பில் பொலிஸார் மற்றும் பிரதேச செயலர்களின் கவனத்திற்கு கொண்டுவருமாறும் கேட்டுள்ளார்.

மன்னார் உப்புக்குளத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தற்போது மன்னார் மாவட்டத்தில் இந்தச் செயற்பாடுகள் இடம்பெறுவதாக அறிய முடிகின்றது. அதேபோன்று முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும் இந்த நிலை காணப்படுகின்றது. மக்கள் மிக்க அவதானத்துடன் இருக்கவேண்டும். இவ்வாறான போர்வழிகளை நம்பி எமது ஜனநாயக உரிமையை இழந்து விட வேண்டாம் – என்றார். (த-56)

# 7 நாள்களில் 88 பேருக்கு டெங்கு நோய்

யாழ்ப்பாணம், ஜன. 8

புது வருடம் தொடங்கி நேற்று வரையான 7 நாள்களில் யாழ். குடாநாட்டில் 88 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலைத் தரப்புத் தெரிவித்தது.

கடந்த மாதங்களிலும் இதனைவிட அதிகளவானோர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தபோதும் 7 நாள்களில் மிக அதிகளவானோர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியமை இதுவே முதல்தடவை என்று கூறப்படுகிறது.

நாளாந்தம் சுமார் 12 பேர் வரை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு வந்து நேற்று மாத்திரம் 6 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

டெங்கு மிகத் தீவிரமாக உள்ளதனால் அனைவரும் அது தொடர்பில் மிக அவதானமாக இருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்துகின்றனர். (த-4)



சாவகச்சேரிப் பொதுச் சந்தையில் 6 கோடி ரூபா செலவில் புதிதாக விற்பனைப் பிரிவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அரச பாதுகாப்பு நகர அபிவிருத்தி பொதுத் திறைசேரியின் நிதிப் பங்களிப்புடன் சந்தைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இரு கட்டங்களாக இவை நிர்மாணிக்கப்படுகின்றன. (த-9)



# தங்கம்மா அப்பாக்குட்டியின் 90 ஆவது பிறந்தநாள் விழா

வலி.வடக்கு, ஜன. 8

அமரர் துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 90 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா நிகழ்வுகள் நேற்றுப் புதன்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய அன்னபூரணி மண்டபத்தில் பிறந்தநாள் அறக்கொடை நிதியத் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வியியற்துறை விரிவுரையாளர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தம்பதியினர் கலந்துகொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி கிரிசாந்தினி இராஜசூரியர், யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் பேரானந்தராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாள் அறக்கொடை நிதியத்தில் இருந்து வருடாந்தம் வழங்கப்படும் வைத்தியசாலைக்கான உதவி நிதியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவுக்கு ஒரு லட்சம் ரூபாவும், இதே போன்று மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பு நிதியாக வடமராட்சிக் கல்வி வலயத்துக்கு இரண்டு லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டது.

இதனைவிட சமூக மேம்பாட்டுக்கு உழைத்த அறிஞர்களை கௌரவிக்கும் வகையில் வழங்கப்படும் சிவத் தமிழ் விருது வைத்தியத் துறை, ஆசிரியத்துறை, தொழில் துறை, கலைஞர் என ஐந்து பேருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

(த-86)

# நெடுந்தீவு – குறிகாட்டுவான் இடையே 5 படகுச் சேவை

## வியாழன் தவிர்ந்த ஏனைய நாள்களில்



யாழ்ப்பாணம், ஜன.8

நெடுந்தீவு – குறிகாட்டுவான் இடையேயான படகுச் சேவை வியாழக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் ஐந்து தடவையாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தினசரி ஒருசேவை கூட ஒழுங்காக இடம்பெறுமா என எதிர்பார்த்த நெடுந்தீவு மக்கள் சேவை அதிகரிப்பால் ஓரளவு திருப்தியடைந்தாலும் அது தொடருமா எனவும் சந்தேகம் கொண்டுள்ளனர்.

நெடுந்தீவுக்கான அரச படகுச் சேவையில் தற்போது வடதாரகை இணைந்துள்ளது. வடதாரகை நெடுந்தீவில் இருந்து காலை 6.30 மணிக்கும், 11 மணிக்கும், பிற்பகல் 3 மணிக்கும் குறிகாட்டுவான் நோக்கிப் புறப்படும். மீண்டும் அந்தப் படகு குறிகாட்டு வானில் இருந்து காலை 8.30 மணிக்கும், பிற்பகல் 1 மணிக்கும் மாலை 5 மணிக்கும் நெடுந்தீவுக்குச் செல்லும். இந்த நேர அட்டவணைப்படி வட தாரகை நாளொன்றுக்கு மூன்று சேவைகளை வழங்கும்.

இதேவேளை, குமுதினி படகு நாளொன்றுக்கு இரண்டு தடவைகள் சேவையில் ஈடுபடும். குமுதினி நெடுந்தீவில் இருந்து காலை 7.15 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் குறிகாட்டுவான் சென்று அங்கிருந்து காலை 9.30 மணிக்கும் மாலை 4 மணிக்கும் நெடுந்தீவுக்குப் புறப்படும்.

வியாழக்கிழமைகளில் நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கப் படகு சமுத்திரதேவாவும் ஏனைய தனியார் படகுகளும் அவைகளுக்கு வழங்கப்பட்ட முறைப்படி காலை 7.15 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் சென்று காலை 9.30 மணிக்கும் மாலை 4 மணிக்கும் அங்கிருந்து மீண்டும் நெடுந்தீவுக்குத் திரும்பும்.

இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலையொட்டி நெடுந்தீவில் இருந்து காலை 9 மணிக்கே பயணிகளுக்கான படகுச் சேவை இடம்பெறும் எனவும் அறிவிக்கப்படுகிறது. (த-7)

# மன்னாரில் இதுவரை 2 தேர்தல் வன்முறை

## அரச அதிபர் தெரிவிப்பு

மன்னார், ஜன. 8

மன்னார் மாவட்டத்தில் உள்ள 70 வாக்களிப்பு நிலையங்களுக்குமான வாக்குப் பெட்டிகள் நேற்றுப் புதன்கிழமை காலை எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும், இதுவரை தேர்தல் வன்முறைகள் குறித்து 2 முறைப்பாடுகள் மட்டுமே பதிவாகியுள்ளதாகவும் மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப் பிரிய தெரிவித்தார்.



அவர்மேலும்தெரிவித்ததாவது:-

தேர்தல் பணிக்காக ஆயிரம் அரச அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். 70 வாக்களிப்பு நிலையங்களிலும் சுமார் 248 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் கிராமத்துக்குச் செல்லும் பாதை சீரின்மையினால் விசேட வானூர்தி மூலம் வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதோடு அதிகாரிகளும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். குறித்த கிராமத்தில் 569 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கிடைக்கப் பெற்ற இரண்டு முறைப்பாடுகளும் பரிசீலிக்கப்பட்டபோது அவை பாரதூரமானவை இல்லை. வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் 3 பேர் வருகை தந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

தேர்தலுக்காக இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 20 பஸ்களும், 8 தனியார் பஸ்களும், அரச திணைக்கள வாகனங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இன்று வியாழக்கிழமை மாலை தேர்தல் முடிவடைந்ததும் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு பலத்த பாதுகாப்புடன் வாக்குப் பெட்டிகள் கொண்டு வரப்பட்டு மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள 6 வாக்கு எண்ணும் நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படும்–என்றார். (த-56)

செய்திகள்



இன்று நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் யாழ். மக்கள் வாக்களிக்கவுள்ள வாக்குப் பெட்டிகள் அனைத்தும் பலத்த பாதுகாப்புடன் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் உள்ள 526 வாக்குச் சாவடிகளுக்கு நேற்றுக் காலை யாழ். மத்திய கல்லூரியில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டன. யாழ். மாவட்டத்தில் 4 லட்சத்து 50 ஆயிரத்து 132 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களின் பாதுகாப்புக்காக 5ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு இரண்டாயிரத்திற்கும் அதிகமான அரச ஊழியர்களும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்தத் தேர்தலில் யாழ். மாவட்ட தேர்தல் தொகுதி வாக்கு எண்ணும் நிலையமாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளது. இந்தக் கல்லூரியினுள் 44 வாக்கு எண்ணும் நிலையங்கள் உள்ளன. (த-21)

# அறிவிப்பையும் மீறி சமுர்த்தி உதவிகள்

## உடனடியாக தடுத்து நிறுத்தினர் தேர்தல் திணைக்கள அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஜன. 8

தேர்தல் ஆணையாளரின் அறிவித்தலையும் மீறி, சமுர்த்தி உதவிகள் வழங்கப்பட்ட நடவடிக்கைகளைத் தேர்தல் அதிகாரிகள் தடுத்து நிறுத்தியுள்ளனர். காரைநகர் மற்றும் கொடிகாமம் பிரதேசங்களில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், எந்தவொரு கொடுப்பனவும் வழங்கவேண்டாம் என்று தேர்தல்கள் ஆணையாளரினால், மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் சகல பிரதேச செயலாளர்களுக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அதனையும் மீறி, யாழ்ப்பாணத்தின் சில இடங்களில் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதற்காக மக்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும், யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியினரே மேற்படி நடவடிக்கையில் ஈடு பட்டுள்ளனர். வாழ்வாதார உதவிகள் மற்றும் மானியங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. இவை குறித்த கட்சியின் ஆதரவாளர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

காரைநகர் மற்றும் கொடிகாமத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதாகத் தேர்தல்கள் திணைக்களத்துக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றது. இதனையடுத்து தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள், சம்பவ இடத்துக்குச் சென்று அவற்றைத் தடுத்து நிறுத்தியுள்ளனர். (த-5-105)

## அனுமதியின்றி மணலை ஏற்றியோருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜன.8

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியதாக நால்வருக்கு எதிராகசாவகச்சேரிநீதிமன்றில்வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்குகள் நேற்றுத் தனித்தனி யாக விசாரணைக்குஎடுக்கப்பட்டன. எதிரிகள்குற்றத்தைஒப்புக்கொண்டதையடுத்து வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளைதலா10ஆயிரம்ரூபாவீதம் அபராதம் விதித்ததுடன்கைப்பற்றப்பட்டமணலைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார். (த-9)

## மேசன் தொழிலாளி கொலை; உதவியாளர் நேற்றுக் கைது

வவுனியாவில் கனகராயன்குளத்தில் காத்தார் சின்னக்குளத்தைச் சேர்நத சி.டெனீஸ்வரனின் கொலை தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்

கனகராயன்குளத்தில் தங்கியிருந்து சி.டெனீஸ்வரனிடம் உதவியாளராக வேலை செய்த வவுனியா சாந்தசோலையை சேர்ந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கனகராயன்குளத்தில் வீடு ஒன்றில் தங்கியிருந்து மேசன் தொழிலைச் செய்து வந்த சி.டெனீஸ்வரன் கடந்த முதலாம் திகதி சடலமாக மீட்கப்பட்டார் இவரது உடல் மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பின் அவரது மரணம் கொலையென உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து சாந்தசோலையைச் சேர்ந்த இளைஞன் சந்தேகத்தின் பெயரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றார். (த-402)

# செய்திகள்

## மன்னார் மக்களுக்கு மழை நிவாரணம்

**'ஞானம்' அறக்கட்டளை நிறுவனத்தால்**




மன்னார், ஜன.8

அண்மையில் பெய்த அடைமழைகாரணமாகஏற்பட்டவெள்ளத்தால் மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு, லைக்காவின் 'ஞானம்' அறக்கட்டளை வழங்கும் நிவாரணப் பணிகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மன்னார் – மடு உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட தம்பனைக்குளம் மற்றும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட பரிகாரிக்கண்டல், பொன்தீவுக் கண்டல், அச்சங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 1,500 குடும்பங்களுக்கு இவ்வாறு நிவாரணப் பொதிகள் அன்றையதினம் வழங்கப்பட்டன. (வ–56)

## போரால் பாதித்த மாணவிக்கு வழங்கப்பட்டது சைக்கிள்

வலி.வடக்கு, ஜன.8

புதுவருடத்தை முன்னிட்டு 'நாம் நண்பர்கள்' அமைப்பினூடாக போரால் பாதிக்கப்பட்ட மாணவி ஒருவருக்கு சைக்கிள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

குறித்த அமைப்பின் ஏற்பாட்டில் கல்வியில் 'வறுமையை ஒழிப்போம்' என்ற தொனிப் பொருளில் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக மாணவிக்கான ஸ்சக்கிள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. கிடைக்கப்பெற்ற விண்ணப்பத்தின் அடிப்படையிலேயே அந்த மாணவிக்கான சைக்கிள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளன. (வ–86)



'நாம் நண்பர்கள்' அமைப்பின் பணியாளர்கள் சைக்கிளைக் கையளித்த போது...

# வீடற்றோரின் பிரச்சினைக்கு இந்தியா மேலும் உதவ வேண்டும்

**யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் வண.கலாநிதி டி. எஸ். சொலமன் வேண்டுகோள்**

மானிப்பாய், ஜன.7

வடக்கு மாகாணம் இன்று பல்வேறு உட்கட்டுமான அபிவிருத்திகள் ஊடாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

அதேபோல வடக்கில் வீடற்றவர்களின் பிரச்சினைக்கு இந்திய அரசு மேலதிக உதவிகளை வழங்கி இந்தப் பிரச்சினைக்கு தீர்வு எட்ட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் வண. கலாநிதி டி. எஸ். சொலமன்.

வலி.மேற்கு பிரதேச சபையின் கௌரவிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இந்திய துணைத்தூதர் எஸ்.டி.மூர்த்தி கலந்து கொண்டார். இதில் கலந்துகொண்ட வண. கலாநிதி டி.எஸ். சொலமன் மேலும் கூறுகையில்;

வலி.மேற்கு பிரதேசசபைக்கு உட்பட்ட வகையில் மீளக்குடியமர்ந்த கிராமங்கள் பலவுள்ளன. அந்த மக்கள் மீளக்குடியமர்ந்தும் தொடர்ந்து சிறு கொட்டில்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து செல்ல வேண்டும் எனில் அடிப்படை வசதியின்றி – வீடு இன்றி வாழுகின்ற மக்களுக்கு அரசும் – இந்திய அரசும் இணைந்த வகையில் வீடுகள் வழங்கி உதவவேண்டும்.

இந்தத் திட்டத்தைக் குறுகிய காலத்தில் முன்னெடுத்துச் செல்ல உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் முன்வரவேண்டும்" – என்றார். (வ–50)




சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி பொறியியல்பீட மாணவர்களுக்கு நுளம்புத்தாக்கத்திலிருந்து தடுக்கும் முகமாக ஒரு தொகுதி மருந்துகள் பொறியியல்பீட வளாகவிரிவுரையாளரிடம் கடந்தஞாயிற்றுக்கிழமைகழகத் தலைவர் லயன் கதர்சன்ஊடாகக் கையளிக்கப்பட்டது. (வ–9)

# தலைமன்னாரில் சிறிய வீதி அமைக்க நிதியுதவி



வடக்கு மாகாண மீன்பிடி, போக்கு வரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பியர் அம்மன் ஆலய நிர்வாகத்தினரிடம் நிதியைக் கையளித்தபோது...

மன்னார்– தலைமன்னார் பியர் ஆலயப் பகுதி மக்களுக்கு சிறிய வீதி அமைக்க நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

வடக்குமாகாணமீன்பிடி,போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை அந்தப்பகுதி மக்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர்.

குறித்த பகுதியில் உள்ள ரயில் பாதையின் குறுக்காகச் செல்லும் ஒரு குடியிருப்புக்கு செல்லக்கூடிய பிரதான பாதை வாகனப் போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லை என்பதை ஏற்கனவே மக்கள் அமைச்சருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

இதன்பிரகாரம் அமைச்சர் தனது சொந்தப் பணத்தில் இருந்து ரூபா 50 ஆயிரமும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வினோநோகரா தலிங்கம் ஆகியோர் இணைந்து 50 ஆயிரம் ரூபாவுமாக ஒரு லட்சம் ரூபாவை பியர் அம்மன் ஆலய நிர்வாகத்தினரிடம் அண்மையில் வழங்கினர். (வ–86)



## முழுமையாகப் புனரமைக்கப்படாத வீதியால் போக்குவரத்து பாதிப்பு

கிளிநொச்சி, ஜன.8

முல்லைத்தீவு, கொக்காவில், துணுக்காய் வீதி முழுமையாகப் புனரமைக்கப்படாததால் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. இதனால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய்– தேறாங்கண்டல் ஊடாக கொக்காவில் சந்திவரைக்குமான ஏ–9 வீதியையும் வெள்ளாங்குளம்–மாங்குளம் வீதியையும் இணைக்கும் குறித்த வீதியூடான போக்கு வரத்துக்கள் எவையும் இடம்பெறுவதில்லை.

இதனால் புத்துவெட்டுவான் மருதன்குளம், பழைய முறிகண்டி, ஐயன்கன்குளம், தேறாங்கண்டல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

சுமார் 20 கிலோமீற்றர் நீளமான குறித்த வீதி 10 கிலோ மீற்றர் வரையிலேயே புனரமைக்கப்பட்டுள்ள போதும், எஞ்சியுள்ள 10 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

போக்குவரத்து வசதிகள் இல்லாததால் புத்துவெட்டுவான் கிராமத்தில் 120 குடும்பங்களும், தேறாங்கண்டல் கிராமத்தில் 449 குடும்பங்களும், ஐயன்கன்குளத்தில் 361 குடும்பங்களும் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன. (வ–55)

## மட்டக்களப்பில் வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு உலர் உணவு

மட்டக்களப்பு, ஜன.8

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் வாழ்வின் எழுச்சி திணைக்களத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப் பட்டு வருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட செட்டி பாளையம், பாலயடிவட்டை ஆகிய பகுதிகளில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான எம்.எஸ்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டு உலர் உணவுப் பொதிகளை வழங்கினார்.



ஒவ்வொன்றும் 1,500 ரூபா பெறுமதியான குறித்த உலர் உணவுப் பொதியில் அரிசி, சீனி, பால்மா, மீன் ரின், பருப்பு, மா உள்ளிட்ட பொருள்கள் அடங்கியிருந்தன. (வ–10)


தை திங்கள்
பொங்கல்
திருநாளில்
புத்தாண்டு
சிறப்பு மலர்
100
பக்கங்கள்
விலை ரூ.100
பதிவுகளுக்கு
11 ஆம்
திகதி வரையே
அவகாசம்
வடக்கின் முன்னணி எழுத்தாளர்களது சிறுகதைகள்.
தமிழகத்தின் சிறந்த சிறுகதைகள் சில.
முன்னணி ஈழத் தமிழ் கவிஞர்களின் கவிதைகள்.
செவ்வாய் தோஷத்துக்கு என்ன பரிகாரம்?
அதிர்ஷ்டம் தரும் நவரத்தினங்கள்.
பெண்ணிய கட்டுரைகள்
அரசியல் அலசல்கள்
அரசியல் போட்டிகள்
விளையாட்டு
சினிமா போட்டிகள்
தமிழின் பெருமை.
விளக்குப் பூசை விரதங்களின் மகிமை.
புத்தாண்டு பலன்கள்.
மனையடி சாஸ்திரம்.
மச்சங்களின் பலன்கள்.
கைரேகை பலன்கள்.
உலக அரசியல் அலசல்கள்
காசி ஆனந்தன் கவிதை.
அறிவியல் புதினங்கள்.
நகைச்சுவை விடயங்கள்.
இன்னும் பல
சுவாரஸிய
அம்சங்களுடன்!
சிறப்பிதழுக்கான
உங்கள் பதிவுகளுக்கு
'உதயன்' முகவர்களை
உடனே நாடுங்கள்!

# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பலம் மிகுந்த உங்கள் வாக்குகளை பக்குவமாகப் பயன்படுத்துங்கள்......

*வாக்காளர் பெருமக்களே!*

இன்றைய நாயகர்கள் நீங்களே! உங்கள் ஒவ்வொருவரின் வாக்கும் பொன்னுக்கு நிகரானது. இலங்கை நாட்டின் புதிய ஜனாதிபதி யார் என்பதனை நீங்களே நிர்ணயிக்கப் போகிறீர்கள். அதற்குக் கொடுத்து வைத்தவர்கள் என்றும் கருதலாம்.

நாட்டின் ஆட்சித் தலைமைத்துவத்துக்கு மிகப் பொருத்தமானவர், இருவரில் எவர் என்பதனை நிர்ணயிக்கும் சக்தி உங்களிடமே உள்ளது. உங்கள் ஒவ்வொருவரினதும் வாக்கே - கூட்டு வாக்குகளே - போட்டியாளர்களின் அரசியல் தலைவிதியை நிச்சயிக்கப் போகின்றன; நிர்ணயிக்கப் போகின்றன.

பிரதான வேட்பாளர்களில் ஒருவருக்கு வாக்களிப்பதற்கான வசதியும் வாய்ப்பும், இன்று உங்களுக்குக் கிடைத்துள்ளது. அந்த அரிய வாய்ப்பைத் தவறவிடாதீர்கள். இன்றைய தேர்தல் களத்தில் வாக்காளர்கள் வழங்கும் தீர்ப்பு, நாட்டின் அரச தலைமைத்துவம் யாருக்கு என்பதனை முடிவு செய்யப் போகிறது. அதனை உங்கள் மனதில் ஊன்றிப் பதித்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்குக் குறித்து ஒதுக்கப்பட்ட வாக்குச் சாவடிக்குக் காலையிலேயே சென்று வரிசையில் இடம்பிடியுங்கள்; சோர்ந்து கொள்ளுங்கள்.

வாக்களிப்பதற்கு மாலை நான்கு மணி வரை கால அவகாசம் உண்டு தானே என்று உள்ளூர நினைத்து பிந்திச் செல்வதற்கு முனையாதீர்கள். உங்களுக்குரிய வாக்கு அட்டை கிடைக்காவிடினும், இடாப்பில் பெயர் இருப்பின் நீங்கள் வாக்களிக்க வசதி உண்டு. தேசிய அடையாள அட்டை கைவசம் இல்லையெனினும், ஓய்வூதிய அட்டை, முதியோர் அடையாள அட்டை, தேர்தல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாளஅட்டை என்பவற்றில் ஒன்றைக் காண்பித்து வாக்களிக்கலாம். அதற்கு வசதி செய்யப்படும் என்று பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை - தேர்தலில் வாக்களிப்பதற்கு அரச உத்தியோகத்தர்கள் மற்றும் தனியார் துறைப் பணியாளர்களுக்கு, வாக்குச் சாவடிக்குச் சென்று, வாக்களித்துவிட்டுத் திரும்பி வருவதற்கு வசதி செய்யப்படும் என்று தேர்தல் திணைக்கள உயர் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். அந்த வசதியை வாக்காளர்கள் தவறாது பயன்படுத்தித் தமது வாக்குரிமையை நிலை நாட்டலாம்.

வடக்கு - கிழக்கு வாழ் வாக்காளர் பெருமக்களின் வாக்குகளே, பிரதான வேட்பாளர்கள் இருவரில் வெற்றி எவருக்கு என்பதனை நிர்ணயிக்கும் நிலை உயர்ந்து, எழுந்து நிற்கிறது.


வாக்காளர் பெருமக்களாகிய நீங்களே இன்றைய நாளின் நாயகர்கள் என்று பெருமை கொள்ளுங்கள். தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களில் ஒருவர் மட்டுமே இந்த நாட்டின் அதிஉயர் ஆட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்படுவார் - உயர்ந்து நிற்பார். அவரை உருவாக்கிய முழுப்பொறுப்பும், அதனூடான பெருமையும் வாக்காளர்களாகிய உங்களையே வந்து சேரும்.

உங்கள் ஒவ்வொருவரது வாக்கின் மாண்பினையும் மகிமையினையும் கருத்தில் கொண்டு அதனால் விளையவல்ல அரசியல், ஆட்சியியல் மாற்றங்கள் -

தமிழ் மக்களான எமக்குச் சேரவேண்டிய அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகள் கிடைக்க வழி செய்யும் என்று நம்பிக்கையுடன் இன்றுள்ள பணியை மனதார்ந்து இயற்றுவோமாக.

நன்றே செய்வோம், அதனை இன்றே செய்வோம் என்பதனைத் தாரக மந்திரமாக மனதில் இருத்தி, உங்களுடைய பெறுமதிமிக்க வாக்குகளைப் பயன்படுத்துங்கள்.

தீதும் நன்றும் பிறர் தர வாரா என்ற கனியன் பூங்குன்றனாரின் தத்துவ வரியை, இன்றைய தேர்தலில் வாக்களிக்கும் எமது மக்கள் மனதில் கொண்டு தமது கடமையை ஆற்றட்டும். நன்றே விளைய விழைவோம்.



# நாடாளுமன்ற ஜனநாயகமே இலங்கைக்கு வேண்டும்

சேரலாதன்

ஜனநாயக நாடொன்றில் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட நாடாளுமன்றமே உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்பட வேண்டிய ஒன்றாகும். உலகின் அநேக நாடுகளிலும் இந்த நிலைதான் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியைக் கொண்டுள்ள அமெரிக்காவில்கூட நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெற்ற பின்னரே அந்த நாட்டின் ஜனாதிபதியால் தமது திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியுமென்பது குறிப்பிடத்தக்கது. இதனால் அந்த நாட்டின் ஜனாதிபதியும் நாடாளுமன்றத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிலை காணப்படுகின்றது.

ஆனால் ஜனநாயக நாடெனக் கூறிக்கொள்ளும் எமது நாட்டில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரங்கள் நாடாளுமன்றத்தை இரண்டாம் நிலைக்குத் தள்ளிவிட்டதைக் காண்கின்றோம். ஜனாதிபதியின் விருப்பத்துக்கு ஏற்ற வகையில் தாளம் போடக்கூடிய ஒரு நாடாளுமன்றத்தையே இன்று நாம் காணக்கூடியதாகவுள்ளது.

இலங்கையில் 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இடம்பெற்றது. இதில் 22 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக 196 உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 29 பேர் நியமன அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். ஆக மொத்தமாக 225 உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர்.

> **"1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சி அமோக வெற்றி பெற்றதால் ஏற்பட்ட மமதையின் காரணமாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் சிந்தனையில் உதித்ததுதான் இந்த நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறையாகும். அவர் அன்று விதைத்த அந்த நச்சு விதைதான் நாடாளுமன்றத்தின் கௌரவத்துக்கு கேடாக அமைந்தது.**

நாட்டின் அரசமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டுமாயின் மொத்தமுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் அதற்குத் தமது ஆதரவைத் தெரிவிக்க வேண்டும். ஒரு சர்வாதிகாரிக்கு உரிய வகையில் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட தற்போதைய ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ தலைமை தாங்கும் கூட்டணிக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான உறுப்பினர்கள் உள்ளதால் அவர் தமது விருப்பம்போன்று அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றார். அவர் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அரசமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 18ஆவது திருத்தமே உதவியுள்ளது.

சுருக்கமாகக் கூறினால் இன்றைய இலங்கை நாடாளுமன்றம், ஜனாதிபதியின் ஆணைகளை நிறைவேற்றும் ஓர் இடமாகவே காணப்படுகின்றது. பிரதம நீதியரசர் பதவியிலிருந்த திருமதி ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமையை இதற்கொரு உதாரணமாகக் கூற முடியும்.

இலங்கைத் திருநாட்டில் ஜனநாயகம் மீண்டும் மலரவேண்டுமாயின் நிறைவேற்று அதிகாரங்கள் ஒழிக்கப்பட்டு நாடாளுமன்றம் பொறுப்புக் கூறவேண்டிய, வலிமையுள்ளதொரு அமைப்பாக மாற்றப்பட வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்கள் மத்தியில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் அமைச்சர்களும் தற்போது ஜனாதிபதியின் முன்னால் மண்டியிட்டு நிற்கும் நிலைமாறி தமது கௌரவத்தை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி அமோக வெற்றி பெற்றதால் ஏற்பட்ட மமதையின் காரணமாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் சிந்தனையில் உதித்ததுதான் இந்த நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறையாகும். அவர் அன்று விதைத்த அந்த நச்சு விதைதான் நாடாளுமன்றத்தின் கௌரவத்துக்கு கேடாக அமைந்தது. அவருக்குப் பின் வந்தவர்களும் பதவிச் சுகத்தில் திளைத்தார்களே தவிர இந்தப் பதவியினால் நாட்டுக்கு ஏற்பட்ட கேட்டினை அகற்றுவதற்கு முயலவில்லை.

மக்கள் நிறைவேற்று அதிகாரங் களின் கேடுகள் தொடர்பாகத் தற்போது உணர்ந்து விட்டார்கள். நிறைவேற்று அதிகாரங்களைத் தன்னகத்தே குவித்து வைத்திருக்கும் தனியொரு நபரும் அவரைச் சார்ந்துள்ளவர்களும் இந்த முழு நாட்டையுமே தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் ஊழல், மோசடிகள், அதிகார துஷ்பிரயோகம் ஆகியவை எல்லைமீறிச் சென்றுள்ளதையும், சாதாரண மக்களின் பொருளாதார நிலை அதள பாதாளத்துக்குச் சென்றுள்ளதையும் மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

எனவே இவற்றுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழக் கூடியதொரு நிலையும் உருவாகலாம்.

ஆகவே ஜனாதிபதித் தேர்தலில் எவர் வென்றாலும் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட சர்வாதிகார ஜனாதிபதி முறையை ஒழித்து நாடாளுமன்றத்துக்குச் சகல அதிகாரங்களும் கிடைக்கச் செய்யும் வகையில் மாற்றங்களை ஏற்படுத்துவதே இந்த நாட்டின் ஜனநாயகம் செத்துவிடாமல் உயிர் பெறுவதற்கு உதவுமென்பதில் மாறுபட்ட கருத்துக்கே இடமில்லை.

# தேர்தல் முடிவுக்காக காத்திருக்கும் இந்திய அரசு

'த டிப்ளோமற்' ஊடகத்திலிருந்து
தமிழாக்கம் நித்தியபாரதி

இலங்கையில் இடம்பெறவுள்ள தேர்தலின் பெறுபேறு எவ்வாறு அமையப்போகிறது என்பது தொடர்பாக இலங்கைத் தீவில் தமது செல்வாக்கை அதிகரித்து வரும் இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாட்டு அரசுகளும் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ இடம்பெறவுள்ள தேர்தலில் தனது வாழ்நாளில் இதுவரை காலமும் சந்தித்திராத மிகவும் இறுக்கமான அரசியல் களத்தை எதிர்கொள்ளவுள்ளார்.

**உள்நாட்டுப் போர்**

தமிழ்ப் புலிகளுக்கு எதிராக 30 ஆண்டுகளாகத் தொடரப்பட்ட உள்நாட்டுப் போரை 2009இல் முடிவுக்குக் கொண்டுவந்ததன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் பிரபல்யம் ஈட்டிக்கொண்ட மஹிந்தராஜபக்ஷ,அவரது நெருங்கிய சகபாடியான மைத்திரிபால சிறிசேன ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகுவதாக அறிவிப்பதற்கு முன்னர் தேர்தலில் வெற்றி பெறுவார் என எதிர் பார்க்கப்பட்டது.

ஆனால் மைத்திரிபால சிறிசேன ஆளுங்கட்சியிலிருந்து விலகி எதிரணியின் பொது வேட்பாளராக நிறுத்தப் பட்ட பின்னர் தற்போது மஹிந்த ராஜபக்ஷ மிகவும் இறுக்கமான ஒரு தேர்தல் போட்டியை எதிர்கொள்ள வேண்டிய நிலையிலுள்ளார்.

தற்போது இடம்பெறவுள்ள தேர்தலின் பெறுபேறு எவ்வாறு அமையப்போகிறது என்பது தொடர்பாக இலங்கைத் தீவில் தமது செல்வாக்கை அதிகரித்து வரும் இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாட்டு அரசுகளும் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

இலங்கை மீதான இந்தியாவின் மூலோபாய நலன்கள் முதன்மையான நிலையிலுள்ள அதே வேளையில், இவ்விரு நாடுகளுக்கும் பல நூற்றாண்டுகளாக கலாசார மற்றும் மதம் சார் உறவு நிலையில் மிகவும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது.

மறுபுறத்தே, அண்மைக்காலமாக இலங்கைத்தீவில் மூலோபாய ரீதியாகவும் வர்த்தக ரீதியாகவும் சீனா செல்வாக்குச் செலுத்தி வருகிறது. ராஜபக்ஷவின் சீன ஆதரவுக் கோட்பாட்டுக்கு சீனா தனது நன்றியை நவின்றுள்ளது.

**இறுக்கமான போட்டி**

சிறிசேனவுக்கும் ராஜபக்ஷவுக்கும் இடையிலான போட்டி நிலை மேலும் இறுக்கமடைந்துள்ளதானது நிச்சயமாக சீனாவுக்கு வருத்தத்தையே ஏற்படுத்தும். இலங்கையின் பல்வேறு துறைகளில் சீனா தனது பிரசன்னத்தை அதிகரித்து வருகின்ற நிலையில், முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்க மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஆதரவுடன் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேன, சீனா ஆதரவுக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளமாட்டார். 2005 –2012 காலப்பகுதியில் இலங்கைக்கு சீனா 4.8 பில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது. இதில் இரண்டு சதவீத நிதி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மீதி 98 சதவீத நிதியும் கடனாகவே வழங்கப்பட்டுள்ளது. இதனுடன் ஒப்பிடும்போது, இந்தியாவால் வழங்கப்பட்டுள்ள 1.6 பில்லியன் டொலர்களில் மூன்றில் ஒரு பகுதி மானியமாகவே வழங்கப்பட்டுள்ளது.

நான்காம் கட்ட ஈழப்போரில் இடம்பெற்ற பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை மீது மேற்குலக நாடுகள் குற்றஞ் சுமத்தியுள்ளதுடன், எந்தவித உதவிகளையும் இலங்கைக்கு வழங்கவில்லை எனவும், அதனால் இலங்கை முற்றிலும் சீனாவைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளதாகவும் மஹிந்தராஜபக்ஷ ஆதரவாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த விவாதமானது முற்றிலும் உண்மையானதல்ல. போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தான் தனித்துவிடப்பட்டு விடுவேனோ என்கின்ற அச்சத் தில் மூழ்கியிருந்த கொழும்பின் விவகாரத்தில் சீனா மிகவும் தந்திரமாகச் செயலாற்றி கடனுதவிகளை வழங்கியுள்ளது.

சீனாவால் வழங்கப்பட்டுள்ள மிகப்பெரிய கடன்தொகையை ராஜபக்ஷ அரசு மீளச் செலுத்த முடியாத நிலை ஏற்படலாம் என்பதால் மிகப்பெரிய திட்டங்களில் சீனாவையும் பங்காளியாக்குவதற்கான வாய்ப்பை இலங்கை வழங்கியுள்ளதாக விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

**சீன அதிபரின் பயணம்**

2014 செப்ரெம்பர் மாதத்தில் சீன அதிபர் இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொண்ட போது சீன நிறுவனம் ஒன்றுக்கு ஏழு துறைமுக கொள்கலன்களில் நான்கை 35 ஆண்டுகாலக் குத்தகைக்கு வழங்குவது உட்பட வழங்கல்–நடவடிக்கை–கைமாற்று உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டது.

அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தியை மேற்கொள்ளுமாறு ராஜபக்ஷ அரசு இந்தியாவிடம் கேட்டபோது அதில் இந்தியா தனது ஆர்வத்தைக் காண்பிக்காத போதிலும், கடலிலிருந்து 233 ஹெக்ரேயர் பரப்பளவில் 1.4 பில்லியன் டொலரில் மிகப்பெரிய கொழும்பு துறைமுக நகரத் திட்டம் மேற் கொள்ளப்படுவது தொடர்பாக இந்தியா உண்மையில் கவலைப்பட்டது.

**குத்தகைக்கு நிலம்**

இதில் சீனாவுக்கு 99 ஆண்டு கால குத்தகையில் 88 ஹெக்ரேயர் நிலப்பரப்பு வழங்கப்பட்டுள்ளது. பிறிதொரு 20 ஹெக்ரேயர் நிலப்பரப்பு சீனாவுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. பிறிதொரு வகையில் கூறினால், இந்தத் திட்டத்தின் பங்காளியாக சீனா அல்லது சீன நிறுவனம் இருக்கும் என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கதே.

இலங்கையின் தலைநகரில் கொழும்புத் துறைமுகத்தின் தெற்கு கொள்கலன் நிலையம் சீன நிறுவனம் ஒன்றால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த நிறுவனம் கட்டுமான–செயற்பாட்டு–கைமாற்றுத் திட்டத்தின் கீழ் 35 ஆண்டுகால உரிமத்தைப் பெற்றுள்ளது. கொழும்பில் தரித்து நின்ற சீன நீர்மூழ்கிக்கப்பல் இந்தக் கொள்கலன் நிலையத்திலேயே தரித்து நின்றது. இதே போன்று கொழும்பு பிரதான துறைமுகத்தைப் பயன்படுத்தாது சீனாவின் கடற் கப்பலும் முன்னர் தெற்கு கொள்கலன் நிலையத்திலேயே தரித்து நின்றது.

சீனாவுடன் தொடர்புகள் அனைத்தும் வர்த்தகத்தை அடிப்படையாக மட்டுமே கொண்டுள்ளதாகவும் பூகோள–மூலோபாய முக்கியத்துவத்தை நோக்காகக் கொண்டதல்ல எனக் கூறி இந்தியாவுக்கு உத்தரவாதம் வழங்குவதற்கான முயற்சிகளை இலங்கை அரசு மேற்கொண்டது.

ஆனால் இலங்கையின் இந்த அறிவிப்பை இந்தியர்கள் எவரும் நம்பவில்லை. கொழும்புத் துறைமுகத்தில் சீனாவின் பிரசன்னம் அதிகரிப்பது தொடர்பாக இந்தியா ஏன் கவலை கொள்ள வேண்டும்? கொழும்புத்துறைமுகத்தில் இடம்பெறும் வர்த்தக சார் நடவடிக்கைகளின் குறைந்தது 70 சதவீதமானவை இந்தியாவுடன் தொடர்புபட்டதாகும்.

எதுஎவ்வாறிருப்பினும்,சீனாவின் 21ம் நூற்றாண்டு புதிய கரையோரப் பட்டுப்பாதைத் திட்டம் மற்றும் இதனைக் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தியுடன் தொடர்புபடுத்துதல் போன்றவை இந்தியாவைக் கவலை கொள்ள வைத்துள்ளது.

செப்ரெம்பர் 2014இல் சீன அதிபர் இலங்கைக்கான தனது சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட போது, மாக்கடல் கண்காணிப்பு, கடல் மற்றும் கரையோர வளய முகாமைத்துவம், கரையோரப் பாதுகாப்பு, தேடுதல் மற்றும் மீட்புநடவடிக்கைகள், கடல்சார் பாதுகாப்பு போன்றவற்றைக் கருத்திற்கொண்டு சீனாவும் இலங்கையும் இணைந்து கரையோர மற்றும் கடல்சார் ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழு ஒன்றை அமைக்கவுள்ளதாக இவ்விரு நாடுகளும் அறிவித்தன.

இதன்மூலம் சீனா, இந்திய மாக்கடலில் சுதந்திரமாக தனது செல்வாக்கை விரிவுபடுத்தும் எனவும், இதன்மூலம் சீனா தென்னிந்தியாவில் தலையீடு செய்வதற்கான நிலை உருவாகலாம் எனவும் இந்திய வல்லுனர்கள் கவலை கொள்கின்றனர்.

சீனாவின் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பாக இந்தியாவின் நரேந்திர மோடி தலைமையிலான அரசு மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படும் என்பது நிச்சயமாகும்.

கடந்த பத்தாண்டுகளாக இலங்கைக்கும்– இந்தியாவுக்கும் இடையிலானமூலோபாய இடைவெளி அதிகரித்துள்ள நிலையில் இதனைச் சரிசெய்வதற்கு இந்தியா பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

**உறவில் விரிசல்**

இந்தியாவின் முன்னைய அரசு உள்நாட்டு அரசியல் அழுத்தம் மற்றும் இலங்கை மீதான இந்தியாவின் கோட்பாடு ரீதியான குழப்பம் போன்றவற்றால் இலங்கையுடனான உறவில் விரிசலை ஏற்படுத்தியிருந்தது. இந்த இடைவெளியைச் சீனா பயன்படுத்தி இலங்கையில் தனது காலை அகலப் பரப்பியுள்ளது.

இலங்கையில் இறுதிக்கட்ட உள்நாட்டு போர் இடம்பெற்றபோது இந்தியா தனது இராணுவ உதவிகளை வழங்க மறுத்த போது சீனா அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இலங்கைக்கு இராணுவம் சார் வளங்களை வழங்கியது. இலங்கை இராணுவம் மற்றும் விமானப் படையிடம் உள்ள கனரக ஆயுதங்களில் 60 சதவீதமானவை சீனாவால் வழங்கப்பட்டவை.

அண்மையில் சீனா, இலங்கைக்கு போர் விமானங்கள் மற்றும் போர்க் கப்பல்களை வழங்கியுள்ளது.

**காத்திருக்கும் இந்தியா**

இதன்மூலம் பாதுகாப்புத் துறையில் சீனா தனது செல் வாக்கை நிலை நிறுத்தியுள்ளது. ஆண்டு தோறும் இலங்கையின் முப்படைகளையும் சேர்ந்த 800 அதிகாரிகள் இந்தியாவின் இராணுவத் தளங்களில் பயிற்சிகளைப் பெறுகின்ற போதிலும், இலங்கை தற் போது சீனாவின் இராணுவ வளங்களில் தங்கியுள்ளமை இந்தியாவை அதிருப்தியடையச் செய்துள்ளது.

எதுஎவ்வாறிருப்பினும், ஜனவரி 08ஆம் திகதி (இன்று) இடம்பெறவுள்ள தேர்தலில் யார் இலங்கையின் அதிபராக வெற்றி பெறப் போகிறார் என்பதைப் பொறுத்து இலங்கை மீதான தனது வெளியுறவுக் கோட்பாட்டை மாற்றியமைக்க முடியும் என இந்தியா காத்திருக்கிறது.



# கருத்து

## வாசகர் திருமுகம்

### மாற்றத்துக்காக ஏங்கி நிற்கின்றோம்

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய தமிழ் மக்களே! நீண்ட காலமாக சிறையில் சின்னா பின்னமாகத் தவிக்கும் உங்கள் பிள்ளைகளின் வணக்கங்கள்.

நீண்ட காலமாக விடுதலையை எதிர்பார்த்து ஏமாந்து ஏங்கி ஏங்கி எதிர்காலத்தை பல ஆண்டுகளாகத் தொலைத்துவிட்ட எங்கள் அன்பு வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றோம்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஏமாற்றப்பட்ட இனத்தின் குமுறலாக எழுந்து ஆயுதம் ஏந்தி நின்றோம் அன்று. அதன் விளைவாக சித்திரவதைகளைச் சுமந்து சுமந்து துன்பத்துடன் விடியலை எதிர்பார்த்து காத்து நிற்கும் எங்கள் விருப்பத்தை உங்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

பொது மன்னிப்பு வழங்குவார்கள் என்று நீண்ட காலமாக நாங்கள் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து துன்பத்துடன் சிறைப் பட்டுக்கிடக்கின்றோம்.

நாளை ஒரு மாற்றத்தை எதிர் பார்க்கின்றோம். இந்த மாற்றம் எங்களை விடுதலை செய்யும் என்று நம்புகின்றோம். எனவே எங்கள் உயிரிலும் மேலான உங்களிடம் கடந்த காலத்தை நினைவுபடுத்துகின்றோம்.

நாங்கள் படும் சித்திரவதைகளை ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்த்து நீங்கள் முடிவு எடுங்கள். எங்கள் வாழ்க்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்துங்கள். நாங்கள் மாற்றத்தை விரும்பி நிற்கின்றோம்.

கண்ணீரும் செந்நீரும் சிந்திய உங்கள் வாழ்வு செழிக்கும் என்ற உண்மையான நம்பிக்கையோடு சித்திரவதைப்பட்டும் வதைபட்டும் குறுகிக் கிடக்கும் எங்களுக்கு சின்ன நிம்மதி கிடைத்துள்ளது. மாற்றத்தை ஏற்படுத்தும் எமது அன்புக்குரிய மக்களே! எல்லோரையும் ஒன்று சேருங்கள். எங்கள் கண்களில் வடியும் கண்ணீரைத் துடைக்க உங்கள் மனச்சாட்சியை தட்டிப் பார்த்து உங்கள் கைகளை நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கிறோம்.


*சிறையிலிருந்து, முன்னாள் போராளிகள்.*

### ஓசை அடங்கி விடுமா?

குருநகர்ப் பகுதிக்கு இரவு நேரங்களில் வருகை தரும் ஐஸ்கிறீம் விற்பனை வாகனங்களிலிருந்து அதிக சத்தத்துடன் ஒலிபரப்பாகும் பாடல்கள் காரணமாக இந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த வாகனங்களில் இருந்து ஒலி பரப்பப்படும் மிகை ஒலிச் சத்தம் காரணமாக வீடுகள் மற்றும் மாலை நேர வகுப்புகளில் பங்கேற்கும் மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கையை மேற்கொள்ள முடியாமல் சிரமப்படுகிறார்கள். மேலும், வீடுகளில் உள்ள குடியிருப்பாளர்களும் இந்த மிகை ஒலி காரணமாக, தமக்கிடையே உரையாடல்களை சுமுகமாக மேற்கொள்ள முடியாமலுள்ளதாகக் கவலை தெரிவித்தனர். வியாபார நோக்குடன் வருகை தரும் இந்த வாகன விற்பனையாளர்கள் தமது வாகனங்களில் மிகை ஒலிகளை எழுப்பாமல் அமைதியான முறையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வது நல்லது எனவும், இத்தகைய மிகை ஒலி எழுப்பி வியாபார நடவடிக்கைகளை மேற் கொள்ளும் ஐஸ்கிறீம் விற்பனையாளர்கள் தொடர்பில் இங்குள்ள பொது அமைப்புக்கள் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் குருநகர்ப் பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

*நலன் விரும்பி, குருநகர்.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## சந்தர்ப்பத்தை தவற விடாதீர்

ஒவ்வொருவரதும் தனிப்பட்ட வாழ்வில் திருமணம் என்பது மறக்க முடியாத முக்கியமான நிகழ்வு. அது எந்தளவு தூரத்துக்கு முக்கியமானதோ அதே போன்று, நாம் வாழப் போகும் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் இந்தத் தேர்தலும் முக்கியமானதொன்றே.

அடுத்த 7 ஆண்டுகளுக்கு இதே ஜனாதிபதியின் கீழ் ஆட்சியைத் தொடரப் போகின்றோமா? அல்லது புதிய ஜனாதிபதியின் கீழ் மாற்றியமைக்கப்பட்ட அரசமைப்பின் கீழ் வாழப் போகின்றோமா ? என்ற தீர்மானத்துக்கு இன்று விடை தேடும் நாள். ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழர்கள் வாக்களிப்பதில் அதிகளவு அக்கறை காட்டுவதில்லை. அதனால்தானோ என்னவோ இதுவரையில் பதவிக்கு வந்த ஜனாதிபதிகளும் தமிழர்கள் மீது அதிகளவு அக்கறை காட்டவில்லை. அதன் விளைவுகளைத் தான் இதுவரையில் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஒவ்வொரு தனிமனிதனின் வாக்கும்தான் நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கப் போகின்றது. நான் வாக்களிக்காவிட்டால் என்ன என்று எண்ணி வாக்களிக்காமல் இருந்து விட்டு, பின்னர் அந்த ஆட்சியைக் குறை சொல்லிப் பலனில்லை. தேர்தலில் வெற்றி பெறுபவரை தீர்மானிக்கின்ற சக்தி ஒவ்வொரு வாக்காளருக்கும் இருக்கின்றது. அதை வாக்காளன் உணராத வரையில், நாட்டில் நல்ல ஆட்சி மலராது.

சிங்கப்பூரில் தேர்தலில் வாக்களிப்பது கட்டாயமானது. தேர்தலில் வாக்களிக்கத் தவறுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அதனால்தான் அந்த நாட்டில் ஜனநாயகம் மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. நாமும் எமது நாட்டைக் குட்டிச் சிங்கப்பூராக்க வேண்டும் என்று கற்பனை உலகில் மிதந்து கொண்டிருக்கின்றோம்.

கற்பனையில் அந்த நாட்டைப் போல் வர வேண்டும் என்று நினைக்கும் நாம், அந்த நாட்டில் ஜனநாயகம் உச்ச அளவில் இருப்பதற்கு அடிப்படையான, வாக்குரிமையின் கட்டாயத் தன்மையைப் பற்றி சிந்திப்பதில்லை.

விரும்பினால் வாக்களிக்கலாம். விருப்பமில்லாவிட்டால் வீட்டில் இருந்து விடலாம். இதுதான் எங்கள் நிலைப்பாடு. அதனால்தான் நாட்டின் தலைவிதியை யாரோ தீர்மானித்து விடுகின்றனர். அதன் பின்னர், அணில் ஏற விட்ட நாய் போன்று நாம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

இந்திய சின்னத் திரை தொடர்களிலும், கிரிக்கெட் ஆட்டங்களிலும், அலுவலக வேலைகளிலும், ஏன் சோம்பேறித் தனத்திலும் இன்று திளைத்திருந்தால் – வாக்களிப்பை புறக்கணித்திருந்தால் – இன்னமும் 7 ஆண்டுகளுக்கு எமக்கு விடிவில்லை. எனவே மாற்றங்கள் செய்ய நினைத்தால், அதை இன்றே செய்திடுங்கள்.

கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை, சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதைத் தவறவிட்டு விட்டு இன்னொரு சந்தர்ப்பத்துக்காகப் பார்த்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

பத்தி எழுத்து

# சிறுவர்



## கவி மேதை பாரதியார்



ஒரு நாள் சுப்பிரமணியனின் நண்பன் ஒருவன் எட்டயபுரம் ராஜாவின் அரண்மனைக்கு சுப்பிரமணியனை அழைத்துக் கொண்டு போனான். ஏதாவது ஒரு குறளின் முதல் வார்த்தையையோ அல்லது ஒரு வெண்பாவின் ஒரு பகுதியையோ சொன்னால், சுப்ரமணியன் உடனடியாக எஞ்சிய அடிகளைச் சொன்னான். சுப்ரமணியன் நகைச்சுவையாகப் பேசுவதையும் கவிதை சொல்வதையும் எட்டயபுரம் ராஜா ரசித்தார். 'இவன் ஒரு குழந்தை மேதை. பெரிய கவிஞன் ஆவதற்கான அறிவு, உங்கள் மகனிடம் இருக்கு' என்று சுப்பிரமணியனின் அப்பாவிடம் சொன்னார் எட்டயபுரம் ராஜா.

படிப்பில் சுப்பிரமணியன் பின்தங்கியே இருந்தான். இதனால் வருத்தப்பட்ட அவனுடைய அப்பா, எட்டயபுரம் ராஜா வைப் பார்த்து அரசவைப் பணியில் சுப்பிரமணியனைச் சேர்த்துவிட்டார். ராஜாவின் நண்பர்கள் சிலருக்கு சுப்பிரமணியனைப் பிடிக்கவில்லை. அவர்களில் ஒருத்தர், 'நீங்கள் பெரிய புத்திசாலி போலத் தெரிகிறது.. ஆனால் பரீட்சையில் தோற்றுப் போய் இருக்கிறீர்களே' என்று மறைமுகமாகக் கிண்டல் செய்ய ஆரம்பித்தார். இதனால் இரண்டு பேருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. கல்வியைப் பற்றி ஒரு விவாதம் நடத்துவது என முடிவாயிற்று. முதலில் எதிர்த்தரப்பு ஆள் பேசினார். அடுத்ததாகப் பேச ஆரம்பித்த சுப்பிரமணியன், எல்லோரும் ஆச்சரியப்படும் மாதிரி அற்புதமாகப் பேசினார். அவருடைய வாதம் எதிராளியையும் வசப்படுத்தியது. அந்த விவாதம் முடிந்ததும், ஒரு முதிர்ந்த பண்டிதர் எழுந்து சுப்பிரமணியனிடம் போனார் 'நீ உன் வயதை மீறிய புத்திசாலித்தனத்தோடு இருக்கிறாய். அதனால், நீ ஒரு பாரதி (அனைத்தும் அறிந்த பண்டிதர்)' என்று பட்டம் சூட்டினார். அதன் பின்னர் சுப்பிரமணியனை, எல்லோரும் பாரதி என்று கூப்பிட ஆரம்பித்தார்கள். உலகம் போற்றும் கவிஞராக மாறிய அவர், சுப்ரமணிய பாரதியாராக ஜொலித்தார்.



ப.மதுசனா
சாவகச்சேரி இந்துக்
கல்லூரி

## உழைப்பு மட்டும் போதுமா




விவசாயம் செய்வதற்குத் தண்ணீர் வேண்டும் என்பதால், கிணறு தோண்ட ஆரம்பித்தார் வரதன். முதலில் ஒரு கிணறு தோண்டினார், தண்ணீர் இல்லை. இரண்டாவது கிணறு தோண்டினார்.. அதி லும் தண்ணீர் இல்லை... இப்படிப் பத்துக் கிணறு தோண்டிவிட்டார். ஆனாலும் தண்ணீர் கிடைக்கவே இல்லை. வருத்தத்தில் உட்கார்ந்திருந்தார் வரதன். அங்கே வந்த வரதனின் நண்பர், வரதனிடம் விடயத்தைக் கேட்டறிந்தார். 'இங்கே பாரப்பா... எங்கள் ஊருக்கு ஒரு மகான் வந்திருக்கிறார். அவரைப் போய்ப் பார்... ஏதாவது நல்லது நடக்கும்' என்று வரதனுக்கு ஆறுதல் கூறினார் நண்பர். உடனே மகானிடம் சென்றார் வரதன். தான் கிணறு தோண்டிய கதையைச் சொன்னார். 'பத்து அடிக்கு பத்து கிணறுகளைத் தோண்டியிருக்கிறாய்... அதுக்குப் பதிலாக ஒரே கிணற்றை 100 அடி தோண்டியிருந்தால் தண்ணீர் கிடைச்சிருக்கும். எந்த விடயத்துக்கும் வெறும் உழைப்பு மட்டுமே போதாது... உழைப்போடு புத்திசாலித்தனமும் வேணும். அப்போதான் அந்தக் காரியம் நினைக்கிற மாதிரி நடக்கும்' என்றார் மகான். வரதனுக்குத் தனது தவறு புரிந்தது. மகானுக்கு நன்றி கூறிவிட்டு வீடு திரும்பினார். மகான் சொன்னபடியே நடந்தது. ஒரே கிணற்றில் 50 அடிகளைத் தோண்டும் போதே தண்ணீர் வந்துவிட்டது! மகிழ்ச்சியோடு விவசாயம் செய்து, நிம்மதியாக வாழ்ந்தார் வரதன்.


## குத்தி வீழ்த்தும் உயிரி

பல வண்ணங்களில் கண்ணைக் கவரும் பீக்காக் மாண்டிஸ் ஷ்ரிம்ப் என்ற இந்த வகை இறால், இரையை வித்தியாசமாக வீழ்த்தும். இரை அருகில் வந்ததும் கால்களால் குத்த ஆரம்பிக்கும். அதாவது நாம் ஒரு முறை கண் சிமிட்டும் நேரத்துக்குள் 50 தடவைகள் குத்தி விடும் அளவுக்கு வேகமாகச் செயற்படும் ஆற்றல் பெற்றது அது. இரை சுதாரிப்பதற்குள் ஓடுகளை இழந்து, உயிரை விட்டுவிடும். கடினமான கண்ணாடியைக்கூட இப்படிக் குத்தியே இந்த இறாலால் உடைத்துவிட முடியும்.





சி. பிருத்வி
முன்பள்ளி கொக்குவில்



பி. சாருஜன்
சாவகச்சேரி
இந்துக் கல்லூரி

செல்லா சினிமா யாழ்ப்பாணம்



தைப்பொங்கல்
வெளியீடு AC / DTS
14 முதல்
டைரக்டர் சங்கரின் பிரமாண்டமான தயாரிப்பில்
சியான் விக்ரம், எமிஜாக்சன் நடிப்பில்
காட்சி:
10.30, 2.30, 6.30, 9.30
ஐ

ANGEL INTERNATIONAL SCHOOL - MANIPAY
Engineering Drawing and AutoCAD
கற்கைநெறி

காலப்பகுதி: கிழமை நாள்களில் 4.00 PM தொடக்கம் 6.00 PM வரை 15 நாள்கள்



இக் கற்கைநெறியானது படவரைஞர்கள், நில அளவையாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கணிய அளவையாளர்கள் (QS), பொறியியற்பீட மாணவர்கள், மற்றும் உயர்தரத்தில் தொழில் நுட்ப பாடத்தை தெரிவுசெய்த, தெரிவு செய்யவுள்ள மாணவர்களை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 30 மணிநேர கற்கை நெறியாகும்.

Course Contents: Introduction to Engineering Drawing, AutoCAD Fundamentals, Coordinate systems, User coordinate system, Workspace setting, Grids, Snaps, Tracking, Drawing tools, Editing tools, Annotation tools, Text and tables, Layers, Formatting, Patterns, Shadings, Views, Blocks, Inserting external resources, Visual styles, Materials, Importing and Exporting drawings, Layouts, view ports, Page setup and plotting.



கற்கைநெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.
கற்கைநெறி சார்ந்த தொடர்புகளுக்கு: 077 804 33 41
பதிவுகளுக்கு Angel International School
Manipay.
T.P: 077 72 38 300
(C/18030)(10.3)

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி தேசிய பாடசாலை
பழைய மாணவர்சங்க
பொதுக்கூட்டம்

மேற்படி சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர்சங்க பொதுக் கூட்டம் 25.01.2015 அன்று நடைபெறவுள்ளது.

* புதிதாக அங்கத்துவம் பெற விரும்பும் பழைய மாணவர்கள் பாடசாலை அலுவலகத்தில் விண்ணபப்படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.
* பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் ஏதும் இருப்பின் 22.01.2015 ஆம் திகதிக்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.
* பொதுக்கூட்டம் தொடர்பான அழைப்புக் கடிதம் அங்கத்தவர்களுக்கு தனித்தனியாக அனுப்பி வைக்கப்படும்.

அ.கயிலாயபிள்ளை
தலைவர்/அதிபர்.

போ.ஜெயக்குமார்
செயலாளர்.

(சி/18926)(4.7.3)

## ஆக்கம்

# இறப்பின் பாதையை ஏற்கனவே அறிந்த லசந்த விக்கிரமதுங்க

தட்சா.ஜோ

## இன்று அவரது ஆறாவது நினைவுதினம்



உரத்து ஒலித்த ஊடகத்தின் குரல்வளையொன்று கதறக்கதற துடிதுடிக்க இரக்கமில்லாமல் நசுக்கி கொல்லப்பட்டு இன்றுடன் ஆறாண்டு காலங்கள். 2009ஆம்ஆண்டுஜனவரிமாதம் 8ஆம் திகதி முற்பகல்10.30.கல்கிசையில் உள்ள தனது அலுவலகத்துக்குச் சென்றுகொண்டிருந்தார் லசந்த விக்கிரமதுங்க. இலங்கையின் பிரபலமான ஊடகவியலாளர். கொழும்பில் இருந்து வெளியாகும் 'த சண்டே லீடர்' என்ற ஆங்கில ஞாயிறு இதழ், மற்றும் புதன் தோறும் வெளிவரும் 'மோர்ணிங் லீடர்' வார ஏட்டின் ஆசிரியர். இவை மட்டுமன்றி அவர் ஒரு வழக்கறிஞரும் கூட. அவர் அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்தவேளை அவரை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் பின்தொடர்கின்றனர். இதனை அவதானித்த லசந்த தன்னை யாரோ பின்தொடர்வதாக வேறு சிலருக்கு தனது கையடக்கத்தொலைபேசி ஊடாகத் தெரியப்படுத்தினார். இருந்த போதிலும் கல்கிஸை அத்திடிய பேக்கரி சந்தியடியில் அவரது கார் சென்றுகொண்டிருந்தபோது பின்தொடர்ந்த இனந்தெரியாதவர்களால் லசந்த சுடப்படுகிறார். காரின் முன்புறக் கண்ணாடியூடாகப் பாய்ந்த துப்பாக்கி ரவைகள் லசந்தவின் தலையைப் பதம்பார்த்தன. உடனடியாக களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மூன்று மணிநேர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் உயிரிழந்தார். சம்பவம் நடைபெற்று இன்றோடு ஆறு ஆண்டுகள்கழிந்துவிட்டன. ஏற்கனவே லசந்தவைக்கொலை செய்வதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.1995 பெப்ரவரியில் லசந்த அவரது வாகனத்துக்குள் வைத்துத்தாக்கப்பட்டார். 1998 ஜூனில் அவரது வீட்டின் மீது கைக்குண்டு வீசப்பட்டது. 2005 ஒக்ரோபரிலும்2007 நவம்பரிலும்சண்டே லீடர் அச்சகத்தைத் தீவைத்து தகர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.ஆனால்,இந்தச் சம்பவங்கள் எதுவொன்று தொடர்பிலும்பொலிஸார்தகுந்த விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தவில்லை. லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை எஞ்சியுள்ள ஊடக சுதந்திரத்தை நசுக்கும் முயற்சிதான் என் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் குரல்கொடுத்ததுடன்இதுதொடர்பில் அரசின்சிரத்தையற்றசெயற்பாடு குறித்தும் அதிருப்தி வெளியிட்டது. லசந்தவின்படுகொலையைக் கண்டித்து கொழும்பில் 2009ஜனவரிமாதம்9ஆம்திகதி பெரும் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்அதில்கலந்துகொண்டனர். அமெரிக்கா, பிரித்தானியா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம், உலக வங்கி, உலக சமாதான சபை என அத்தனையும் அவருக்காக அறிக்கைகள் வெளியிட்டன. இத்தனை நடந்தும் அரசுக்கும் இதற்கும் தொடர்பில்லை என ஆணித்தரமாக தெரிவிக்கப்பட்டது.

> “என் இறப்பின் பாதையை நான் அறிவேன். நீ போலியான சத்தத்தை எழுப்பிக்கொண்டு. பொலிஸை அழைத்து வேகமாக விசாரணை மேற்கொள்வாய். கடந்த காலங்களில் நீ உத்தரவிட்ட விசாரணைகளைப் போலவே, இப்போதும் நடக்கும்.”

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை குறித்து கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு நுவரெலியாவைச் சேர்ந்த வாகனத்திருத்தும் நிலையம் ஒன்றின் உரிமையாளரையும், இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் ஒருவரையும் கைது செய்தது. இவர்களில் வாகனம் திருத்தும் நிலையத்தின் உரிமையாளர் சிறையிலேயே உயிரிழக்க, இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இந்த நிலையில், இவர் மீதான வழக்கு கடந்த 2013 செப்ரெம்பர் 6ம் திகதி கல்கிசை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிரதம நீதிபதி ரங்க விமலசேன சட்டமா அதிபரின் ஆலோசனைக் கமைய அவரை விடுதலை செய்தார்.

லசந்த விக்கிரமசிங்க ஜனவரி 11 ஆம் திகதி வெளியிட வேண்டிய 'சண்டே லீடர்' பத்திரிகைக்கான ஆசிரியர்தலையங்கத்தை எழுதி வைத்திருந்தார். அதுதான் 'இறப்பின் பாதையை நான் அறிவேன்' என்ற தலையங்கம் ஆசிரியர் தலையங்கம். இது ஜனவரி 7ஆம் திகதியே எழுதப்பட்டுவிட்டது. லசந்த எழுதிவைத்த ஆசிரியர் தலையங்கம் அவர் இறந்த பின்னர் பிரசுரமானது. அதில் "என் இறப்பின் பாதையை நான் அறிவேன். நீ போலியான சத்தத்தை எழுப்பிக்கொண்டு, பொலிஸை அழைத்து வேகமாக விசாரணை மேற்கொள்வாய்.

கடந்த காலங்களில் நீ உத்தரவிட்ட விசாரணைகளைப் போலவே, இப்போதும் நடக்கும். ஆனால் ஒன்றும் வெளியில் வராது. நம் இருவருக்கும் தெரியும், என் மரணத்துக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்று. ஆனால், துணிந்து அவர் பெயரைச் சொல்ல முடியாது; என் வாழ்க்கையில் மட்டுமல்ல, உன்னைப் பொறுத்தும் இதுதான் உனக்கும். உன் காலத்தில்தான் என் மரணம் நடந்தது என்பதை எந்த நேரத்திலும் உன்னால் மறக்க முடியாது. என் மறைவு, சுதந்திரத்தை வீழ்த்தாது. இதற்காகப் போராடுபவர்கள்தொடர்ந்து பணியாற்ற ஊக்கமாக அமையும். எமது தாய்நாட்டின் மனித சுதந்திரத்துக்கு ஒரு தொடக்கமாக அமையும். தேசப்பற்று என்ற பெயரால் பலர் தங்களது உயிரைத் துறக்கும் உண்மையை ஜனாதிபதி தெரிந்து கொள்ள இது உதவும். மனித நேயம் வளம் பெறும். எத்தனை ராஜபக்ஷாக்கள் இணைந்தாலும் அதை அழிக்க முடியாது" என லசந்த குறிப்பிட்டிருந்தார். லசந்த எழுதிவைத்ததுபோலவே நடந்தது.

அது நடந்து இன்றோடு ஆறு ஆண்டுகள்...

## வணிகம்

# 8 சதவீத பொருளாதார அபிவிருத்தி



2014ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 7.8 சதவீதமாக நிலவியதாக, மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இதனை எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கு 8 சதவீதமாக பேண எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலான பொருளாதார கொள்கைகளையும் பின்பற்றுவதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கியின் கொள்கை மற்றும் வேலைத் திட்டங்களை வெளியிட்டு வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தைப் போன்றே இந்த வருடமும் தொழில் துறைகளின் அபிவிருத்தி சார்ந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (த)

# கடந்த வருடத்தின் மிகுதியான செலாவணி 140 கோடி டொலர்

கடந்த வருடம் மிகுதியான செலாவணி 140 கோடி அமெரிக்க டொலர்கள் என இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நிய செலாவணியை அதிகம் வழங்கும் நிலையில், தொடர்ந்தும் வெளிநாடுகளில் பணியாற்றும் பணியாளர்கள் திகழ்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு அவர்களினால் அனுப்பி வைக்கப்பட்ட நிதி 640 கோடியே 70 லட்சம் அமெரிக்க டொலர்கள் எனப் பதிவாகியுள்ளது.

அந்தத் தொகை கடந்த 2014ஆம் ஆண்டில் 700 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், கடந்த வருடத்தில், ஏற்றுமதி மூலம் ஆயிரத்து 104 கோடி அமெரிக்க டொலர்கள் வருவாயாக பெறப்பட்டுள்ளதாகவும், இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

# ஏற்றுமதி வருவாய் 2015 இல் அதிகரிக்கும்

ஏற்றுமதி மூலம், 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 12.5 பில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை எதிர்பார்ப்பதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

இதன் மூலம் நாட்டுக்கு பெருமளவில் அந்நிய செலாவணி கிடைக்கும் என சபையின் தலைவர் பந்துல எகொடகே குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகள் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7.5 சத வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் தேயிலை, தைக்கப்பட்ட ஆடை, றப்பர் உட்பட புதிய வகையிலான கருவா வகைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் கணிசமான அந்நியச் செலாவணி பெறப்பட்டதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் பந்துல எகொடகே தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சுற்றுலாப் பயண துறை மூலம் கடந்த ஆண்டில் 2.48 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த வருடம் 15 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவர் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அந்த எண்ணிக்கையை விட அதிக அளவிலானவர்கள் வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# சிரேஷ்ட பிரசைகளுக்கு விசேட வட்டி வீதங்கள்

இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் நிலையான வைப்புக்காக சிரேஷ்ட பிரசைகளுக்கு விசேட வட்டி விகிதம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், 60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரசைகள், உத்தரவு பெற்ற வங்கிகளில் வைப்பில் இடப்பட்டுள்ள நிலையான வைப்புக்காக ஆண்டுக்கு 12 சதவீத வட்டியைப் பெறமுடியும். இந்த விசேட சலுகை, நிலையாக வைப்பில் இடப்படும் 25 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகைக்கு மட்டுமே வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# அறிவித்தல்

## சனாதிபதித் தேர்தல் - 2015.01.08
## வாக்கெடுப்புத் தினத்தன்று முறைப்பாடுகளை கையேற்றல்
## முறைப்பாடு விசாரணை நிலையம்

2015.01.08 ஆந் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பு தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கு அல்லது மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவிக்க வேண்டிய கண்காணிப்புக்கள் மற்றும் முறைப்பாடுகள் இருப்பின், அது தொடர்பாக செயற்படுவதற்கு தேர்தல்கள் செயலகத்திலும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களிலும் அமைந்துள்ள முறைப்பாடு விசாரணை நிலையங்கள் வாக்கெடுப்புத் தினம் மு.ப. 6.30 தொடக்கம் செயற்படுகின்றது எனவும், முறைப்பாடுகள் அல்லது கண்காணிப்புக்களை முன்வைக்கும் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது

தேர்தல்கள் செயலகத்தில் அமைந்துள்ள முறைப்பாட்டு நிலையம்


| மாவட்டம் | தொலைபேசி இலக்கங்கள் | பக்ஸ் இலக்கங்கள் |
|---|---|---|
| கொழும்பு/கம்பஹா/ களுத்துறை | 011-2073816<br>011-2073817 | 011-2073800<br>011-2073801 |
| கண்டி/மாத்தளை/ நுவரெலிய | 011-2073818<br>011-2073819 | 011-2073802<br>011-2073803 |
| காலி/மாத்தறை/ அம்பாந்தோட்டை | 011-2073820<br>011-2073821 | 011-2073804<br>011-2073805 |
| யாழ்ப்பாணம்/கிளிநொச்சி/ மன்னார்/வவுனியா/ முல்லைத்தீவு | 011-2073822<br>011-2073823 | 011-2073806<br>011-2073807 |
| மட்டக்களப்பு/ திகாமடுல்ல/திருகோணமலை | 011-2073824 | 011-2073808<br>011-2073809 |
| குருநாகலை/புத்தளம் | 011-2073825<br>011-2073826 | 011-2073810<br>011-2073811 |
| அனுராதபுரம்/பொலன்னறுவை | 011-2073827 | 011-2073812<br>011-2073813 |
| பதுளை/மொனறாகலை | 011-2073828<br>011-2073829 | 011-2073814<br>011-2073815 |
| இரத்தினபுரி/ கோகாலை | 011-2877636<br>011-2877643 | 011-2877626<br>011-2877644 |

மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களில் அமைந்துள்ள முறைப்பாட்டு நிலையங்கள்

| மாவட்ட முறைப்பாட்டு விசாரணை நிலையம் | தொலைபேசி இலக்கங்கள் | பக்ஸ் இலக்கங்கள் |
|---|---|---|
| மாவட்ட செயலகம், கொழும்பு | 0113883149 | 0112369142 |
| மாவட்ட செயலகம், கம்பஹா | 0333341263 | 0332222272 |
| மாவட்ட செயலகம், களுத்துறை | 0343747009 | 0342221522 |
| மாவட்ட செயலகம், கண்டி | 0812236762 | 0812236762 |
| மாவட்ட செயலகம், மாத்தளை | 0662226673 | 0662222413 |
| மாவட்ட செயலகம், நுவரெலிய | 0523056984 | 0522222648 |
| மாவட்ட செயலகம், காலி | 0913099018 | 0912226018 |
| மாவட்ட செயலகம், மாத்தறை | 0413041800 | 0412222435 |
| மாவட்ட செயலகம், அம்பாந்தோட்டை | 0473470108 | 0472256107 |
| மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் | 0213207443 | 0212228002 |
| மாவட்ட செயலகம், கிளிநொச்சி | 0212283830 | 0212060818 |
| மாவட்ட செயலகம், மன்னார் | 0232222203 | 0232223232 |
| மாவட்ட செயலகம், வவுனியா | 0242222311 | 0242220793 |
| மாவட்ட செயலகம், முல்லைத்தீவு | 0213204354 | 0212290037 |
| மாவட்ட செயலகம், மட்டக்களப்பு | 0653065298 | 0652226874 |
| மாவட்ட செயலகம், அம்பாறை | 0632223553 | 0632223553 |
| மாவட்ட செயலகம், திருகோணமலை | 0263207171 | 0262050848 |
| மாவட்ட செயலகம், குருநாகலை | 0373611203 | 0372224976 |
| மாவட்ட செயலகம், புத்தளம் | 0323021059 | 0322265934 |
| மாவட்ட செயலகம், அனுராதபுரம் | 0252224227 | 0252224227 |
| மாவட்ட செயலகம், பொலொன்னறுவை | 0272226217 | 0272226217 |
| மாவட்ட செயலகம், பதுளை | 0552224414 | 0552224414 |
| மாவட்ட செயலகம், மொனறாகலை | 0553593884 | 0552276245 |
| மாவட்ட செயலகம், இரத்தினபுரி | 0452222236 | 0452222236 |
| மாவட்ட செயலகம், கேகாலை | 0352231894 | 0352231659 |

மஹிந்த தேசப்பிரிய,
**தேர்தல்கள் ஆணையாளர்.**

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய
2015.01.07 ஆந் திகதி




# மேஜிக் செய்யும் கூகுள் குரோம்

இன்ரநெற் பயன்படுத்தும் அனைவருக்கும் கூகுள் குரோம் என்பது முக்கியமானதாக இருக்கிறது.

ஜிமெயில், பேஸ்புக் முதல் பல பயனுள்ள இணையத் தளங்களை உபயோகிக்க பலரும் பயன்படுத்துவது கூகுள் குரோம் தான். இன்ரநெற் பயன்பாட்டுக்கு மட்டுமல்லாமல் பல தந்திரமான விடயங்களும் இதில் இருக்கின்றன.

கூகுள் குரோமில் இன்பில்ட் பிடிஎஃப் ரைட்டர் உள்ளது. இதன் மூலம் Ctrl+P கொடுத்து Save as PDF என்ற ஆப்ஷனை தெரிவு செய்தால், நீங்கள் தெரிவு செய்த பக்கத்தை பிடிஎப் பைலாக சேவ் செய்து கொள்ள முடியும்.

தொடர்ச்சியான பயன்பாடு குரோம் வேகத்தை குறைக்கலாம், இந்த நிலையில் குரோமை ரீஸ்டார்ட் செய்வது சிறந்தது. இல்லை என்றால் குரோம் டூல்ஸ் – டாஸ்க் மேனேஜர் – சென்று அதிக மெமரியைப் பயன்படுத்தும் வெப்சைட்களில் இருந்து வெளியேற வேண்டும்.

கூகுள் குரோமின் வெப் ஹிஸ்ட்ரியை டெலீட் செய்ய உங்களுக்குத் தேவையான சில பக்கங்களை மட்டும் தெரிவு செய்து டெலீட் செய்து கொள்ளலாம்.

புதிய வகை குரோம்களில் எக்ஸ்டென்ஷன்களை இன்ஸ்டால் செய்ய முடியாது. இருந்தும் குரோமின் எக்ஸ்டென்ஷன் பக்கத்தில் டெவலப்பர் மோட் ஆப்ஷனை ஆன் செய்து உங்களுக்குத் தேவையான எக்ஸ்டென்ஷன்களை சேர்த்துக் கொள்ளலாம்.

கூகுள் குரோமில் பலவித கீபோர்டு ஷார்ட்கட்கள் கொடுக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு ஏற்ற ஷார்கட்களை செட் செய்ய அட்ரஸ் பாரில் chrome://extensions என டைப் செய்து பக்கத்தின் கடைசியில் கீபோர்டு ஷார்கட்களை தெரிவு செய்ய வேண்டும்.

கூகுள் குரோமில் குறிப்புக்களை எடுக்க புதிய டேப் ஒன்றை ஓபன் செய்து அதில் –ata:text/html, பேஸ்ட் செய்து டைப் செய்ய தொடங்கலாம்.

மறைத்து வைக்கப்பட்டிருக்கும் பாஸ்வேர்ட்டுக்களை மீட்க டெவலப்பர் டூல்ஸ் சென்று பாஸ்வேர்ட் பீல்டை தெரிவு செய்து பாஸ்வேர்ட்டை இன்புட் டைப்பில் இருந்து டெக்ஸ்டாக மாற்ற வேண்டும்.

# கைப்பேசி விற்பனையில் (BLACKBERRY) பிளாக்பெரி சாதனை

முன்னணி ஸ்மார்ட் கைப்பேசி வடிவமைப்பு நிறுவனங்களுள் ஒன்றான பிளாக்பெரி (Blackberry) ஆனது இந்த வருடத்தின் மூன்றாவது காலாண்டுப் பகுதியில் 1.9 மில்லியன் கைப்பேசிகளை விற்பனை செய்துள்ளது. இதேவேளை– இந்தக் காலாண்டுப் பகுதியில் 793 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வியாபாரத்தை அந்த நிறுவனம் மேற் கொண்டுள்ளது.




இதில் 46 சதவீதமானவை வன்பொருள் விற்பனையின் மூலமும், 48 சதவீதமானவை சேவைகள் மூலமும், எஞ்சியவை மென்பொருள்கள் விற்பனை மூலமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனூடாக 16 மில்லியன் டொலர்கள் இலாபமாக இந்த நிறுவனத்துக்கு கிடைத்துள்ளது. இந்தப் பெறுமதியானது கடந்த ஆண்டின் மூன்றாவது காலாண்டில் கிடைத்த இலாபத்தை விடவும் 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலகச் செய்திகள்

## ஆரோக்கிய உணவு உண்பதில் இந்தியர்களுக்கே முதலிடம்

சர்வதேச அளவில் ஜி.எப்.கே. என்ற ஆய்வு நிறுவனம் 23 நாடுகளில் அந்தந்த நாட்டு மக்களின் ஆரோக்கியமான உணவுப் பழக்கம், போதுமான தூக்கம், உடற்பயிற்சி உட்பட பல்வேறு கோணங்களில் அன்றாட வாழ்க்கை ஆகியவற்றை ஆய்வு செய்து அந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் ஆரோக்கியமான உணவை உட்கொள்வதில் இந்தியர்கள் முதலிடத்தையும் இந்தோனேஷியர்கள் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். போதுமான அளவு தூங்கி ஓய்வு எடுப்பதில் இந்தோனேஷியர்கள் முதலிடத்தையும் இந்தியர்கள் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். உடற்பயிற்சி செய்வதில் சீனா மற்றும் மெக்ஸிக்கோவைச் சேர்ந்தவர்கள் முதல் மற்றும் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

## இளம் சாதனையாளர்கள் பட்டியலில் 44 இந்தியர்

உலகப்புகழ் பெற்ற போர்ப்ஸ் பத்திரிகை ஆண்டுதோறும் வெளியிடும் 30 வயதுக்குட்பட்ட இளம் சாதனையாளர்கள் பட்டியலில் 44 இந்தியர்கள் இடம்பெற்றுள்ளனர்.

30 வயதுக்குள் தாங்கள் செயலாற்றும் துறையை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு சென்றவர்கள், புத்தாக்கம் படைத்தவர்கள் என்ற தலைப்பில் ஆண்டுதோறும் போர்ப்ஸ் பத்திரிகை பட்டியல் வெளியிட்டு வருகிறது. 20 துறைகளில் ஈடுபட்டுள்ள 600 பேரின் பெயர்களைக் கொண்ட இந்தப் பட்டியலில், 44 இந்தியர்களும், வெளிநாடுகளில் வாழும் இந்திய வம்சாவளியினரும் இடம் பெற்றுள்ளனர். (ஒ-ரி)

## யேமனில் குண்டுத் தாக்குதல்

## 30 பேர் சாவு



சனா, ஜன. 8

யேமனின் தலைநகர் சானாவிலுள்ள பொலிஸ் பயிற்சி நிலையத்துக்கு முன்பாக கார்க் குண்டுத் தாக்குதலொன்று இடம் பெற்றுள்ளது.

இதில் 30 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், 50க்கும் அதிகமானோர் காயமடைந்ததாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக யேமனில் தொடர்ச்சியாகக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்ற வண்ணம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

தலைநகரின் பெரும் பகுதியைக் கடந்த செப்ரெம்பரில் கைப்பற்றிய ஷியா கௌத்தி தீவிரவாதிகளை இலக்கு வைத்து இவற்றில் பல தாக்குதல்கள் நடந்துள்ளன. அவற்றில் பல தாக்குதல்கள் குறித்து அல்குவைதாவின் உள்ளூர்ப் பிரிவின் மீது குற்றஞ்சாட்டப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

## சீக்கிய தீவிரவாதி தாய்லாந்தில் கைது

சென்னை, ஜன. 8

இந்தியாவின் பஞ்சாப் மாநில முன்னாள் முதல்வர் பீந்த் சிங், கார்க்குண்டுத் தாக்குதல் மூலம் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சீக்கியப் பயங்கரவாதி குர்மித்சிங் என்ற ஜக்தர் தாரா சிங், தாய்லாந்து நாட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். தாய்லாந்தின் கிழக்கு மாகாணமான சோன் புரியில் பாங்லமுங்க்மாவட்டத்தில் உள்ள வீடொன்றில் பதுங்கியிருந்த குர்மித் சிங்கை அந்நாட்டு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்த கூட்டுப் படையினர் கைது செய்துள்ளனர். அவர் தங்கியிருந்த வீட்டு உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவர் மீதும் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஒ-ரி)


## மனிதக் குண்டுத் தாக்குதலுக்கு லஷ்கர் தீவிரவாதிகள் திட்டம்

### இந்தியா- பாக் எல்லையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

சென்னை, ஜன.8



இந்தியாவில் மனிதவெடிகுண்டுத் தாக்குதல் நடத்த லஷ்கர் பயங்கரவாதிகள் சதித் திட்டம் தீட்டி வருவதாக மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால், இந்திய – பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளிலும், கடலோரப் பகுதிகளிலும் பயங்கரவாதிகள் ஊடுருவக்கூடும் என்ற பதற்றத்தில் பாதுகாப்புப் படையினர் முழு நேரக் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காகப் பாகிஸ்தான் கட்டுப்பாட்டுப் பகுதியான பஞ்சாப்பின் சியால்கோட் வழியாக 60 மனித வெடிகுண்டுப் போராளிகள் இந்தியாவுக்குள் ஊடுருவத் தயார் நிலையில் இருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. அவர்கள் அண்மையில் லஷ்கர் முகாம்களில் ஆயுதப் பயிற்சி முடித்தவர்கள் என்றும் தெரிய வருகிறது. அவர்கள் ஜி.பி.எஸ் கருவிகளைப் பயன்படுத்தி இந்தியப் பகுதிக்குள் ஊடுருவத் திட்டமிட்டுள்ளனர். அவர்களுக்கு இந்தியப் பகுதிகளுக்கு உதவுவதற்காக சில குழுக்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், அத்தகைய குழுக்களைக் கண்டறியும்படி சம்பந்தப்பட்ட மாநிலங்களின் உளவு அமைப்புக்களை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. (ஒ-ரி)



## சிரிய எல்லையில் கடும் மோதல்

### காபோன் நகரைக் கைப்பற்றின குர்திஷ் படைகள்

பாக்தாத், ஜன.8

ஈராக், சிரியா எல்லையிலுள்ள காபோன் என்ற நகரத்தை குர்திஷ் படைகள் மீட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் அந்த நகரத்தை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றினார்கள். அந்த நகரை கைப்பற்றுவதற்காக ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிர வாதிகளுடன் குர்திஷ் படைகள் தொடர்ந்து போரிட்டு வந்தன. கடந்த ஒரு வாரமாக குர்தீஸ் படைகளுக்கும், ஐ.எஸ். தீவிரவாதிகளுக்குமிடையே கடுமையான சண்டை நடைபெற்று வந்தது.

குர்திஷ் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்க விமானப்படை 11 முறை விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதில் பல ஐ.எஸ். தீவிரவாதிகளின் முகாம்கள் அழிக்கப்பட்டன. இதனைப் பயன்படுத்தி குர்திஷ் படைகள் முன்னேறின. ஐ.எஸ். தீவிரவாதிகள் அந்த நகரத்திலிருந்து பின்வாங்கியுள்ளார்கள். தற்போது காபோன் நகரம் முழுவதையும் குர்திஷ் படைகள் மீட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் காபோன் மாவட்டத்தின் 80 சதவீத பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டதாகவும் குர்திஷ் படையினர் கூறியுள்ளனர். தற்போது அருகிலுள்ள மக்தலா, கான் கோபான் மாவட்டங்களை ஐஎஸ். தீவிரவாதிகளிடமிருந்து மீட்பதற்காகக் குர்திஷ் படைகள் முன்னேறி வருகின்றன.

மேலும் ஈராக்கில் உள்ள அர்பான் என்ற இடத்தில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் இராணுவ முகாம்கள் மீது திடீர் தாக்குதல் நடத்தினார்கள். இதில் 23 படையினர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

## பூமியைப் போன்று அமைந்த எட்டுக் கிரகங்கள் கண்டுபிடிப்பு



பூமியைப் போன்ற தன்மைகள் கொண்ட எட்டு கிரகங்களைத் தாங்கள் அடையாளம் கண்டிருப்பதாக அமெரிக்க விண்ணியலாளர்கள் கூறுகின்றனர்.

நாஸா நிறுவனத்தின் கெப்லெர் விண்வெளி தொலைநோக்கியைக் கொண்டு இவை அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தக் கிரகங்கள் பூமியைப் போலவே பாறைகள் கொண்டிருக்கக்கூடும் என்றும்– நீர் நிரம்பிய கடல்கள் மற்றும் உயிரினங்கள் வாழ்வதற்குரிய பிற பின்னணிகளையும் கொண்டிருக்கக்கூடும் என்றும் – அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் இந்தக்கிரகங்கள் பூமியைவிடமிகவும் சிறியவை, அவை மிக அதிக வெப்பமோ அல்லது மிகக் குளிரானதட்பவெப்பநிலையோ கொண்டவை அல்ல என்றும் விஞ்ஞானிகள் கூறினர்.

ஆனால் இந்தக் கிரகங்களில் ஒன்றாவது மனிதர் வாழ்வதற்குரிய இடமாக இருக்குமா என்று – அவர்களால் சொல்ல முடியவில்லை என்று தெரிவித்துள்ளனர். ஆனாலும், இந்தக் கிரகங்களுக்கு மனிதர்களால் இலகுவில் சென்றுவிட முடியாது. ஏனென்றால் அவை பல நூற்றுக்கணக்கான ஒளி ஆண்டுகள் தொலைவில் இருக்கின்றன என்றும் – அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-ரி)

## பனாமாவில் நிலநடுக்கம்

பசுபிக்கடலின் தெற்குப் பகுதி நகரான பனாமானியவில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவில் 6.8 ஆகப் பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இது குறித்த சேத விவரங்கள் வெளியாகவில்லை. (ஒ-ரி)



## எயார் ஏசியா விமான விபத்தில் முக்கிய திருப்பம்

எயார் ஏசியா விமான விபத்து குறித்து வெளியான முக்கிய ஆவணத்தின் விபரங்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இந்தோனேஷியா அதிகாரி ஒருவர் போக்குவரத்துத்துறை அமைச்சருக்கு அனுப்பிய ஆவணமொன்றில் இடம்பெற்றுள்ள தகவலொன்று தற்போது வெளியில் கசிந்துள்ளது.

விபத்துக்குள்ளான எயார் ஏசியா விமானம் புறப்படும் முன்பு விமானிகளுக்கு வானிலை அறிக்கை அளிக்கப்படவில்லை. என்பதே அந்த முக்கிய தகவலாகும்.

அந்த வானிலை அறிக்கை வழங்கப்படாமை குறித்த தகவல் இந்தோனேஷியா வானிலை மைய அதிகாரியொருவர் அந்த நாட்டு போக்குவரத்துத் துறை அமைச்சர் இக்னேஷியஸ் ஜோனாவுக்கு அனுப்பிய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த ஆவணத் தகவல் கசிந்து தான் தற்போது உண்மை தெரிய வந்துள்ளது. எனவே எயார் ஏசியா இந்தோனேஷியா பிரிவின் விதிமீறலால் தான் விமானம் விபத்துக்குள்ளானது எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆனால் தங்கள் மீது கூறப்படும் குற்றச்சாட்டை எயார் ஏசியாவின் இந்தோனேஷியா அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

## ஜப்பானில் சிக்கியது 23 லட்சம் யென் பெறுமதியான மீன்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள மீன் சந்தையில் அரிய வகை மீனொன்று 23 லட்சம் யென் பெறுமதிக்கு ஏலம் போயுள்ளது. 180 கிலோ நிறை கொண்ட புளூபன்டுனா என்ற அரிய வகை மீனே இவ்விதம் கூடிய பெறுமதிக்கு ஏலம் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை டோக்கியோவில் உள்ள விடுதி உரிமையாளர் ஒருவர் ஏலத்தில் எடுத்திருந்தார்.



## மனிதர்களின் இதயத்தை உண்ணும் கொடூர கும்பல்

மெக்ஸிக்கோ, ஜன. 8

மெக்ஸிக்கோ நாட்டில் ஏராளமான போதை மருந்து வர்த்தகத்தில் ஈடுபடும் கும்பல்கள் செயற்படுகின்றன. அவர்கள் அங்கிருந்து உலகம் முழுவதுக்கும் போதை மருந்துகளைக் கடத்தி வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக பொலிஸ் தரப்பினருக்கும் போதை மருந்துக் கும்பல்களுக்கு மிடையே அடிக்கடி மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.



இத்தகைய மோதல்களின் போது தம்மால் கொல்லப்படுவோரின் இதயத்தைப் போதை மருந்து வர்த்தகத்தில் ஈடுபடும் கும்பல் உண்பதாக மெக்ஸிக்கோ நாட்டுப் பாதுகாப்புப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போதை மருந்துக் கும்பலின் தலைவர்கள் தங்களுடைய உறுப்பினர்களை இவ்வாறு எதிரிகளின் இதயத்தை உண்ணும்படி கட்டாயப்படுத்துவதாகவும் அந்த அதிகாரிகள் கூறினார்கள். அந்தத் தகவல்கள் உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

எனினும், மெக்ஸிக்கோவில் போதை மருந்துக் கும்பல்களிடம் பொலிஸ் அதிகாரிகளே லஞ்சம் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார்கள். அதன் காரணமாக அங்கு போதை மருந்துக் கும்பல்களை ஒழிப்பது முடியாத காரியமாக இருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

## பழம்பெரும் நகரை கைப்பற்றியது ஐ.எஸ்.

### ஆயிரக் கணக்கான மக்கள் தவிப்பு



உலகின் மிகப் பழைமை வாய்ந்த மதங்களில் ஒன்றைப் பின்பற்றும் யஸிடிகளின் வாழ்விடமான சிஞ்ஜாரை, இஸ்லாமிய அரசு அமைப்பு கைப்பற்றியது.

அதனையடுத்து அந்த நகரில் இருந்து துரத்தப்பட்டு, சிஞ்ஜார் மலைகளுக்கு இடம்பெயர்ந்த பல்லாயிரம் மக்கள் அங்கு தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அந்த மலைப் பகுதியிலும் அவர்கள் இஸ்லாமிய அரசால் துன்புறுத்தப்பட்டனர்.

நகரம் தொடர்ந்தும் இஸ்லாமிய அரசின் முற்றுகையில் இருந்துவந்தது.

அந்த முற்றுகையை முறியடித்த குர்து போராளிகள் அந்த நகரில் ஒரு பகுதியை தற்போது கைப்பற்றியுள்ளார்கள். (ஒ–ரி)



## இஸ்லாம் மதத்துக்கு எதிராக ஜேர்மனியில் பெரும் போராட்டம்

பேர்லின், ஜன. 8

ஜேர்மனியில் இஸ்லாம் மதத்துக்கும், குடியேற்றவாசிகளுக்கும் எதிரான போராட்டம் தீவிரமடைந்து வருகிறது.

ஜேர்மன் நாட்டின் கிழக்கே உள்ள டிரஸ்டென்னில் நடைபெற்ற இஸ்லாமிய எதிர்ப்பு பேரணியில் 18,000 பேர் கலந்து கொண்டனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் தொடங்கப்பட்ட பெகிடா என்ற அமைப்பில் 100 பேர் வரையில் மட்டுமே இருந்தனர்.

ஆனால் தற்போது நடைபெற்ற கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த அமைப்பு இன ரீதியான வெறுப்பைத் தூண்டுவதாகவும், சகிப்புத் தன்மையைப் புறமொதுக்க ஊக்குவிப்பதாகவும் இந்த அமைப்புக்கு எதிரானோர் விமர்சனம் தெரிவித்துள்ளனர்.

## தாயன்பால் உயிர் பிழைத்தது உலகின் மிகச் சிறிய குழந்தை

கனடாவில் தாயின் அன்பால் உயிர் பிழைத்த உலகின் மிகச் சிறிய குழந்தையொன்று, வெற்றிகரமாகதனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளது.

கனடாவின் சர்ரே நகரில் வசித்து வரும் பவுல்– மோரிஸ் தம்பதியினருக்கு கடந்த ஆண்டு 635 கிராம் நிறையுடைய மிகச் சிறிய குழந்தையொன்று பிறந்துள்ளது. இதுவே உலகின் மிகச் சிறிய குழந்தையாக இடம் பிடித்திருந்தது.



மோரிஸ் கருவுற்று 20 வாரங்களிலேயே வயிற்றுவலி ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் கருவைக் கலைக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர். ஆனால் குழந்தைக்காக ஏங்கிய மோரிஸ் கருச்சிதைவு செய்து கொள்ள பிடிவாதமாக மறுத்து விட்டார்.

இதனையடுத்து ஐந்து வாரங்கள் கழித்து குழந்தையைப் பிரசவித்தபோது, கைக்குள் அடங்கும் வகையில் 635 கிராம் நிறையுடன் அந்தக் குழந்தை பிறந்துள்ளது. அந்தக் குழந்தை இறந்துவிடும் என அனைவருமே எண்ணினர். ஆனால் தற்போது குழந்தை ஒரு வயது நிரம்பிய நிலையில் ஆரோக்கியத்துடன் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து குழந்தையின் தாய் மோரிஸ் கூறுகையில்; பிறக்கும் போது குழந்தைக்கு மஞ்சள் காமாலை மற்றும் நுரையீரல் கோளாறு இருந்தாலும், சமீபத்தில் ஒரு வயது ஆகியுள்ள நிலையில் ஆரோக்கியமாக இருக்கிறான் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். (ஒ–ரி)

## ரயில்கள் மோதி விபத்து: 229 பேர் படுகாயம்

பிரேசிலியா, ஜன. 8

பிரேஸிலில் இரண்டு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் 229 பயணிகள் காயமடைந்துள்ளனர்.

பிரேஸிலின் ரியோ டி ஜெனீரோவில் உள்ள மெஸ்கிடா நகர் ரயில் நிலையத்தை வந்தடைந்த



ரயில் ஒன்றிலிருந்து பயணிகள் இறங்கி கொண்டிருந்த வேளையில், அதே பாதையின் பின்புறமிருந்து வந்த மற்றொரு ரயில் தரித்து நின்ற ரயிலின் மீது மோதியது.

இந்த விபத்தில் 229 பேர் காயமடைந்துள்ளனர்.

தகவலறிந்து, உடனடியாக விரைந்து வந்த மீட்புக் குழுவினர் காயமடைந்த பயணிகளை மீட்டு அருகில் உள்ள நான்கு மருத்துவமனைகளில் சேர்த்துள்ளனர். குறித்த விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. (ஒ–ரி)

# பல்சுவை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### பரிபூரண சரணாகதியே ஆன்மிக ஒளி பெற ஒரே வழியாகும்

இயற்கையில் தோன்றும் பொருள்கள் ஒவ்வொன்றும் மிக நுட்பமான கருவில் தோன்றி வளர்ந்து, சில காலம் வாழ்ந்து, பிறகு தான் தோன்றுவதற்கு காரணமான அந்த நுண்கருவில் சேர்ந்து விடுகிறது. நமது நினைவுக்கு எட்டாத காலத்திலிருந்து படைப்பு இப்படியே நடந்து வருகிறது. இதுவே மனித வரலாறு. உயிரின் வரலாறு. வாழ்வு, சாவு இரண்டும் ஒரே பொருளின் வெவ்வேறு தோற்றங்கள். ஆன்மா என்பது வாழ்வு,சாவு இவற்றுக்கு அப்பாற்பட்டதாகும். பரிபூரண சரணாகதியே ஆன்மிக ஒளி பெற ஒரே வழியாகும்.

## நாளை 2015

**மார்கழி-25 வெள்ளிக்கிழமை**

**09.01.2015**

திதி: சதுர்த்தி மா.05.50 மணி வரை
நட்சத்திரம்: மகம் மா.06.58 மணிவரை
சுபநேரம்: 06.32-08.02 மணி வரை
இராகுகாலம்: 11.02-12.32 மணி வரை
சங்கடஹர சதுர்த்தி

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 6 | | | 2 | 4 | | |
| 4 | | | | | | | | |
| | | 9 | 6 | 4 | | 5 | | 8 |
| | 1 | 7 | | | 9 | | | |
| 5 | | 3 | | 2 | | 8 | | 1 |
| | | | 3 | | | 6 | 9 | |
| 3 | | | | 1 | 8 | 7 | | |
| | | | | | | | | 9 |
| | | 2 | 7 | | | 1 | 8 | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 1 | 7 | 5 | 4 | 8 | 6 | 2 |
| 7 | 5 | 8 | 2 | 3 | 6 | 4 | 9 | 1 |
| 4 | 2 | 6 | 9 | 1 | 8 | 7 | 3 | 5 |
| 9 | 8 | 7 | 3 | 6 | 1 | 5 | 2 | 4 |
| 6 | 3 | 4 | 5 | 8 | 2 | 1 | 7 | 9 |
| 2 | 1 | 5 | 4 | 7 | 9 | 6 | 8 | 3 |
| 8 | 7 | 3 | 1 | 9 | 5 | 2 | 4 | 6 |
| 5 | 6 | 2 | 8 | 4 | 3 | 9 | 1 | 7 |
| 1 | 4 | 9 | 6 | 2 | 7 | 3 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங் குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டி கள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரை யிலும் நிரலிலும் 1-9 வரை யான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண் டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## மன அழுக்கு என்றால் என்ன?

ஒரு கண்ணாடியில் நாளுக்கு நாள் தூசிபடிவது போல மனிதனின் சிந்தையாகிய கண்ணாடியிலும் அழுக்குப் படிகிறது. மனிதன் தெரிந்தும் தெரியாமலும், இந்தப் பிறவியிலும் முன்னைய பிறவிகளிலும் செய்த குற்றங்கள் அடங்கியதே இந்த அழுக்கு. அத்தகைய குற்றங்களின் சுவடுகள் சித்தத்தினாலே (நான்கு அந்த கரணங்களின் ஒன்று) கடத்தப்படுகின்றது.



மனிதனது தற்போதைய வாழ்வினது மட்டுமல்ல, முன்னைய வாழ்வினதும் முழுமையான எண்ணங்களைக் கொண்டுள்ளது சித்தம்.

**சாயி சிந்தனை**

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 800 | 800 | 600 | – |
| நண்டு | 200 | 400 | 300 | 350 | 400 | 300 |
| கணவாய் | 400 | 350 | 400 | 400 | 500 | – |
| பாரை | 500 | 500 | 400 | 500 | 500 | 370 |
| சுறா | 550 | 580 | 600 | 600 | 600 | 500 |
| சீலா | 350 | 600 | 400 | 500 | 600 | – |
| விளை | 600 | 500 | 400 | 450 | 500 | – |
| முரல் | 250 | 450 | 350 | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 500 | 300 | 600 | 500 | 250 |
| கிழாக்கன் | 250 | 550 | 400 | 500 | 500 | – |
| ஒரா | 400 | 500 | 400 | 450 | – | – |
| திரளி | 150 | 300 | 240 | 200 | 150 | – |
| நகரை | 150 | 200 | 200 | 200 | 300 | – |
| ஆடை | 100 | 150 | 100 | 160 | 150 | 40 |
| ஒட்டி | 180 | 180 | 250 | 200 | 300 | 200 |
| திருக்கை | 100 | 200 | 240 | 180 | 300 | 130 |
| பாலை | 450 | 400 | 200 | 380 | 300 | – |
| வாளை | 180 | 300 | 200 | 300 | 200 | 170 |
| கொய் | 150 | 150 | 60 | 100 | 100 | – |
| மதளம் | 150 | 300 | 150 | 250 | – | 120 |

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 140 | 60 | 120 | 100 | 120 | 60 | 80 |
| கத்தரி | 180 | 180 | 160 | 160 | 180 | 160 | 240 | 80 |
| கரட் | 160 | 180 | 240 | 200 | 180 | 300 | 220 | 250 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 50 | 40 | 50 | 50 | 20 |
| பயிற்றை | 250 | 240 | 200 | 200 | 260 | 200 | 220 | 250 |
| பாகல் | 350 | 300 | 320 | 320 | 300 | 260 | 260 | 200 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 60 | 80 | 80 | 45 |
| பெ.வெங்காயம் | 140 | 100 | 100 | 100 | 120 | 120 | 100 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 120 | 70 | 80 | 100 | 160 | 120 | 60 |
| பூசணி | 40 | 50 | 50 | 50 | 30 | 50 | 60 | 25 |
| தக்காளி | 180 | 180 | 150 | 200 | 140 | 140 | 150 | 100 |
| வாழைக்காய் | 70 | 80 | 60 | 90 | 80 | 90 | 100 | 70 |
| கீரை | 25 | 60 | 40 | 20 | 40 | 30 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 30 | – | 60 | – | 30 | 20 | 20 | 15 |
| மிளகாய் | 450 | 500 | 500 | 450 | 400 | 800 | 450 | 600 |
| புடோல் | 140 | 130 | 140 | 140 | 160 | 120 | 160 | 100 |
| கோவா | 120 | 120 | 120 | 140 | 120 | 160 | 140 | 100 |
| வெண்டி | 200 | 180 | 200 | 160 | 180 | 140 | 120 | 120 |
| போஞ்சி | 300 | 320 | 250 | 280 | 360 | 180 | 360 | 300 |
| லீக்ஸ் | 300 | 300 | 220 | 320 | 280 | 400 | 220 | 250 |
| தேங்காய் | 50 | 40 | 60 | 50 | 30 | 40 | 35 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 90 | 80 | 80 | 70 | 80 | 60 |
| தேசிக்காய் | 50 | 80 | 80 | 80 | 70 | 80 | 80 | 30 |
| வல்லாரை | 15 | – | 20 | – | 30 | 10 | 20 | 15 |
| கறிமிளகாய் | 350 | 300 | 300 | 400 | 400 | 320 | 350 | 350 |
| இராசவள்ளி | 120 | 120 | 100 | 140 | 160 | 150 | 140 | 120 |

## உடல் எடையைக் குறைக்கும் உணவுகள்

ஒரு நாளைக்கு ஒரு அப்பிள் சாப்பிட வேண்டும் என்பது மருத்துவர்களின் ஆலோசனை. ஏனெனில் அப்பிளில் அதிகமான அளவு நார்ச்சத்துக்கள் இருப்பதால், அடிக்கடி பசி ஏற்படுவதை அது கட்டுப்படுத்தும். சமையலில் பயன்படுத்தும் தக்காளி உடலில் இருக்கும் கிருமிகளை வெளியேற்றுவதோடு உடலைச் சுத்தம் செய்கிறது. ஆனால் இந்தத் தக்காளியை சமையலில் சேர்த்து உண்பதை விட, பச்சையாகச் சாப்பிடுவதே மிகவும் சிறந்தது. ஏனெனில் சமைத்து சாப்பிட்டால் தக்காளியில் இருக்கும் ஊட்டச்சத்துக்கள் குறைந்துவிடும். சொக்லேட் என்று சொன்னதுமே அனைவருக்குமே ஒரு ஆசை ஏற்படும். அத்தகைய சொக்லேட்டில் டார்க் சொக்லேட் சாப்பிட்டால் உடல் எடை குறைவதோடு, சருமமும் மென்மையாக மின்னும்.சுவையாக இருப்பதோடு, பசி கட்டுப்பட்டு உடல் எடையும் கூடாமல் இருக்கும். ஆகவே, இத்தகைய உணவுகளையெல்லாம் தினமும் உணவில் சேர்த்து வந்தால், உடல் எடை அதிகமாகாமல் உடலும் கட்டுக் கோப்பாக, சருமமும் மென்மையாக அழகாக இருக்கும்.

## மருத்துவம்



### வெங்காயத்தின் பயன்கள்



1.நாலைந்து வெங்காயத்தை தோலை உரித்து அதோடு சிறிது வெல்லத்தைச் சேர்த்து அரைத்துச் சாப்பிட பித்தம் குறையும், பித்த ஏப்பம் மறையும்.
2. சமஅளவு வெங்காயச் சாறு, வளர்பட்டை செடி இலைச் சாற்றை கலந்து காதில்விட காதுவலி, குறையும்.
3. வெங்காயச் சாறு, கடுகு எண்ணெய் இரண்டையும் சம அளவில் எடுத்து சூடாக்கி இளம் சூட்டில் காதில்விட, காது இரைச்சல் மறையும்.
4. வெங்காய நெடி சில தலைவலிகளைக் குறைக்கும். வெங்காயத்தை வதக்கிச் சாப்பிட உஷ்ணத்தால் ஏற்படும் ஆசனக் கடுப்பு நீங்கும்
5. வெங்காயத்தைச் சுட்டு, சிறிது மஞ்சள், சிறிது நெய் சேர்த்து, பிசைந்து மீண்டும் லேசாகச் சுடவைத்து உடையாத கட்டிகள் மேல் வைத்துக்கட்ட கட்டிகள் உடனே பழுத்து உடையும்.
6. வெங்காயச் சாறு சில வயிற்றுக் கோளாறுகளை நீக்கும். இதை மோரில் விட்டுக் குடிக்க இருமல் குறையும்.
7. வெங்காயச் சாற்றையும், வெந்நீரையும் கலந்து வாய் கொப்பளித்து, வெறும் வெங்காயச் சாறை பஞ்சில் நனைத்துப் பல் ஈறுகளில் தடவிவர பல்வலி, ஈறுவலி குறையும்.
8. வெங்காயத்தை சமைத்து உண்ண உடல் வெப்பநிலை சமநிலை ஆகும். மூலச்சூடு தணியும்.
9. வெங்காயத்தை அவித்து தேன், கற்கண்டு சேர்த்து சாப்பிட உடல் பலமாகும்.
10. வெங்காயத்தை வதக்கி வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர நரம்புத் தளர்ச்சி குணமாகும்.

08 JAN 2015



# 2015 உங்களுக்கு எப்படி?



## கன்னி

2015 இல் உங்களுக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் கிடைக்கும். ஆன்மிகப் பெரியோர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். சமுதாயத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். அதேநேரம் இக்கட்டான சூழ்நிலைகளில் உணர்ச்சிவசப்படாமல் பொறுமைகாக்கவும். வேகத்துடன் விவேகத்தையும் கூட்டிக்கொண்டால் உங்கள் செயல்கள் அனைத்தும் திட்டமிட்டபடி குறிக்கோள்களை எட்டும்.

ஏமாற்றங்களிலிருந்து தப்பிப்பீர்கள். புதிய முதலீடுகளில் ஈடுபட்டு வருங்காலத்தை வளமாக்கிக் கொள்வீர்கள். பூர்வீகச் சொத்துக்களில் திடீரென்று பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அவை தானாகவே தீரும். தீயவர்கள் உங்களை விட்டுத் தாமாகவே விலகி விடும் அதிசயம் நிகழும். அதேநேரம் இளைய சகோதரர்களுடனான உறவில் சில சலசலப்புகள் ஏற்படும். ஆனாலும் விட்டுக் கொடுத்து நடந்து கொண்டு அவற்றைச் சமாளிப்பீர்கள். சிலர் தற்போது வசிக்கும் வீட்டிலிருந்து பெரிய வீட்டுக்குக் குடி பெயர்வார்கள்.

தொழிலில் அதிக முதலீடுகளைச் செய்வீர்கள். இதனால் வருமானம் குவியும். உங்கள் புகழும், கௌரவமும் உயரும். இதுநாள்வரை தேவையற்ற வீண் பழி சுமந்தவர்கள், அவற்றிலிருந்து விடுபடுவார்கள். உங்களது முயற்சிகள் பல மடங்காக உயர்ந்து, அதற்கேற்ற வெற்றி கிடைக்கும்.

உங்களது ஆளுமைத் திறன் அதிகரிக்கும். திட்டமிட்ட செயல்கள் துரிதமாக நடக்கும். உங்கள் பேச்சில் அவ்வப்போது ஆணவம் தலைதூக்க நேரலாம். கவனத்துடன் அதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

இந்த ஆண்டு உங்களது பேச்சாற்றல் அதிகரிக்கும்; தன்னம்பிக்கை உயரும். உங்களின் எண்ணங்களை அடுத்தவர்கள் நல்ல முறையில் புரிந்து கொள்வார்கள். புதிய பொறுப்புகள் தாமாகவே தேடி வரும்.

வருமானம் நல்ல முறையில் வந்தாலும், சிலருக்கு குறுக்கு வழியில் செல்ல மனம் நினைக்கும். எனவே மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு நேர் வழியில் செல்லவும். இதன் மூலம் பல் பிரச்சினைகளிலிருந்து தப்பிக்கலாம்.

### உத்தியோகத்தர்கள்

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் நல்ல முறையில் இருக்கும். இதனால் மனதில் புத்துணர்ச்சி அதிகரிக்கும். உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். சிலர் நெடுநாள்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வைப் பெறுவார்கள். மேலும் அலுவலக ரீதியான பயணங்களால் நன்மை உண்டாகும். உங்களின் வேலைகளைச் சரியாகத் திட்டமிட்டுச் செய்வீர்கள். மேலிடத்தின் நம்பிக்கைக்கு உரியவராக உயர்வீர்கள்.

### வியாபாரிகள்

வியாபாரிகள் பொறுமையுடன் செயற்பட்டு வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வருமானம் சிறப்பாகவே தொடரும். அதேசமயம் கூட்டாளிகளிடம் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும். புதிய முதலீடுகளில் நன்றாகச் சிந்தித்த பின்னரே ஈடுபடவும்.

### கலைஞர்கள்

கலைத்துறையினருக்கு புகழும், பாராட்டும் கிடைப்பதில் சற்றுத் தாமதம் ஏற்படும். சக கலைஞர்களிடம் உங்களின் ரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைத் தக்கபடி பயன்படுத்தி, பொறுப்புடன் நடந்துகொள்வீர்கள். சில நிறுவனங்களால் முந்தைய காலகட்டத்தில் நேரிட்ட மன வருத்தங்களை ஒதுக்கி வைத்துவிட்டு உழைப்பது, முன்னேற்றத்துக்கு உதவும்.

### பெண்கள்

பெண்களுக்குக் குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். உற்றார், உறவினர்கள் உங்களை அணுகிப் பயன் பெறுவார்கள். சேமிப்பில் நல்ல கவனம் செலுத்துவீர்கள். ஆலயங்களுக்குச் சென்று ஆன்மீக பலம் பெறுவீர்கள். மற்றப்படி அனைவரிடமும் விட்டுக் கொடுத்து நடந்து கொண்டு குழப்பங்களைத் தவிர்க்கவும்.




## கூட்டெண் பலன்கள் 4-4

உங்கள் கூட்டு எண் 4 ஆக இருப்பதால் ராகுவின் ஆதிக்கப்பலன் அதிகமாக இருக்கும். நீங்கள் தோற்றத்தில் நல்ல உயரமாகவும், உடல் உறுதியாகவும் இருப்பீர்கள். சதுர முக அமைப்பும் முடி மேன்மையாகவும் இருக்கும்.

இந்தப் பலனுக்குரியோர் உலக அறிவை நன்கு அறிந்தவராக இருப்பர்.

சாத்திரங்கள், உடற் பயிற்சிகள், யோகப் பயிற்சிகள் அறிந்திருப்பர். மரியாதை அறிந்தவரானாலும், கண்டிப்பான பேச்சு இருக்கும். பல இடங்கள் சுற்றி வந்த அனுபவம் இருக்கும்.

மற்றவர்களைப் புரிந்து வாழும் குணம் கொண்டவராயிருப்பர். பொருளை விடப் புகழை விரும்பிச் சம்பாதிப்பவர். சிரமங்களைப் பொறுத்துக் கொண்டு எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றல் இவர்களிடம் இருக்கும். பெரிய குடும்பத்தில் பிறந்து பெரிய குடும்பமாகவே இருப்பர்.

காதல் வாழ்க்கை இவருக்கு தோல்வியைக் கொடுக்கும். பலர் திருமணம் ஆகாமலே இருந்து விடுவர்.

அனைத்து வித்தைகளையும் கற்று இருப் பதால் ஏதாவது ஒரு தொழிலில் பணம் சம்பாதிக்கும் திறமை உள்ளவர்.

போக்குவரத்துத் துறை, பத்திரிகை, சினிமா போன்றவற்றில் தொழில் அமையும்.

சாதாரணமாக ஆரோக்கியமானவர் இவர். கபம், வாதம் தொடர்பான நோய்கள் தாக்கக்கூடும். பிறந்த கூட்டு எண் இரண்டும் ஒன்றாக உள்ளதால் இவர்களது பெயர் எண் பலனையும் பார்க்க வேண்டும்.

## கூட்டெண் பலன்கள் 4-5

இது ராகுவுடன் புதன் சேர்ந்த ஆதிக்கம் ஆகும். இவர் உயரமாக, மாநிறமுள்ளவராக இருப்பார். சிறிய முகமும், பெரிய தலையும் இருக்கும். உடல் அளவான சதைப்பிடிப்புடன் இருக்கும். இவர் கண்கள் கவர்ச்சியான பார்வையுடன் இருக்கும்.

பார்த்தவுடன் இவர்களை எடை போட்டு விட முடியாது. சாதுவாக ஏதும் தெரியாதது போல் இருப்பர். ஆனால் மிகவும் அறிவுள்ளவர்கள்.

சுறுசுறுப்பாக இருப்பார். குடும்பப் பற்று அதிகமாக இருக்கும். சகோதர சகோதரிகளிடம் பிரியமாக இருப்பார்கள்.

எடுத்த வேலைகளை முடிப்பதில் கண்ணும் கருத்துமாகச் செயற்படுவார்கள். அனைத்து விடயங்களையும் அறிந்து கொள்ள ஆர்வமாக இருப்பார்கள். நெருங்கிப் பழகு பவர்களாலும் இவர்களைப் புரிந்து கொள்ள முடியாது. சுய நலம், தற் பெருமை இருக்கும்.

பிறர் தொழிலைக் கவனித்து நடத்தவே விரும்புவார்கள். சொந்தத் தொழில் நடத்த அஞ்சுவர். வருமானம் உயரும். சாதாரண நிலையிலிருந்து முன்னுக்கு வருபவர்கள். கலப்புத் திருமணம் புரிவார்கள். பெற்றோர் ஆதரவின்றி தனித்தே வாழும் நிலை ஏற்படும்.

தொழிற்சாலைகளில் நிர்வாகத்தில் வேலை புரிவார்கள். போக்குவரத்துத்துறை, அச்சகம், பத்திரிகைத்துறை, பதிப்பகம், அரசியல் எனப் பலவகை வேலைகளுக்கு ஆதாரமான தொழிலகங்களிலும் அலுவலகங்களிலும் இருப்பார்கள்.

சாதாரணமாக அடிக்கடி நோய் ஏற்பட வாய்ப்பில்லை. சிலருக்கு குடிப்பழக்கம் இருக்கும். கண் கோளாறு, நீரிழிவு போன்ற நோய்கள் தாக்கக்கூடும்.

# செய்திகள்

## பெண்களை தாக்கிய இருவர் மறியலில்

தென்மராட்சி,ஜன.8

மிருசுவில் பகுதியில் பெண்களைத் தாக்கிய இரண்டு ஆண்களை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டது.

மிருசுவில் பகுதியில் இரு இடங்களில் பெண்கள் தாக்கப்பட்டதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, பொலிஸார் இருவரைக் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தினர்.

வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இருவரையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ–9)

## தொலைதூர சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஊழியருக்கு திடீர் விபத்துக் காப்புறுதி

கொழும்பு, ஜன.8

தொலைதூர பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை மேற்கொண்டுவரும் தனியார் பஸ் ஊழியர்கள் தொடர்பாக ரூபா 5 லட்சம் பெறுமதியான திடீர் விபத்துக்காப்புறுதி ஒன்றை இலவசமாகப் பெற்றுக் கொடுப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

காப்புறுதி நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து இந்தக் காப்புறுதிப் பாதுகாப்பு பெற்றுக் கொடுக்கப்படுவதோடு பயணத்தில் 'ஆத்ம நண்பன்" என்று அது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் ரேணுக்க துஷ்யந்த பெரேராவின் பணிப்பின் பேரில் இது சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் கடந்த 30 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள 3,200 பஸ்களின் அனைத்து பயணிகள் போக்குவரத்து சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் இந்த காப்புறுதிப் பாதுகாப்பைப் பெறுவதற்கு தகுதி பெறுகின்றனர்.

இதன்கீழ் திடீர் விபத்துக் காரணமாக காப்புறுதியைப் பெற்றிருப்பவர் உயிரிழத்தல், நிரந்தரமாகவே இரு கண்களும் குருடாகி விடுதல், இரு கைகளும் இருகால்களும் அல்லது ஒரு கை, ஒரு கால் இழத்தல் ஆகியவற்றுக்கு முழுமையான காப்புறுதி பாதுகாப்புத் தொகையும் வழங்கப்படுவதுடன் அதற்கு அப்பால் விபத்தொன்றின் போது விபத்தின் தன்மைக்கு அமைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

கடுமையான நோய் ஏற்படும் போது ஆண்டொன்றுக்கு 2 லட்சம் ரூபா வரையிலான காப்புறுதிப் பாதுகாப்பும் மருத்துவமனையில் (அரச) அனுமதிக்கப்படும் போது நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா வீதம் அதிகபட்சமாக 50 தினங்கள் வரை பணம் செலுத்தலும் இதன்கீழ் மேற்கொள்ளப்படும்.

இதற்குச் சமமாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆண், பெண் ஊழியர்களுக்கு மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு 2 லட்சம் ரூபா பெறுமதியான சுகாதார காப்புறுதிப் பாதுகாப்பு ஒன்றை பெற்றுக் கொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாக ஆணைக்குழு தெரிவிக்கிறது. (வ–22)

## மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு பயிற்சி வகுப்புகள்

தென்மராட்சி,ஜன.8

வலி.கிழக்கு மற்றும் தென்மராட்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான 5 நாள்கள் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளன. வலி. கிழக்கு பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு மிலேனியம் விருந்தினர் விடுதியிலும் தென்மராட்சி பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்திலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மத்தியஸ்தர் சபைகளுக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டவர்களையும் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ–9)


முதலாம் ஆண்டு நினைவு



திருமதி யசிந்தா சிவகுமார்

மண்ணில் 12 . 08 . 1960

விண்ணில் 08 . 01 . 2014

ஓராண்டு கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கின்ற உங்கள் முகம்
காவியமாய் வாழ்ந்தீர்கள்
தேனினிய உங்கள் குணம்
தேடி நாம் உருகுகின்றோம்
ஆண்டவன் காலடியில்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் என் வான் வீட்டில் இருப்பாய்.

368/1, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

கலிஸ்ரா செல்வநாயகம்

(55657)(4.3.7)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நடராசா முருகதாசன்

(உரிமையாளர்-
விநாயகர் ஸ்ரோர்ஸ்,
கைதடிச்சந்தி)

தோற்றம் 08 . 03 . 1949

மறைவு 31 . 12 . 2012

திதி: திருதியை

நாம் நல்வாழ்வு வாழ
வழிகாட்டிய எம் தந்தையே!
நீங்கள் எமை விட்டுப்பிரிந்து
ஈராண்டு சென்றாலும்
உங்கள் பாச நினைவலைகள்
எம் நெஞ்சை விட்டு நீங்காது

கைதடி கிழக்கு,
கைதடி.

குடும்பத்தினர்.

(55600)(4.7.8)


## நல்லூர் பிரதேச சபை நடத்திய உள்ளூராட்சி வார நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன. 8

நல்லூர் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வும் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் கடந்த 30 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட நூலகர் திருமதி க.சந்திரசேகர், பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளை முகாமையாளர் ஆ.சத்தியமூர்த்தி, திரு நெல்வேலி தேசிய சேமிப்பு வங்கிக் கிளை முகாமையாளர் திருமதி த.சித்திராகுகன், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் ஏ.குணரட்ணம், ஏ.சிறிதரன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் த.துரைமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் மங்கல விளக்கேற்றும் நிகழ்வு ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து விருந்தினர்கள் உரையும் 'நல்லைதீபம்' சஞ்சிகை வெளியீடும் இடம்பெற்றது. நல்லை தீபம் மலரை பிரதேச சபைத் தலைவரிடமிருந்து பிரதேச செயலாளர் பெற்றுக் கொண்டார். தேசிய வாசிப்பு வாரத்தை யொட்டி நடைபெற்ற போட்டிகளுக்கான பரிசில்களையும் உள்ளூராட்சி வாரத்தை யொட்டிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களையும் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் உட்பட விருந்தினர்கள் வழங்கினார்கள்.

நிகழ்வில் முன்பள்ளிச் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. போர் காலத்தில் இடம்பெற்ற மக்களின் கஷ்ட நிலைகளையும் அதன் மத்தியிலும் மாணவர்கள் கல்வியில் காட்டிய அக்கறையையும் எடுத்துக் காட்டும் வகையில் கொக்குவில் சரஸ்வதி முன்பள்ளிச் சிறார்களால் நடத்தப்பட்ட 'சவாலே சமாளி' இசைநாடகம் விருந்தினர்களினதும் பார்வையாளர்களினதும் பெரும் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. (வ–7)

## உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்

**யா/முத்துத் தம்பி மகா வித்தியாலயம்**

**கலைப் பிரிவு**

த.ரேவதி– 2ஏபி, த.சரண்யா –ஏ2பி, இ.கவினா– 2ஏசி, த.துளசிகா– ஏபிசி, கு.விபூசா– ஏபிசி, ரா.ரஜீந்தினி– ஏபிஎஸ், தி.இளங்குமரன் – ஏ2சி, ஜெ.ஜெசிந்தா– ஏ2சி, இ.பிரியங்கா – ஏசிஎஸ், ஜீ.செந்தூரன் – ஏசிஎஸ், நா.சிந்துஜா– ஏசிஎஸ், இ.நித்திகா – ஏசிஎஸ், இ.மயூரி– ஏசிஎஸ், சி.ஹனோஜா– பி2சி, தி.கேதீஸ்வரி – பி2சி, பா.கஜீபன்– 2பிசி, கி.ஸ்ரீபிரியா – 2பிஎஸ், சி.டிலோசினி–பிசிஎஸ், ஜெயானா –பிசிஎஸ், யோ.கேதாரணி – 3சி, ம.பிரசாந்தி – 3சி, ந.சந்திரிகா – 3சி.

**யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி**

ஸ்ரீதரன் புனாட்சன் – 2ஏபி, சு.பிறின்சிகா – பி2சி, இ.துளசிகா – பிசிஎஸ், உதயகுமார் பகீரதன்– 3எஸ், ம.அபிலக்சனா– சி2எஸ்.

## பெற்றோர், கல்வியியலாளர் தந்த ஊக்கமே இலட்சியத்தை அடைய வழிவகுத்தது

### வவுனியா மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற மேகலாகரன் கூறுகிறார்

மானிப்பாய், ஜன.8

பெற்றோர்களும், கல்வியியலாளர்களும் எனக்கு வழங்கிய ஆர்வமும் ஊக்கமும் என்னை கல்வியில் மேலோங்க வைத்தது. இதன்மூலம் நான் எனது மருத்துவத் துறைக்கான இலட்சியத்தை, இலக்கை ஒரே தடவையில் அடைய முடிந்தது என்றார் உயிரியல் விஞ்ஞானதுறையில் 3 ஏ சித்திகளைப் பெற்ற சிவசுப்பிரமணியம் மேகலாகரன்.

வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் கற்று உயிரியல் விஞ்ஞான துறையில் 3 ஏ சித்திகளைப் பெற்று வவுனியா மாவட்டத்தில் முதலாவது இடத்தையும் தேசிய ரீதியில் 18 ஆவது இடத்தையும் பெற்ற சிவசுப்பிரமணியம் மேகலாகரன் வழங்கிய சிறப்புச் செவ்வியில் மேலும் கூறுகையில்:

எனது மூத்த சகோதரன் பவித்திரனும் என்னைப் போன்றே 3 ஏ சித்திகளைப் பெற்று மருத்துவத் துறையில் கொழும்பு பல்கலைக் கழகத்தில் கல்வி கற்று வருகின்றார். அவரது வழியில் நானும் ஊக்கத்துடன் ஆசிரியர், பெற்றோரின் சொற்படி கல்வியைத் தொடர்ந்தேன். அவர்களின் ஆலோசனையைப் பெற்று கல்வியை முழு மனதோடு கற்றேன்.

அந்த இலக்கு வீண்போகாத வகையில் தேசிய ரீதியில் 18 ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டேன்.

இதன்மூலம் நானும் எனது குடும்பமும் என்னைக் கற்பித்த ஆசான்களும் மிக சந்தோஷமாக உள்ளோம்" என்றார் மேகலாகரன். சின்னாக் குளத்தைச் சேர்ந்த திரு. திருமதி சிவசுப்பிரமணியத்தின் இளைய புத்திரன் ஆவார் மேகலாகரன். (வ–50)

# தொடர்ச்சிகள்

## தமிழர்களின்

"ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களான, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு பா.ஜ.க சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எவர் வெற்றி பெற்றாலும் முதலில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும். இலங்கையில் ஜனநாயகம் நிலை பெறுவதற்கு அமைதியானதும், நீதியானதும், நியாயமானதுமான தேர்தல் அவசியம்.

அதிகாரங்களைப் பகிர்வது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சை மீளத் தொடங்குவது, தீர்க்கப்படாமல் எஞ்சியிருக்கும் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பன, இலங்கையில் நிலையான அமைதியை ஏற்படுத்தும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

(ந-5)

## போலியான

என்றும், இவை தேர்தலில் தமிழ் மக்களை குழப்பும் நோக்குடன் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்றிரவு ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

கொழும்பிலுள்ள அச்சுக் கூடத்தில் பெருந்தொகையான சுவரொட்டிகள் அச்சிடப்பட்டுள்ளன. அதில், 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கின்றது. வாக்களிக்கச் செல்ல வேண்டாம்' என்று எழுதப்பட்டுள்ளது. அதனை வீடு வீடாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போதும், 'உதயன்' பத்திரிகை போன்று போலிப் பத்திரிகை வெளியிடப்பட்டு விநியோகிக்கப்பட்டிருந்தது. அத்துடன் அந்தப் போலிப் பத்திரிகையை யாழிலிருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி தொடர்ச்சியாக அன்றைய தினம் முழுவதும் ஒளிபரப்பியது. இவ்வாறு தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் செய்வதற்கு தற்போதும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே இவ்வாறான போலியான விடயங்களால் மக்கள் குழப்பமடையத் தேவையில்லை"– என்றுள்ளது. (ந-5)

## வதந்தி

இந்த இருபதாயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களில் புலனாய்வுப் பிரிவினரும் உள்ளடங்கியுள்ளனர்.

புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸாரும் சிவில் உடையில் இவ்வாறு கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். குறிப்பாக வாக்களிப்பு நிலையங்கள் உள்ளிட்ட பகுதிகளில் புலனாய்வுப் பிரிவினர் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். வதந்திகளை பரப்புவோர் உடனடியாகக் கைது செய்யப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு மேலதிகமாக சீருடை அணிந்த பொலிஸார் ரோந்துப் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளதுடன், திடீர் வீதிச் சோதனைச் சாவடிகளும் ஏற்படுத்தப்பட உள்ளன.

வாக்காளர்களுக்கு அழுத்தம் கொடுக்கும் எந்தத் தரப்பினரும் கைது செய்யப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-5)

## சூடுபட்ட

குறித்த சம்பவம் தொடர்பில் பிரதி அமைச்சர் பிரேமலால் ஜயசேகரவை கைது செய்யுமாறு பெல்மடுல்ல நீதிவான் பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்துள்ளது. (ந-5)

## வாக்களிப்பது

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தின் வாக்களிப்பை குழப்புவதற்கு பல்வேறு சதி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக எதிரணியினரால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் வடக்கின் வாக்களிப்பை குறைப்பதற்கு ஆளுங்கட்சியினரால் பல்வேறு கட்டுக் கதைகளும் பரப்பி விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் தேர்தல்கள் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில், வாக்களிப்பது மக்களது உரிமை. மக்கள் எந்தக் கட்டுக் கதைகளையும் நம்பத் தேவையில்லை. சுதந்திரமாக – அச்சுறுத்தல் இன்றி வாக்களிப்பதற்கு சகல ஏற்பாடுகளும் தேர்தல்கள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாருக்கு வாக்களித்தது என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. எனவே பொது மக்கள் அச்சமின்றி வாக்களிக்க முடியும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன் தேர்தல் கண்காணிப்பாளர்களும் களத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தேர்தல்கள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

(ந-5)

## தேவையற்ற

கிரமத்தில், அமைதியாகத் தேர்தல்களை இலங்கை நடத்தி வருகிறது என்றும், வாக்காளர்கள் சுதந்திரமாகவும் பெரும் எண்ணிக்கையிலும் வாக்களித்து வருகின்றனர் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2015 ஜனாதிபதித் தேர்தலையும், அமைதியாகவும், இயல்பாகவும் நடத்தும் என்றும் வெளிவிவகார அமைச்சு தனது அதிருப்தி அறிக்கையில் கூறியுள்ளது. (ந-5)

## இராணுவம்

மக்களுக்கு உள்ளது – என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சகல வாக்குப் பெட்டிகளும் இன்று மாலை, வாக்கெண்ணும் நிலையத்துக்கு வந்து சேர்ந்ததன் பின்னரே, வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. அதற்குரிய ஏற்பாடுகள் யாவும் தேர்தல்கள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேர்தல் ஏற்பாடுகள் குறித்து கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வடக்கில் வாக்களிப்பைக் குழப்பும் விதத்தில், இராணுவம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள அறிக்கைகள் குறித்து விசாரிக்கப்படும். வாக்களிப்பதை இராணுவம் எந்தச் சந்தர்ப்பத்திலும் தடுக்க முடியாது.

பாதுகாப்புக் காரணங்களைக் கூறி இராணுவம் வாக்களிப்பதை தடுக்க முயன்றால், அவர்களின் உத்தரவை புறக்கணிக்கும் உரிமை வாக்காளர்களுக்கு உள்ளது."– என்று அவர் தெரிவித்தார்.

"வாக்களிப்பு முடிவுக்கு வந்த பின்னர், எல்லா வாக்குப் பெட்டிகளும், வாக்கு எண்ணும் நிலையத்தை வந்தடைந்த பின்னரே, வாக்குகளை எண்ணும் பணி ஆரம்பிக்கப்படும். வாக்களிப்பு மாலை 4 மணிக்கு முடிந்தவுடன், 6 மணியளவில் வாக்குகளை எண்ணும் பணி ஆரம்பிப்பது என்று முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

எங்கேனும் ஒரு இடத்தில் பிரச்சினை என்றாலும், மறுவாக்கெடுப்புக் குறித்து தீர்மானிக்க வேண்டும் என்பதால், எல்லா வாக்குப்பெட்டிகளும், வாக்குகளை எண்ணும் நிலையத்துக்கு வந்து சேரும் வரை காத்திருப்போம். முழுமையாக வந்தடைந்த பின்னரே வாக்குகளை எண்ணும் பணி ஆரம்பிக்கப்படும்"– என்றும் அவர் கூறினார்.

(ந-5)

## மைத்திரியின்

வருகின்றன. குறிப்பாக போலி வாக்குச் சீட்டுக்கள் நாட்டின் பல பகுதிகளிலும் விநியோகிக்கப்பட்டுள்ளன. அவற்றை விநியோகிப்பதும், வைத்திருப்பதும் தண்டனைக்குரிய குற்றம் என்று தேர்தல்கள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்ட பின்னரும், ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் ஆதரவாளர்கள் விநியோகித்து வருகின்றனர். தீவகப் பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகளில் இவை நேற்று விநியோகிக்கப்பட்டுள்ளன. நேற்று இரவும் வீடு வீடாக விநியோகிக்கப்பட்டுள்ளது. பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு, எதிரே அன்னச் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் போலியான வாக்குச் சீட்டில் அன்னச் சின்னம் காணப்படவில்லை.

(ந-5)

## தமிழ்க்

தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அந்தப் பிரசுரம் போலியானது; தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அதற்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது என்றும் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துடன், 'ஐந்தே நிமிடங்கள் ஒதுக்குங்கள்' என்று தலைப்பிட்டு, தமிழ் மக்களை குழப்பும் வகையில் இந்தத் துண்டுப் பிரசுரம் நேற்று இரவோடு இரவாக தேர்தல் விதிமுறைகளை மீறி விநியோகிக்கப்பட்டுள்ளது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஜனநாயகப் பிரிவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் பிரசுரம் போலியானது என்று மறுத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமது கட்சியில் அவ்வாறான பிரிவு எதுவும் இல்லை என்றும் தெரிவித்தது. இது வேண்டும் என்று தமிழ் மக்களைக் குழப்பும் நடவடிக்கை என்றும், இவ்வாறான செயற்பாடுகளால் மக்கள் குழப்பமடையாது, அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

(ந-5)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

மாணவர் உள்வாங்குகை : கல்வியாண்டு 2015 ஜனவரி
BCAS Campus - Jaffna

தனியார் உயர் கல்வித்துறையில் 15 வருட அனுபவத்தையும் நம்பிக்கையும் கொண்ட BCAS Campus யாழ் வளாகத்தில் புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் (BTEC Pearson edexcel HNDs)

கற்கை நெறிகள்
- Civil Engineering
- Biomedical Science
- Quantity Surveying
- Computing & System Development
- Business Management
- Business Marketing
- HR Management

காலம் : நான்கு கல்வி அரையாண்டுகள் (மொத்தம் 6 மாத கற்கை காலம் +6 மாதகால தொழில்சார் பயிற்சி)
கட்டணம் : கற்கை நெறிக்கேற்ப வேறுபடும்
மொழிமூலம் : ஆங்கிலம்
அனுமதி : க.பொ.த உயர் தரம் (பெறுபேறுகளை எதிர்பார்த்து நிற்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்)



மேற்கூறப்பட்ட கற்கைநெறிகள் நான்கு கல்வி அரையாண்டுகளைக் கொண்டதாகவும், இக்கற்கை நெறிகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் (UGC) சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கு மேலதிக ஒருவருட / இறுதியாண்டு (Top-Up) கற்கையை 105 க்கு மேற்பட்ட சர்வதேச பல்கலைக்கழகங்களிலோ அல்லது எமது நிறுவனத்தின் கொழும்பு வளாகத்திலோ தொடர்ந்து பட்டத்தை பெற முடியும்.

டிப்ளோமா கற்கை (Diploma)



கற்கை நெறிகள்
- CAD & BS
க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற க.பொ.த உயர் தரத்துடன் கட்டிட நிர்மாணத் துறையில் 6 மாதகால பயிற்சி நெறியின் இறுதியில் UK edexcel அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும்.
- BTEC edexcel National Diploma in Engineering (IEF)
Engineering துறையில் க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற க.பொ.த உயர் தரத்துடன் சர்வதேச இளமாணி பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கான 1 வருட (2 கல்வி அரையாண்டுகள்) அடிப்படை கற்கை நெறி UK edexcel அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொடுக்கும்.

கணனி மற்றும் ஆங்கில பயிற்சி பாடநெறிகள் (UK edexcel)

கற்கை நெறிகள்
- English
நான்கு மாத காலம் கொண்ட ஆங்கில பாடநெறி ஆங்கிலத்தில் பேச எழுத வாசிப்பதற்குரிய முழுமையான பயிற்சி அளிக்கப்படுவதுடன் சர்வதேச சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.
- Information Technology (IT)
Concept of Information Technology, Computer Maintenance & File Management, Microsoft Office, Information & Communication, Website Development, Computer Programming & Hardware & Networking போன்ற பிரிவுகளில் முழுமையாக பயிற்சியளிப்பதுடன் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.
- IELTS
சர்வதேச ஆங்கில மொழித் தகைமையை உத்தரவாதப்படுத்தும் இப்பாட நெறியில் Speaking, Listening, Reading and Writing போன்ற பிரிவுகளில் முழுமையானதும் தனிப்பட்ட கவனமும் செலுத்தப்படுகிறது.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA

மேலதிக தகவல்களுக்கு:
077 710 2131
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910

15 YEARS

# செய்திகள்

## தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு

வவுனியா, ஜன.8

வவுனியாவில் தூக்கில் தொங்கியநிலையில்இளைஞர் ஒருவருடைய சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தை அண்மித்த பகுதியில் உள்ளகாட்டிலேயே இந்தச்சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் இரு பிள்ளைகளின் தந்தையான எஸ். தயா (வயது-36) என்பவரென இனம் காணப்பட்டுள்ளார். ஓமந்தையை வசிப்பிடமாக கொண்ட குறித்த குடும்பஸ்தரை இரு தினங்களாகக் காணவில்லை என்று வீட்டார் தேடி வரும் நிலையில் இவ்வாறு அவர்சடலமாகமீட்கப்பட்டார்.

அவரது இறப்புத் தொடர்பான விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (வ-402)

## ஆன்மிக சொற்பொழிவு

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புலுட்டையன்பிள்ளையார்) ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு தென்மராட்சி இலக்கிய அணியைச் சேர்ந்த அ.வாசுதேவா 'ஒருவாசகம்' என்னும் பொருளில் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (வ-9)

## ஆயுள்வேத வைத்தியசாலை 4 நாள்கள் இயங்க வேண்டும்

### வலி.தென்மேற்கு பிரதேசசபை தவிசாளர் வேண்டுகோள்

மானிப்பாய், ஜன.8

நவாலி ஹேமலதா ஞாபகார்த்த ச.ச.நிலையத்தில் இயங்கும் இலவச ஆயுள்வேத வைத்தியசாலை வாரத்தில் 4 நாள்கள் இயங்க நடவடிக்கை எடுக்குமாறு வலி. தென்மேற்கு பிரதேசசபை தவிசாளர் சி.சி.மகேந்திரன் மாகாண சுதேச வைத்திய பணிப்பாளர் மருத்துவர் திருமதி சியாமா துரைரட்ணத்துக்கு வேண்டுகோள்விடுத்துள்ளார்.

வடமாகாணத்தில் நவாலி ஹேமலதா ச.ச.நிலையம் ஒன்றிலேயே ஆயுள்வேத வைத்தியசாலை வாரத்தில் இரு தினங்கள் சேவை வழங்குகின்றது.

மேலும் இருநாள்கள் அதிகரித்து வழங்குவதன் ஊடாக வலி.தென்மேற்கில் உள்ள 14 கிராம அலுவலர் பிரிவு மக்கள் முழுமையான நன்மை அடைவர்.

மேலும் வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களையும் வழங்கி உதவுவதுடன் நீரிழிவு நோயாளிகளின் இரத்தத்தைப் பரிசோதிப்பதற்குத் தேவையான மின்னியக்கப் பரிசோதனைச் சாதனங்களை வழங்கி உதவவேண்டும் என்றும் தவிசாளர் கோரியுள்ளார். (வ-50)

## விபத்தில் இரு வாகனங்கள் சேதம்

வலி.வடக்கு, ஜன.8

படி வாகனமொன்றும் இராணுவ வாகனமொன்றும் மோதிக்கொண்டதில் படி வாகனம் சேதத்துக்கு உள்ளாகிய போதிலும் ஆள்களுக்கு எந்தவகையான பாதிப்புகளும் ஏற்படவில்லை.

நேற்று முன்தினம் இரவு 6.30 மணியளவில் கோண்டாவில் மேற்கு, காங்கேசன்துறை வீதியில் உள்ள உப்புமடம் பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையில் இந்த விபத்து இடம் பெற்றது.

வாகனங்கள் சேதம் அடைந்த மையால் சுன்னாகம் பொலிஸார் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (வ-86)

## முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றோருக்கான புதிய நிர்வாகத் தெரிவு

வவுனியா, ஜன.8

முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றோருக்கான அமைப்பின் புதிய நிர்வாக தெரிவும் பொதுக்கூட்டமும் கடந்த 5 ஆம் திகதி வவுனியா மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தில் வவுனியா மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன் தலைமையில் இடம்பெற்றபோது.

புதிய நிர்வாகக் குழு தலைவராக ஏ.ஜெயக்காந்தனும், செயலாளராக எஸ்.இருதயராஜாவும், பொருளாளரும், உப தலைவராகவும் பார்த்தீபனும், உப செயலாளராக எஸ்.சிபிசனும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாகத் தெரிவில், வடக்கு மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களுக்கும் அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இணைப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாணத்தில் கூடுதலான முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றோர் காணப்படுவதுடன் அவர்களுக்கான உதவிகள்கிடைப்பதும் குறைவாக இருப்பதால் தெரிவு செய்யப்பட்ட அமைப்பின் மூலம் பல்வேறு உதவித்திட்டங்களை முன்னெடுக்க உள்ளதால் முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றோர் வவுனியா மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றோருக்கான அமைப்பின் மூலம் தொடர்பு கொள்ள முடியும் என்று மேற்படி அமைப்பின் தலைவர் ஏ.ஜெயக்காந்தன் தெரிவித்துள்ளார். (வ-421)

## தைப்பொங்கல் பெரு விழா

யாழ்ப்பாணம், ஜன.8

சித்தன்கேணி நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த தைப்பொங்கல் பெருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு அபிஷேக அலங்காரத்தோடு நாககன்னியம்மன் நாகத்தில் திருவீதியுலா எழுந்தருளி தீ மிதிப்பு நிகழ்வு நடைபெறும். (வ)


## மரண அறிவித்தல்

பூலோகம்
12
.
09
.
1919



சிவலோகம்
07
.
01
.
2015

### திருமதி சரஸ்வதி பேரம்பலம்

நாரந்தனை, வேலணை மேற்கு

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு, யாழ்ப்பாணம், நல்லூரடியை வசிப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி பேரம்பலம் 07.01.2015 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி- பொன்னம்மா தம்பதியரின் மகளும், வேலணை மேற்கு, காசிநாதமுதலியார் வழித்தோன்றலில் வந்த காலஞ்சென்ற பேரம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சபாபதி- பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், விஜயலட்சுமியின் பாசமிகு தாயாரும், சரவணபவன் (V.J.S) அவர்களின் பாசமிகு மாமியாரும், சாந்தி, சிவகுமார் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், சிவாஜினியின் அன்புப் பேர்த்தியும், சேயோன் ஹரிஸ், பிரணவ் ஆகியோரின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (சிவசிவா), தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகம்மா, காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், சாந்தலிங்கம், லெட்சுமிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற சிற்றம்பலம் (முருகா) லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் சம்மந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2015) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக தெகிவளை, கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

41, விவேகானந்த வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06
T.P:2500748

(சி/16566) (4.7.3)

தகவல்:
சி.சரவணபவன் (V.J.S)

## மரண அறிவித்தல்



### கந்தையா குருபரன்

(முன்னாள் வர்த்தகர் ஸ்ரீரங்கன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்-கொழும்பு-கைதடி)

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தை பெரேரா லேனை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குருபரன் 06.01.2015 செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.20 மணியளவில் கொழும்பில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னபூரணம் தம்பதியரின் பாசமிகு மகனும், சுழிபுரத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி-இராஜேந்திரஅம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், இராஜகீதத்தின் அன்புக் கணவரும், பவீனாவின் (மாணவி-வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலயம்) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் இந்திராணிதேவி (கனடா), சத்தியதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கைலாயபிள்ளை (லண்டன்), காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் புஸ்பராசா, இந்திரா அருள்நேசன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுகிர்தா-சுதாகரன் (லண்டன்), சுகிர்தன்-கேமாலினி (லண்டன்), சுமதி (கைதடி), குகாந்தினி-சிறிஸ்கந்தராசா (லண்டன்), குகாமினி-பார்த்தீபன் (கைதடி), குகாயினி-சிறிதரன் (சுவிஸ்), குகந்தன்-ஜீவிகா (கனடா), குயிதன்-மகிந்தினி (கனடா), மதுரியா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2015) வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது கைதடி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கைதடி வடக்கு தச்சன்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 6561673, 077 3127268,
0044 7405001374,

கைதடி கிழக்கு,
கைதடி.

# செய்திகள்

## 795 மதுபான போத்தல்களுடன் நால்வர் கைது

கொழும்பு, ஜன 8

ஹற்றன் மல்லியப்பூச் சந்தியில் வைத்து மதுபானப் போத்தல் களைச் சட்ட விரோத மாகக் கொண்டு சென்ற 4 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹற்றன் பொலிஸாருக்குக் கிடைத்த விசேட தகவலையடுத்தே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெண்ணொருவரும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சந்தேக நபர்கள் பயணித்த லொறியிலிருந்து 8 இலட்சம் ரூபா பெறுமதியான 795 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்களை ஹற்றன் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## வாக்குப் பெட்டிகளுடன் சென்ற ஜீப் கவிழ்ந்தது


### 4 பேர் படுகாயம்

நுவரெலியாவிலிருந்து கினிகத்தேனை மினுவன் தெனிய நோக்கி வாக்குபெட்டியை ஏற்றிச் சென்ற ஜீப் ரக வண்டியுடன், வட்டவலை, கித்துல்கலையிலிருந்து ஹட்டன் நோக்கி விறகு ஏற்றிச் சென்ற லொறி நேற்றுப் புதன்கிழமை மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில், ஜீப் வண்டியில் பயணித்த 3 கடமை உத்தியோகத்தர்கள் உட்பட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு பதிலாக வாகனம், 3 உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தரையும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி டீ.பீ.ஜீ. குமாரசிறி தெரிவித்தார். (த)

## நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வு



கொழும்பு, ஜன.8

நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் 91 வீதம் வரை உயர்வடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மையில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையினால் நாட்டின் 73 நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துக் காணப்படுவதாக திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் ஜானகீ மீகஸ்தென்ன குறிப்பிடுகின்றார்.

இந்த நிலைமையின் கீழ் 28 நீர்த் தேக்கங்கள் வான் பாய்வதாகவும், நான்கு நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் இன்னும் திறந்து விடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொலன்னறுவையில் கவுடுல்ல நீர்த் தேக்கம், ஹம்பாந்தோட்டையில் இஹல கல மற்றும் லுணுகம்வெஹெர நீர்த் தேக்கங்கள், குருநாகலில் தெதுருஓயா நீர்த் தேக்கம் ஆகியவற்றின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளதாக நீர் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் கூறினார்.

அண்மையில் நிலவிய மழை வெள்ளத்தினால் நீர்த் தேக்கங்கள், சிறியளவிலான மற்றும் நடுத்தர குளங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்த விவரங்களை திணைக்கள உத்தியோகத்தர்கள் மதிப்பீடு செய்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுவரை சுமார் ஐயாயிரம் மில்லியன் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளமை பதிவாகியுள்ளதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின நீர் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் மேலும் சுட்டிக்காட்டினார். (ற)

# மரண அறிவித்தல்

## செல்லையா சிங்கராசா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், இல.15 கொண்டலடி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல் லையா சிங்கராசா (முன்னாள் CTB Driver) அவர்கள் நேற்று (07.01.2015) புதன் கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா கண்ணம்மா தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ் சென்ற பூரணசௌந்தரி , கமலா தேவி அவர்களின் அன்புக் கணவரும், செல்வராசா செல்வமலர்(ஆசிரியை நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்) காலஞ்சென்ற செல்வகுமார், ஜெயக்குமார் (கனடா), சத்திய குமார் (லண்டன்), சுரேஸ்குமார் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற ஜெகதீஸ்குமார் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2015) வியாழக்கிழமை பிற்பகல் 04.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயா னத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தொ.பே: 077 486 0517
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

மலர்வு
15.07.1942



உதிர்வு
07.01.2015

## கணபதி தம்பிப்பிள்ளை

அச்சுவேலி கதிரிப்பாயைப் பிறப்பிடமாகவும் பாரதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி தம்பிப்பிள்ளை நேற்று புதன்கிழமை (07.01.2015) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பாரதிவீதிஅச்சுவேலி.
குடும்பத்தினர்.

## நாகர் நல்லையா



நவாலி முருகமூர்த்தி கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் நல்லையா நேற்று (07.01.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வதி மற்றும் மாணிக்கம் ஆகியோரின் அன்புக் கணவரும், பா. குலராணி (ராற்றா), செல்வரட்டிணம், குணரட்டிணம், காலஞ்சென்ற ஜெயரட்டிணம், ஜெயராணி (ஜெயம்), ஜீவரட்டிணம் (ஜீவா), சௌந்தரராணி, புனிதராணி, நடராஜா (கீர்த்தி), விஜயா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.01.2015) வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 990 5490

# மரண அறிவித்தல்கள்



## திருமதி இராஜலட்சுமி கந்தசாமி

சுழிபுரம் வீரபத்திர கோயிலடியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலட்சுமி கந்தசாமி 06.01.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை-அன்னப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா-சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சிற்பஸ்தபதி செ.கந்தசாமியின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, நாகேஸ்வரி, துரைராஜா, நவரத்தினம் (அப்புக்காத்து) மற்றும் ராஜேஸ்வரி (கிளி) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற விமலதாஸ் மற்றும் விமலசோதி, விமலராணி, விமலரட்ணம், விமலரஞ்ஜினி ஆகியோரின் அன்புத் தாயும், சட்டநாதர், ஸ்ரீநிவாசன், கிருசாந்தி ஆகியோரின் மாமியும், கோபிதன், கௌதமி, கௌசிகன், கௌசல்ஜன், கௌதமன், கௌரீசன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுதது்ச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். 021 222 0070
தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பார்வதியம்மா சுப்ரமணிய ஐயர்



கேரளா - திருவனந்தபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவரும் ஈச்சமோட்டை ஞானவைரவர் ஆலயம் பாணன்குளம் நாச்சியம்மன் ஆலயம் நல்லூர் மூத்த விநாயகர் ஆலயம் ஆகிய வற்றின் பூசகராக இருந்தவருமான பிரம்மஸ்ரீ இ. சுப்ரமணிய ஐயர் அவர்களின் தர்ம பத்தினியும் நாச்சியம்மன் ஆலய பூசகராயிருந்த காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ யோகீஸ்வர சர்மா அவர்களின் அன்புத்தாயாருமான திருமதி பார்வதியம்மா சுப்ரமணிய ஐயர் அவர்கள் நேற்று புதன்கிழமை (07.1.2015) சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (08.01.2015) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
கொள்ளுப் பேரப்பிள்ளைகள்.

## Lion திரு செல்லையா யோகானந்தராஜா (BA Hons)

(ஓய்வுபெற்ற அத்தியட்சகர் கைதடி முதியோர் இல்லம்)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா யோகானந்தராஜா 06.01.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகன் செல்லையா-செல்லையா வள்ளியம்மை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான நல்லத்தம்பி-செல்லமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், பஞ்சாட்சரராணியின் அன்புக் கணவரும், பிரியதர்சினி (லண்டன்), துஷ்யந்தன் (பொறியியலாளர் லண்டன்), புருஷோத்தமன் (யூனியன் வங்கி - சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், துளசிதரன் (லண்டன்), கேமசுஜி (லண்டன்), சாந்துரேகா (உணவு உற்பத்தி தொழில்நுட்ப முகாமைத்துவம் பல்கலைக்கழகம் -வயம்ப) ஆகியோரின் மாமனும், புனிதமலர் (கனடா), மனோரஞ்சிதமலர் (கொழும்பு), கனகாம்பிகைமலர் (மேல் நிதிமன்ற ஆணையாளர்-யாழ்ப்பாணம்), சிவஞானசௌந்தரவல்லி (சுன்னாகம்), அனுஷியா (லண்டன்), ராமச்சந்திரன் (கொழும்பு), லக்சுமிகாந்தன் (கனடா), கிருபானந்தன் (பிரான்ஸ்), கருணாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பழனிச்சாமி (கனடா), காலஞ்சென்ற செல்வநாயகம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) மற்றும் சிவபாதசுந்தரம் (கொழும்பு),தேவகுணாளன் (சுன்னாகம்), ரவீந்திரன் (லண்டன்), புஸ்பராணி (கொழும்பு), பவளராணி (கனடா), உதயகலா (பிரான்ஸ்), திலகவதி, லோகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், மிலிஷா (லண்டன்), அரொன் (லண்டன்), செயிஷன் (லண்டன்), கீரொன் (லண்டன்), ஹரிசன் (லண்டன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2015) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்த மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## செய்திகள்

# போலி நியமன கடிதம் வழங்கி அரச தொழில் புரிந்தவர் கைது

## விளக்கமறியலில் வைக்க உத்தரவு

மன்னார், ஜன. 8

மன்னார் மாவட்ட செயலகத்தில் போலியான நியமனக் கடிதம் வழங்கி ஒன்றரை வருடங்களாக அரச ஊழியராகக் கடமை புரிந்து வந்த நபர் ஒருவர் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிபதி ஆனந்தி கனகரட்னத்திடம் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு தேற்றாத்தீவு பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஒன்றரை வருடங்களுக்கு முன்பு மன்னார் மாவட்ட செயலகத்தில் குறித்த இளைஞர் போலி நியமனக்கடிதம்வழங்கிக்கடமை புரிந்து வந்துள் ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மன்னார் பொலிஸில் முறையீடு செய்யப்பட்டதை அடுத்து அந்த நபர் பொலி ஸாரால் கைது செய் யப்பட்டுக் கடந்த திங்கட்கிழமை மன்னார் மாவட்ட நீதிவான் நீதிபதி ஆனந்தி கனகரட்ணத்திடம் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

குறித்த நபர் அரச ஊழியராக கடமை புரிந்த காலங்களில் அரச நிதியில் ஒரு லட்சம் ரூபா கடன் பெற்றுள்ளதாகவும், ஒன்றரை வருடங்களாக அரச நிதியை சம்பளமாக பெற்றுள்ளதன் மூலம் அரச நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாகவும் இவருக்கெதிராகப் பொலிஸார் வழக்கு தாக் கல் செய்தனர். அவரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (த)

### சமுர்த்திச் சங்கத்தின் ஜன்னல் உடைத்து திருட்டு

வரணி இடைக்குறிச்சி மேற்கில் உள்ள பொது சமுர்த்திச் சங்கத்தின் 3 ஜன்னல்கள் உடைக்கப்பட்டு இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சங்கத் தலைவி கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

விசாரணை மேற்கொண்ட பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (த-9)

### ஆட்டுத் திருடர்கள் வசமாகச் சிக்கினர்

ஆட்டுத்திருட்டை மேற்கொண்டவர்கள் நல்லவர்களாக நடிக்க முற்பட்டபோது மக்களிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஈவினைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் ஈவினைப் பகுதயில் கட்டி வைக்கப்பட்டிருந்த ஆட்டை ஓட்டோவில் சாரதியும் மற்றொருவருமாக இணைந்து பிடித்துச் சென்றுள்ளனர்.

குறித்த ஆட்டை அச்செழுப் பகுதியில் மறைத்து வைத்துவிட்டு மீண்டும் ஓட்டோவில் இருவரும் திரும்பி வந்துள்ளனர். பொதுமக்களுடன்தாமும் இணைந்து ஆட்டைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தநேரத்தில் வீதி ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவை நோட்டம் விட்ட இளைஞர்கள் அதற்குள் ஆட்டுப் பிழுக்கைகள் இருப்பதைக் கண்டு இருவரையும் விசாரணைக்கு உட்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிஸாரிடம் இருவரும் ஒப்படைக்கப்பட்டனர். தொடர்ந்து திருட்டுப் போன ஆடு மீட்கப்பட்டுள்ளதுடன் இருவரும் சுன்னாகம் பொலிஸாரினால் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் முறையே ஈவினை மற்றும் அச்செழுப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த-86)

## தேர்தல் கடமையின்போது சகல பொலிஸாருக்கும் ரி—56

கொழும்பு, ஜன 8

தேர்தல் பாதுகாப்புச் செயற்பாடுகளில் ஈடுபடும் அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அவசியமான வேளை அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்காக ரி—56 ரகத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தேர்தல் பாதுகாப்புச் செயற்பாடுகள் குறித்து நேற்றுமுன்தினம் பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும், நடமாடும் ரோந்துச் சேவைகளில் ஈடுபடும், வீதித் தடைகளில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் கடமைகளின்போது தடைகளை ஏற்படுத்தினால் அந்த நபர்களுக்கு எதிராக அவசியத்துக்கு ஏற்றவாறு அதிகாரத்தைப் பிரயோகிக்குமாறு தெளிவாகவே பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பு உரிமையை உறுதிப்படுத்துவதற்காகவே தேர்தல் சட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. கடமைகளுக்குத் தடைகளை ஏற்படுத்த யாரேனும் முயன்றால் அவர்களுக்கு எதிராகப் பாரபட்சமின்றி அதிகாரத்தை பிரயோகிப்பதற்குப் பின் நிற்கப் போவதில்லை.

அதற்காகப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு துப்பாக்கிகள் வழங்கப்பட்டு பணிப்புரையும் விடுக்கப்பட்டுள்ளது—என்றார் பொலிஸ் பேச்சாளர். (த-22)

## நாடு முழுவதிலும் 420 வீதித் தடைகள்

### ஜனாதிபதித் தேர்தலுக்காக

கொழும்பு, ஜன. 8

இன்று நடக்கும் ஜனாதிபதித் தேர்தலின் பாதுகாப்புக்காக நாடெங்கும் நேற்று முன் தினம் இரவு முதல் மொத்தமாக 420 தற்காலிகப் பொலிஸ் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

வாக்களிப்பு ஆரம்பித்தது தொடக்கம் வாக்குகள் எண்ணி முடிவுகள் அறிவிக்கப்படும் வரை இந்த 420 வீதித் தடைகளும் இருக்கும் எனவும் இவற்றுக்கு மேலதிகமாக அவ்வப்போது தேவையான இடங்களில் உடனடி வீதித் தடைகளும் முன்னறிவிப்பு எதுவுமின்றி அமைக்கப்படும் எனவும் அஜித் ரோஹண கூறினார்.

இதற்கிடையில் நேற்றுமுன்தினம் வரை தேர்தல் விதிகளை மீறியமை தொடர்பில் 340 முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களுக்குக் கிடைத்தன எனவும், இவை தொடர்பில் 150 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

## கூலித் தொழிலாளி வெட்டி படுகொலை

கொழும்பு, ஜன. 8

பலாங்கொடையில் கூலி தொழிலாளி ஒருவர் இனந்தெரியாதோரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளவரின் சடலத்தை பலாங்கொடை நகர பொது விளையாட்டு மைதானத் திடலிலிருந்து பலாங்கொடை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பலாங்கொடை பலில்ஹாஜியார் மாவத்தையைச் சேர்ந்த மொஹமட் அலி (வயது 46) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபரின் மனைவி வெளிநாட்டில் பணிப்பெண்ணாகத் தொழில் புரிந்து வருவதாகவும் பிள்ளைகள் இருவரும் தியத்தலாவையிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

குறித்த நபர் கொலை செய்யப்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (த)

## சமுர்த்திப் பயனாளிகள் மன்னாரில் ஏமாற்றம்

மன்னார், ஜன. 8

மன்னார் மாவட்ட சமுர்த்திப் பயனாளிகள் தங்களுக்கு மானியமாகப் பணம் வழங்கப்படுவதாகக் கேள்விப்பட்டு தங்கள் பகுதிச் சமுர்த்தி வங்கிகளுக்கு சென்று ஏமாற்றம் அடைந்தனர்.

சமுர்த்திப் பணத்தை வழங்க வேண்டாம் என்று விடுக்கப்பட்ட அறிவித்தலால் அவர்கள் ஏமாற்றமடைந்து வீடு சென்றனர்.

இது பற்றி தெரியவருவதாவது:–

சமுர்த்திப் பயனாளிகளுக்குச் செழிப்பான இல்லம் என்ற திட்டத்தின் கீழ் முதல் கட்டப் பணம் வழங்கப்படுவதாகக் கேள்விப்பட்ட பெரும்பாலான சமுர்த்தி பயனாளிகள் நேற்றும், நேற்று முன்தினமும் அதிகாலை 4 மணி தொடக்கம் சமுர்த்தி வங்கிகளை முற்றுகையிட்டு வங்கிகள் திறக்கும் வரை காவல் இருந்தனர்.

ஆனால் இவர்களுக்கு மானியப் பணம் வழங்கப்படவில்லை எனவும், அவர்களின் சமுர்த்திப் பணம் மட்டுமே வழங்கப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால் நேற்றுப் புதன்கிழமை காலை மன்னார் மாவட்ட செயலகத்திலிருந்து மறு அறிவித்தல் வரை சமுர்த்திப் பணத்தை வழங்குவதை இடைநிறுத்தும்படி சமுர்த்தி வங்கிகளின் முகாமையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பணம் வழங்குவது உடன் நிறுத்தப்பட்டது.

இதனால் பெரும் எதிர்பார்ப்போடு வந்தவர்கள் ஏமாற்றத்துடன் வீடு செல்ல நேரிட்டது. (த)

## பாதுகாப்புப் பிரிவினரின் வாகனம் மோதியதில் பொதுமகன் படுகாயம்

வவுனியா, ஜன. 8

பாதுகாப்புப் பிரிவினரின் வாகனம் மோதியதில் பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த வாகனமொன்று பொதுமகன் ஒருவர் மீது மோதியதில் பொதுமகன் படுகாயமடைந்துள்ள நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி விபத்து தொடர்பாகத் தெரியவருவதாவது:–

நேற்று வவுனியா ஹொரவப்பொத்தானை வீதியூடாகப் பயணித்த பாதுகாப்புப் பிரிவினருக்குச் சொந்தமான பஜிரோ ரக வாகனம் வவுனியா வெளிக்குளம் பகுதியை அண்மித்த வேளை அதே வீதியில் எதிர்ப்பக்கமாக மோட்டார் சைக்கிளில் வந்தவர் மீது மோதியது. மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் படுகாயமடைந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா நெடுங்குளம் பகுதியைச் சேர்ந்த மலலசேகர (வயது – 56) என்பவரே காயமடைந்தவராவார். இவருடைய இடுப்பு, கைவிரல் ஆகியவை முறிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாகனச் சாரதியைக் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

(த-421)

# இடையூறு விளைவித்தால் சூடு நடத்துவதற்கு உத்தரவு

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.8

பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படுதல், கொலை நடவடிக்கை அல்லது பாரதூரமான தாக்குதல் சம்பவங்களின் போதும் பொலிஸார் மீது யாரேனும் தமது பலத்தை பிரயோகிக்க முயற்சிசெய்தால் அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது பொலிஸார் தமக்கு வழங்கப்பட்டுள்ள துப்பாக்கியைப் பயன்படுத்துவர்.– இவ்வாறு தெரிவித்துள்ளார் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண.



நாளை (இன்று) 8ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான கடமைகளில் 66 ஆயிரத்து 100 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 5 ஆயிரம் விசேட படை அணியினர் என மொத்தமாக 71 ஆயிரத்து 100 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கு தமது பூரண ஒத்துழைப்பை பொலிஸார் வழங்கவுள்ளனர் – என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடும் சகல பொலிஸ் அதிகாரிகளுக்கும் ரி–56 ரக துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றைப் பயன்படுத்தவும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படுதல், கொலை நடவடிக்கை அல்லது பாரதூரமான தாக்குதல் சம்பவங்களின் போதும் பொலிஸார் மீது யாரேனும் தமது பலத்தை பிரயோகிக்க முயற்சிசெய்தால் அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது பொலிஸார் தமக்கு வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகளைப் பயன்படுத்துவர்.

2005 ஆம் மற்றும் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களைவிட இம்முறை தேர்தலில் பதிவான வன்முறை சம்பவங்கள் குறைந்துள்ளது டன் 2010ஆம் ஆண்டு தேர்தலின்போது 6 கொலைச் சம்பவங்கள் பதிவாகியதுடன் இம்முறை அவ்வாறான சம்பவங்கள் எதுவும் இதுவரையில் பதிவாகவில்லை.–என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந)

## வீட்டின் மீது துப்பாக்கிப் பிரயோகம்

கொழும்பு, ஜன.8

பெலியத்த பகுதியில் வீடொன்றின் மீது நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டமைக்கான ஆதாரங்களை வீட்டில் காணக்கூடியதாக இருப்பதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண கூறினார்.

துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பிலான மேலதிக தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ந)

## மைத்திரி சகோதரர் கைதாகி விடுதலை

கொழும்பு, ஜன.8

ஜனாதிபதித் தேர்தல் எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் இளைய சகோதரரான கப்பில சிறிசேன பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மூன்றாம் திகதி பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் மீது கப்பில சிறிசேன தாக்குதல் நடத்தியுள்ளார்.

இது தொடர்பில் அரலகங்வில பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் 5ஆம் திகதி சந்தேகநபர் அரலகங்வில பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அன்றைய தினமே சந்தேகநபர் பொலன்னறுவை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.– என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (ந)

## பொலிஸார் இருவர் சேவை நீக்கம்

கொழும்பு, ஜன.8

தெனியாய பொலிஸ் பிரிவில் இரு பொலிஸார் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மதுபோதையில் கடமையாற்றினர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவர்கள் கடமையில் இருந்து நீக்கப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் பரிசோதகர் ஆகியோரே இவ்வாறு சேவையில் இருந்து நீக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## இலக்கத் தகடற்ற வாகனங்கள் கைப்பற்றப்படும்

### பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.8

இலக்கத்தகடுகள் அற்ற வாகனங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவை கைப்பற்றப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முறைகேடுகள் நடைபெறுவதைத் தடுக்கும் நோக்குடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் நாள்களில் இலக்கத் தகடுகள் அற்ற வாகனங்கள், பதிவு செய்யப்படாத வாகனங்கள், போலி இலக்கங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள், இலக்கங்கள் தெளிவற்ற வாகனங்கள் என பலவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவை உட்பட வீ.ஐ.பி மற்றும் வீ.வீ.ஐ.பி ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்ட வாகனங்களும் நீதிமன்றில் முற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ந)

## வீதியில் இறங்கிய அரசனால் தெஹிவளையில் பரபரப்பு!

கொழும்பு, ஜன.8

கொழும்பு, தெஹிவளையில் அரசனைப் போன்று உடையணிந்து உரையாற்றிக் கொண்டிருந்த நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் குறித்த நபர் தெஹிவளை மேம்பாலத்தின் கீழ் தற்காலிக மேடையொன்றை அமைத்துக் கொண்டு அதன் மீது அரசனைப் போல உடையணிந்து பேசிக் கொண்டிருந்துள்ளார்.

பூரண அரச உடை, கிரீடம், காலணி, ஏனைய அணிகலன்களுடன் இடுப்பில் நான்கடி நீளமான இரும்பு வாளொன்றையும் செருகிக்கொண்டு இவர் பேசிக்கொண்டிருந்ததை அங்கிருந்த சிலர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்த 42 வயது நபர் கண்டி தியப்புலு பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் அவர் ஏதாவது மனநோயால் பீடிக்கப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். குறித்த நபரை மனநோய் வைத்தியரிடம் பரிசோதனைக்கு உட்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ந)

## செந்திலை கைது செய்யுமாறு பதுளையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன.8

ஊவா மாகாண சபை அமைச்சர் செந்தில் தொண்டமானை கைது செய்யுமாறு கோரி பதுளையில் தபால் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

பதுளை பிரதான தபால் அலுவலகத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



எல்ல – நியூபேர்க் தோட்டத்தில் வாக்காளர் அட்டை மற்றும் தபால் விநியோகத்தில் ஈடுபட்டு திரும்பிக் கொண்டிருந்த தபால் ஊழியரான பெரியசாமி ஞானசேகரன் மீது ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் தாக்குதல் நடத்தியிருந்தார் என்று கூறப்படுகின்றது. அதில் பாதிக்கப்பட்ட ஞானசேகரன் தற்போது பதுளை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

சம்பவம் குறித்து எல்ல பொலிஸார் நீதிமன்றுக்கு அறிக்கை தாக்கல் செய்தபின் செந்தில் தொண்டமானை கைது செய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

இந்தநிலையிலேயே அமைச்சரைக் கைது செய்யுமாறு தபால் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். (ந)

## தேர்தலுக்காக விசேட போக்குவரத்து ஏற்பாடு

கொழும்பு, ஜன.8

இன்று இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின் பொருட்டு தமது சொந்த ஊர்களுக்கு சென்று திரும்புவோர்களுக்கென விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.



இதன்படி போதுமான அளவில் பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்துமாறு இ.போ.ச. சாலை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி தலைவர் எல் ஏ விமலரட்ன தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு கொழும்பில் இருந்து நாட்டின் சகல பாகங்களையும் உள்ளடக்கும் வகையில் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், பயணிகளுக்கு தமது பயணத்தின் போது ஏதேனும் அசௌகரியங்கள் ஏற்படின் 1955 என்ற இலக்கத்திற்கு அறிவிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட பஸ் சேவைகள் எதிர்வரும் 11ஆம் திகதி வரையில் நடைபெறும் என்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ந)

## உணவுக்காக இ.போ.ச ஊழியர் பணிப்புறக்கணிப்பு

குருநாகல் பகுதியில் இலங்கை போக்குவரத்து சபை பஸ் ஊழியர்கள் சிலர் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நேற்று வாக்களிப்பு மத்திய நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. வாக்குப் பெட்டி ஏற்றிச் செல்லும் கடமைக்கு அழைக்கப்பட்ட தமக்கு காலை உணவு வழங்கவில்லை எனத்தெரிவித்தே பஸ் சாரதி மற்றும் நடத்துநர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ந)

## செய்திகள்

# இயக்குநர் ஜேம்ஸ் பீரிஸிடம் மன்னிப்பு கோரினார் சம்பிக்க



கொழும்பு, ஜன.8
பிரபல திரைப்பட இயக்குநர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸிடம் , ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க மன்னிப்பு கோரியுள்ளார். குமரன் பத்மநாதன் தொடர்பிலான புகைப்படமொன்றை காண்பித்தமைக்காகவே அவர் இவ்வாறு மன்னிப்பு கோரியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸும் இணைந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் திரிபுபடுத்தப்பட்டுள்ளது என்று அரசு குற்றம் சுமத்தியிருந்தது. இந்த புகைப்படத்தை கணினி மூலம் மாற்றியமைத்து அதில் குமரன் பத்மநாதனின் தலை இணைக்கப்பட்டுள்ளது என்றும் கூறியிருந்தது.

ஜனாதிபதிக்கும் குமரன் பத்மநாதனுக்கும் இடையில் தொடர்பு காணப்படுவதற்கான ஆதாரமாக, ஜனாதிபதி பத்மநாதனை ஆரத்தழுவிக் கொள்ளும் புகைப்படமொன்றை சம்பிக்க ரணவக்க ஊடகங்களுக்கு காண்பித்திருந்தார். இந்தப் புகைப்படம் போலியானது என்பதனை அறிந்து கொள்ளாது தாம் அதனைக் காண்பித்ததாகச் சம்பிக்க தெரிவித்துள்ளார். அதற்காக வருந்துதாகவும் இது தொடர்பில் மன்னிப்பு கோருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குமரன் பத்மநாதனுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதனை சுட்டிக்காட்டுவதே தமது நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# செய்திகள் சேகரிக்க 'சனல்-4'க்குத் தடை

## வெளிவிவகார அமைச்சு விதித்தது

கொழும்பு, ஜன.8
இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் செய்தி சேகரிப்பில் ஈடுபட முடியாதென பிரிட்டனைச் சேர்ந்த 'சனல்–4' ஊடகத்துக்கு வெளிவிவகார அமைச்சு அனுமதி மறுத்துள்ளது.

கடந்த காலங்களில் குறித்த 'சனல்– 4' ஊடகமானது இலங்கைக்கு விரோதமான ஆவணப் படங்களை தயாரித்து அரசுக்கும் நாட்டு மக்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. எனவேதான் இலங்கைக்குள் பிரவேசிக்க சனல் 4 ஊடகத்துக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் அந்த தொலைக்காட்சி தொடர்ந்தும் நாட்டுக்கு எதிராக செய்திகளை வெளியிட உள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் செய்தி சேகரிப்பில் ஈடுபட அதிகளவான இந்திய ஊடகங்கள் அனுமதி கோரியுள்ள நிலையில் அந்த நிறுவனங்கள் தொடர்பில் ஆராய்ந்த பின்னரே அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் ஜனாதிபதித் தேர்தலின்போது வெளிநாட்டு ஊடகங்களுக்கு அனுமதி அளிக்க மறுப்பது என்பது இலங்கையில் எத்தகைய ஊடக சுதந்திரம் நிலவுகிறது என்பதை வெளிக்காட்டும் யதார்த்தம் என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தேர்தலின்போது மோசடிகள் இடம்பெறலாம் என்பதனாலும் முடிவுகள் வன்முறைகளையும் பெரும் மாற்றங்களையும் உருவாக்கலாம் என்பதனால் சர்வதேச மத்தியில் இலங்கை ஜனாதிபதித் தேர்தல் குறித்த கவனம் ஏற்பட்டுள்ளது. (ற)

# பாப்பரசர் வருகையின் போது 54 பாடசாலைகள் மூடப்படும்

கொழும்பு, ஜன.8
பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸின் இலங்கைக்கான பயணத்தின் போது பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ள அதிகாரிகள் தங்குவதற்காக மேல் மாகாணத்தின் 54 பாடசாலைகள் மூடப்பட உள்ளன. இவை எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரையில் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு, கொழும்பு மற்றும் களனி பிரதேசங்களின் 54 பாடசாலைகளே இவ்வாறு மூடப்பட உள்ளதாக மேல்மாகாண கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு மூடப்படும் பாடசாலைகள் எதிர்வரும் 16ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட உள்ளன. – என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# ஜனநாயகத்தைக் காக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.8
ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் தயா ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொலிஸாருக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் கடமைகளின்போது பொலிஸார் கோரும் உதவிகளுக்கு ஏற்ப அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். வடக்கில் பாதுகாப்பு முழு அளவில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக இராணுவத்தினரைப் போன்று அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தரப்பினர் வேறு எவருமில்லை. ஜனநாயகத்தையும், தேசிய பாதுகாப்பையும் உறுதி செய்ய இராணுவத்தினர் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவர் – என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (ற)

# பரீட்சை மோசடி குறித்து விசாரணை ஆரம்பம்

## பரீட்சைத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.8
கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் மோசடிகளில் ஈடுபட்ட மாணவர்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுமார் 6 இலட்சம் மாணவர்கள் இம்முறை பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் 120 இலட்சத்துக்கும் அதிகமான விடைத்தாள்களை பரிசீலிக்க உள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு. எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்தார். இதன் முதற்கட்டம் கடந்த 5 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள மாணவர்களின் விடைத்தாள் திருத்தும் பணிகள் 16 ஆம் திகதியில் இருந்து, 23 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் சாதாரண தர பரீட்சையின் விடைத்தாள்களை திருத்தும் பணிகளின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதியில் இருந்து பெப்ரவரி 3 ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)




## இராணுவம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பொய்

கொழும்பு, ஜன. 8

தேர்தல் தொடர்பில் சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்று இராணுவம் அறிவித்துள்ளது. ஜனாதிபதி தேர்தல் கடமைகளில் படையினர் ஈடுபடுத்தப்படவில்லை என இராணுவம் தெரிவித்துள்ளது.

வழமையான கடமைகளில் ஈடுபடுமாறு இராணுவத்திற்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும், முகாம்களில் இருக்குமாறு கோரப்பட்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர்ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

நாடுமுழுவதிலும் இதே விதமான அணுகுமுறை பின்பற்றப்படும் எனவும் யாழ்ப்பாணத்திலும் இதே நிலைமை காணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிலஊடகநிறுவனங்கள்,இணையத்தளங்கள் போலியாக இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலை அமைதியான முறையில் நடத்துவதற்கு இராணுவத்தினர் எந்த வகையிலும் தடையாக இருக்க மாட்டார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். பொலிஸார் கோரிக்கை விடுத்தால் மட்டுமே படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந)

## வதந்திகளை நம்பவேண்டாம்

*– ஹரின் பெர்னான்டோ*

கொழும்பு, ஜன.8

எதிர்க்கட்சியினர் தொடர்பிலான வதந்தி களை மக்கள் நம்பக் கூடாது என ஊவா மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள் ளார்.

தாம் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டுள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த தகவல்கள் முழுக்க முழுக்க வெறும் வதந்தியே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சியின் எந்தவொரு முக்கியஸ்தரும் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். ஆளும் கட்சியினால் மேற்கொள்ளப்பட உள்ள இவ்வாறான பிரச்சாரங்களில் எவ்வித உண்மையும் கிடையாது எனவும் மக்கள் இதனை நம்ப வேண்டியதில்லை எனவும் ஹரீன்பெர்னாண்டோ கொழும்பு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (ந)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## என் மீது சேறு பூசுவதற்கு ஆளும் தரப்பினர் முயற்சி

### தேர்தல் ஆணையாளருக்கு சஜித் பிரேமதாஸ கடிதம்

கொழும்பு, ஜன. 8

தன் மீது சேறு பூசும் வகையில் ஆளும் கட்சியினரால் முன்னெடுக்கப்படும், முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடிதம் அனுப்பியுள்ளார்.

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்காக நான் நேர்மையான முறையில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஒரு போதும் அரசியல் வன்முறையில் ஈடுபடவில்லை. ஆனால் கடந்த சில தினங்களாக நான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கொள்ளவுள்ளதாக இணையங்கள் மற்றும் ஊடகங்கள் மூலம் பொய்ப் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது எங்கள் வேட்பாளர் மைத்திரி பால சிறிசேனவின் வெற்றியை தடுப்பதற்கான முயற்சியாகும். தேர்தல் பரப்புரைகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் மோசடி திட்டமொன்று முன்னெடுக்கப்படுகிறது.

> “இணையங்கள் மற்றும் ஊடகங் கள் மூலம் பொய்ப் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது எங்கள் வேட்பாளர் மைத்திரி பால சிறிசேனவின் வெற்றியை தடுப்பதற்கான முயற்சியாகும்.

நான் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவுக்கு ஆதரவு வழங்குவதாகவும் அதனால் அன்னப் பறவை சின்னத்திற்கு வாக்களிக்கவேண்டாம் எனவும் கோரி என்னுடைய பெயரைப் பயன்படுத்தி அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் நாடு முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டுவதற்குச் சூழ்ச்சிகள் செய்யப்படுகின்றன.

இந்தச் சூழ்ச்சி மூலம் எனது அரசியல் வாழ்க்கைக்கும் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரி பால சிறிசேனவின் வெற்றிக்கும் ஏற்படும் பாதிப்பை கருத்திற் கொண்டு இந்தச் சூழ்ச்சித் திட்டத்தைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார். (த-5)

## பத்திரிகை அலுவலகம் மீது துப்பாக்கிப் பிரயோகம்

### 12 பேர் சாவு; பிரான்ஸில் சம்பவம்



கொழும்பு, ஜன.8

பிரான்ஸின் பாரிஸ் நகரில் உள்ள சார்லி ஹெப்டோ பத்திரிகை அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதில் 12 பேர் உயிரிழந் துள்ளனர் என்றும், 5 பேர் காயமடைந் துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


இதுதொடர்பாக சம்பவத்தை நேரில் பார்த்தவர் கூறுகையில், இரண்டு நபர்கள் அரைமணி நேரத்திற்கு முன்னதாக கட்டிடத்திற்குள் நுழைந்தனர். பின்னர் அங்கு துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. பின்னர் அவர்கள் கட்டிடத்தை விட்டு ஓடினர். இருவரும் முகமூடி அணிந்திருந்தனர் என்று தெரிவித்துள்ளார். இச்சம்பவத்தை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. காயம் அடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கட்டிடத்தில் மீதம் இருந்தவர்கள் மீட்கப்பட்டனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த தாக்குதல் அங்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதற்கிடையே தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இதேவேளை இந்தப் பத்திரிகையில் கடந்த 2011ஆம் ஆண்டு இஸ்லாமிய தலைவர்கள் குறித்து கேலிசித்திரம் வெளியாகியுள்ளது. இதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவோ, அல்லது அண்மையில் அந்த வார இதழ் உலகின் பணக்கார தீவிரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல்பாக்தாதி பற்றி கார்டூன் வெளியிட்டிருந்தமைக்கு எதிரானதாகவோ இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டு உள்ளனர். (ந)

## எயர் ஏசியா விமானத்தின் பாகங்கள் கண்டுபிடிப்பு







லண்டன், ஜன.1

விபத்துக்குள்ளான ஏர் ஏசியா விமானத்தின் வால் பகுதியை கடலில் கண்டுபிடித்திருப்பதாக இந்தோ னேசிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்தோனேசியா அருகே உள்ள ஜாவா கடலில் 11 நாட்களுக்கு முன்னர் இந்த பயணிகள் விமானம் 162 பயணிகளுடன் விழுந்து நொறுங்கியது.

விமானத்தின் வால் பகுதியில் தான் விமானத்தின் ஒலி மற்றும் விமானப் பறத்தல் தொடர்பான பதிவு கள் செய்யப்படும் கருவி இருக்கும் என்பதல் இந்த கருவிகள் விரைவில் மீட்கப்படும் என்ற நம்பிக் கைகள் அதிகரித்துள்ளன.

இந்தோனேசியாவிலிருந்து சிங்கப்பூர் சென்ற இந்த விமானம் விபத்துக்குள்ளானது. இப்பகுதி யில் நிலவும் மோசமான வானிலை காரணமாக விமானத்தின் நொறுங்கிய பாகங்களைக் கண்ட றியும் முயற்சி தடங்கலுக்குள்ளானது.

இந்த வால் பகுதி, துகள்கள் பரவியிருக்கலாம் என்று கருதப்பட்ட இரண்டாம் நிலைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் விமா னத்தின் நொறுங்கிய பாகங்களை கடலின் பல மான நீரோட்டங்கள் நகர்த்தியிருக்கின்றன என்ற கருத்து வலுப்பெறுகிறது. (ந)



### கண்ணீர் அஞ்சலி

எமது பல்கலைக்கழக நண்பனும் தற்போது யூனியன் வங்கி உத்தியோகத்தருமான

**யோ.புருஷோத்தமன் அவர்களின் அன்புத் தந்தை**

**திரு செல்லையா யோகானந்தராசா**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**நண்பர்கள்**

**விவசாயபீடம் 14ஆம் மற்றும் 15ஆம் அணியினர்**

**யாழ் பல்கலைக்கழகம்.**

# விளையாட்டு

## ரஷ்ய உதைபந்து வீரர் சுட்டுப் படுகொலை

ரஷ்யாவைச் சேர்ந்த உதைபந்தாட்ட வீரர் கசான் மகோமெதோவ், தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அங்கு பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவர் டக்குகாசசஸின் டாஜெஸ் பகுதியில் உள்ள அன்ஷி மகா செக்கலா தேசிய கால்பந்து லீக் கிளப் அணியில் விளையாடி வந்தார். இங்கு தீவிரவாதிகளுக்கும், ரஷ்ய ராணுவத்துக்கும் இடையே அடிக்கடி சண்டை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் மகோமெதோவ் நேற்று முன் தினம் காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது மர்ம நபர் ஒருவர் இவர் மீது துப்பாக்கியால் சுட்டார். இதனால் இவர் படுகாயம் அடைந்தார்.

ரத்தவெள்ளத்தில் மயங்கிவிழுந்த அவரை உடனே மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் வழியிலேயே பரிதாபமாக இறந்தார். அவரை சுட்டுக் கொன்றது யார்? என்பது தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது. ரஷ்யாவில் 2018 ஆம் ஆண்டில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நடக்கிறது. இந்த சமயத்தில் வீரர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் ரஷ்யாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (த)

# நியூஸிலாந்திடம் வீழ்ந்தது இலங்கை



நியூஸிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டம் நேற்றைய தினம் நியூஸிலாந்தின் பசின் றிசேர்வ் மைதானத்தில் நிறைவுக்கு வந்தது.

ஏற்கனவே நடந்து முடிந்த முதலாவது ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 8 இலக்குகளால் வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கையணி முதலில் நியூஸிலாந்தை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதன்படி நியூஸிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 221 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பந்துவீச்சில் இலங்கையணி சார்பாக பிரதீப் 4 இலக்குகளையும் லக்மல் 3 இலக்குகளையும் பிரசாத் 2 இலக்குகளையும் மத்தியூஸ் 1 இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கையணி தனது முதல் இன்னிங்ஸுக்காக சகல இலக்குகளையும் இழந்து 356 ஓட்டங்களை குவித்து. 135 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. அதிக பட்சமாக சங்கா 203 ஓட்டங்களை குவித்தார். பந்து வீச்சில் நியூஸிலாந்து சார்பாக பிறேஸ்வெல் மற்றும் நீஸம் தலா 3 இலக்குகளையும் போல்ட் 2 இலக்குகளையும் சௌத்தி மற்றும் கிறைக் தலா 1 இலக்கையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியை தடுக்க வேண்டுமாயின் 135 ஓட்டங்களை பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணிக்கு வில்லியம்சன் இரட்டைச்சதம் கைகொடுக்க அணியின் ஓட்ட எண்ணிக்கை 5 இலக்குகள் இழப்புக்கு 524 ஆக இருந்த பொழுது நியூஸிலாந்து அணி ஆட்டத்தினை இடைநிறுத்தியது.

பந்துவீச்சில் இலங்கையணி சார்பாக பிரதீப் 3 இலக்குகளையும் ஹேரத் மற்றும் பிரசாத் தலா 1 இலக்கையும் கைப்பற்றினர்.

390 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த இலங்கையணிக்கு ஆரம்ப வீரரான கருணாரத்ன 17 ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றினார். அடுத்தடுத்து வந்த பிரசாத் 6 ஓட்டங்களுடனும் சங்கா 5 ஓட்டங்களுடனும் பவிலியன் திரும்பினர். தொடர்ந்து வந்த திரிமன்னே நிதானத்துடன் ஆட சில்வா 50 ஓட்டங்களுடன் வெளியேறினார். சில்வாவைத் தொடர்ந்து மத்தியூஸ் 8 ஓட்டங்களுடன் ஏமாற்ற இலங்கை அணி 5 இலக்குகள் இழப்புக்கு 110 ஓட்டங்களை பெற்றிருந்தது. அணியின் தோல்வியைத் தடுக்க திரிமன்னே போராடிக் கொண்டிருந்தாலும் மறுமுனையில் பிரசன்னா 10, சந்திமல் 13, ஹேரத் 0, லக்மல் 8, பிரதீப் 1 என ஒருவர் பின் ஒருவராக ஏமாற்ற இறுதியில் இலங்கையணி சகல இலக்குகளையும் இழந்து 196 ஓட்டங்களை மட்டுமே பெற்று 193 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. பந்துவீச்சில் நியூஸிலாந்து சார்பாக கிறைக் 4 இலக்குகளையும் பிறேஸ்வெல் மற்றும் போல்ட் தலா 2 இலக்குகளையும் சௌத்தி 1 இலக்கையும் கைப்பற்றினர்.

2 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரினை நியூஸிலாந்து அணி 2:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது. ஆட்டநாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் வில்லியம்சன் தெரிவானார்.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான ஒரு நாள் ஆட்டத்தொடர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கிறைஸ்சேர்ச்சில் ஆரம்பமாகவுள்ளது. (த–ரி)



## டெஸ்ட் ஆட்டமே எனது இலக்கு

சிட்னி டெஸ்டில் முதல் நாளன்று மிகச் சிறப்பாக ஆடி சதம் எடுத்தார் டேவிட் வோர்னர்.

இது பற்றி அவர் கூறியதாவது: 'நான், டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியின் தொடக்க வீரராக விளையாடுவதை எண்ணி ஒவ்வொரு நாளும் ஆச்சரியமடைகிறேன். ஓய்வு பெறும் வரை, டெஸ்ட் ஆட்டத்தில் கவனம் செலுத்தவே விரும்புகிறேன். இதைத்தான் என் துடுப்பாட்ட வாழ்க்கையின் முன்னேற்றமாக கருதுகிறேன்.

20/20 இல் இருந்துதான் நான் ஆரம்பித்தேன். ஆஸ்திரேலிய அணிக்காக இன்னும் பல ரி–20 ஆட்டங்களில் விளையாட எண்ணுகிறேன். வருங்காலத்தில் எவ்வளவு காலம் ஐ.பி.எல்லில் விளையாடுவேன் என்று தெரிய வில்லை. இந்த வருடம் ஐபிஎல்– லில் ஆடுவேன். ஐ.பி.எல்லில் ஆடாவிட்டால் 6 வாரங்கள் ஓய்வு கிடைக்க வாய்ப்புண்டு. அடுத்த 5 வருடங்களுக்கு நான் செய்ய வேண்டியவை குறித்து ஒரு திட்டம் இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன். துடுப்பாட்ட பிரபலங்கள் சிலர் 15,000 மற்றும் 10,000 ஓட்டங்களுக்கும் அதிகமாக எடுத்துள்ளார்கள். ஆனால் இப்போது உள்ளது போல ரி–20 ஆட்டங்களிலும் கவனம் செலுத்த வேண்டிய நிலைமை அவர்களுக்கு இருந்திருக்க வில்லை. ஏதாவது ஒன்றை இழந்து கூடுதலாக 50 டெஸ்ட் ஓட்டங்களில் ஆடமுடியுமா என்று பார்க்கிறேன். எக்காரணம் கொண்டும் டெஸ்ட் ஆட்டத்தினை என்னிடமிருந்து பிரிக்கக் கூடாது என்று எண்ணுகிறேன்.' என்றார். (த–ரி)



## நியூஸிலாந்து-இலங்கை டெஸ்ட் எண்கள் சொல்லும் சாதனைகள்

நியூஸிலாந்து–இலங்கை அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டம் நேற்றைய தினம் நியூஸிலாந்தின் பசின் றிசேர்வ் மைதானத்தில் சில சாதனைகளுடன் நிறைவுக்கு வந்தது.

சாதனைகளின் விபரம்.

365– நியூஸிலாந்தின் இரண்டாவது இன்னிங்ஸில் 6ஆவது இலக்குக்காக வில்லியம்சன் மற்றும் வற்லிங் இணைந்து 365 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். (வில்லியம்சன் 242, வற்லிங் 142) நியூஸிலாந்தின் டெஸ்ட் வரலாற்றில் 6ஆவது இலக்குக்காக பகிரப்பட்ட அதிகப்படியான இணைப்பாட்டமாக இதுவே அமைந்துள்ளது.

2006– நியூஸிலாந்தின் இரண்டாவது இன்னிங்ஸில் 3ஆம் இலக்க துடுப்பாட்ட வீரர் வில்லியம்சன் ஆட்டமிழக்காமல் 242 ஓட்டங்களைப் பெற்றார். 2006 ஆம் ஆண்டிற்கு பின்னர் நியூஸிலாந்தின் 3 ஆம் இலக்க வீரர் ஒருவர் இரட்டைச் சதம் அடிப்பது இதுவே முதல் தடவை. இறுதியாக 2006 இல் ஸ்ரீபன் பிளமிங் இரட்டைச்சதம் கடந்திருந்தார்.

242– வில்லியம்சனின் துடுப்பாட்ட வாழ்வில் அவர் பெற்ற அதிகப்படியான ஓட்டமாக இந்த 242 ஓட்டமே அமைந்துள்ளது.

3– நியூஸிலாந்தின் டெஸ்ட் வரலாற்றில் 6ஆவது இலக்குக்காக 200 ஓட்டங்களுக்கு மேல் 5 தடவைகள் பெறப்பட்டுள்ளது. அதில் வற்லிங் 3 தடவைகள் தொடர்புபட்டுள்ளார்.

61.44– வில்லியம்சனின் இரட்டைச் சதத்தின் பின்னர் இரண்டாவது இன்னிங்ஸில் அவரின் துடுப்பாட்டச் சராசரி 61.44 ஆக உயர்ந்துள்ளது.

01– வில்லியம்சனின் துடுப்பாட்ட வாழ்வில் அவர் பெற்ற முதலாவது இரட்டைச் சதம் இதுவே. கடந்த வருடம் பாகிஸ்தானுக்கு எதிராக அதிக பட்சமாக 192 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

(த–ரி)

0 8 JAN 2015




## ஏமாற்றத்தில் யுவராஜ்

கடந்த 2011 உலகக்கிண்ண தொடரில் பங்கேற்ற 9 ஆட்டங்களில் 362 ஓட்டங்கள், 15 இலக்குகள் வீழ்த்தி சகலதுறைவீரராக ஜொலித்தார் யுவராஜ் சிங். இவர் தான் உலகக்கிண்ணத்தின் தொடர் நாயகன் விருது வென்றவர். மோசமான துடுப்பாட்டம் காரணமாக, உலகக்கிண்ண உத்தேச அணியில் கூட இடம் கிடைக்கவில்லை.
மனம்தளராத யுவராஜ்சிங், ரஞ்சிக்கிண்ணத் தொடரில் 'ஹட்ரிக்' சதம் அடித்து, லேசான நம்பிக்கையுடன் காத்திருந்தார். கடைசியில் தலைவர் டோனியின் கடைக்கண் பார்வை கிடைக்காததால், காயத்தில் இருந்து மீளாத ஜடேஜா, இவரது இடத்தைத் தட்டிச் சென்றார். இதுகுறித்து யுவராஜ் சிங், கருத்து எதுவும் தெரிவிக்க மறுத்துவிட்டார். (த–ரி)

## மீண்டும் சதம் விளாசிய ஷேவாக்

ரஞ்சிக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் டெல்லி அணிக்காக விளையாடி வரும் விரேந்திர ஷேவாக் ஹரியானாவுக்கு எதிரான ஆட்டத்தில் சதமடித்தார்.
கடந்த வாரம் குஜராத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 105 ஓட்டங்களை ஷேவாக் அடித்திருந்தார்.
இந்நிலையில் ஹரியானா அணியுடனான இன்றைய தொடக்க நாள் ஆட்டத்தில் டெல்லி அணி 18.3 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 41 ஓட்டங் களை எடுத்து தடுமாறிக் கொண்டிருந்தது.
சரியான தருணத்தில் களத்துக்கு வந்த ஷேவாக் அதிரடியாக 129 பந்துகளை எதிர் கொண்டு 112 ஓட்டங்களைக் குவித்தார்.
உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் ஷேவாக் இடம்பெறாத நிலையில் ரஞ்சிப் போட்டியில் அதிரடியாக அடுத்தடுத்து சதமடித்து அசத்தியுள்ளார்.
இதேபோல் உலகக்கிண்ண போட்டிகளில் கழற்றிவிடப்பட்ட யுவராஜ் சிங்கும் பஞ்சாப் அணிக்காக விளையாடி ஹட்ரிக் சதங்களை அடித்தது குறிப்பிடத்தக்கது. (த)

> ஆட்டத்தின் மூன்றாம் நாள் இன்றாகும். ஆட்டம் இலங்கை நேரப்படி அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்



# ஆஸ்திரேலியா அபார ஆரம்பம்

ஜாம்பவான்களின் தொடர் என வர்ணிக்கப்படும் இந்திய மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 4 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் நேற்றையதினம் ஆஸ்திரேலியாவின் சிட்னி மைதானத்தில் ஆரம்பமாகியது.
ஏற்கனவே நடந்து முடிந்த மூன்று ஆட்டங்களில் முதல் இரண்டு ஆட்டங்களில் ஆஸ்திரேலிய அணி வெற்றியைப் பதிவு செய்தது. மூன்றாவது ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலாம் நாள் ஆட்டநேர முடிவில் ஆஸதிரேலிய அணி 2 இலக்குகள் இழப்பிற்கு 348 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.
தொடர்ந்து ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றைய தினம் வொட்சன் 81 ஓட்டங்களுடன் வெளியேறினார் அடுத்து வந்த மார்ஸ் சிமித்திற்கு சிறந்த இணைப்பாட்டத்தினை கொடுக்க சிமித் சதம் கடந்து அசத்தினார். ஆஸ்திரேலிய அணியின் ஓட்ட எண்ணிக்கை 415 ஆக இருந்த பொழுது 4வது இலக்காக சிமித் 117 ஓட்டங்களுடன் வெளியேறினார். இருப்பினும் தொடர்ந்து வந்த போர்ண்ஸ், மார்ஸ்ஸுடன் இணைந்து மற்றுமொரு இணைப்பாட்டத்தினை கொடுக்க ஆஸ்திரேலிய அணி மிகவும் வலுப்பெற்றது. இறுதியில் மார்ஸ் 73 ஓட்டங்களுடனும் போர்ண்ஸ் 58 ஓட்டங்களுடனும் வெளியேறினர். முடிவில் ஆஸ்திரேலிய அணி 7 இலக்குகள் இழப்புக்கு 572 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது.
பந்துவீச்சில் இந்தியா சார்பாக சமி 5 இலக்குகளையும் யாதவ் மற்றும் அஸ்வின் ஆகியோர் தலா 1 இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணிக்கு அதன் ஆரம்பவீரரான விஜய் எந்த ஓட்டத்தையும் பெறாமல் வெளியேறி அதிர்ச்சி கொடுக்க இந்தியஅணி ஓட்டங்கள் எதனையும் பெறாத நிலையிலேயே தனது முதல் இலக்கை இழந்து தவித்தது. இருப்பினும் மற்றுமொரு தொடக்க வீரரான ராகுலுடன் இணைந்த ரோகித் படிப்படியாக ஓட்டங் களை சேர்த்து அணியை சரிவில் இருந்து மீட்க நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 1 இலக்கு இழப்பிற்கு 71 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.
பந்து வீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஸ்ரார்க் 1 இலக்கைக் கைப்பற்றினார்.
(த–ரி)



# கழற்றிவிடப்பட்ட தவான்

## பழிவாங்கினாரா கோஹ்லி?



இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர் தவான், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் இருந்து அதிரடியாக நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.
ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியின் போது, உடைமாற்றும் அறையில் விராட் கோஹ்லியுடன், தவான் சண்டை போட்டார்.
இந்நிலையில் விராட் கோஹ்லி அணித் தலைவராகிய முதல் போட்டியிலேயே தவான் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.
சிட்னியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டி இன்று தொடங்கியுள்ளது. இந்த போட்டிக்கான இந்திய அணியில், தொடக்க வீரர் ஷிகர் தவான், புஜாரா ஆகிய இருவரும் நீக்கப்பட்டுள்ளனர். அதேபோல பந்துவீச்சாளர்களில் இஷாந்த் ஷர்மா நீக்கப்பட்டுள்ளார்.
லோகேஷ் ராகுல், ரோஹித் ஷர்மா, சகா (இலக்குக்காப்பாளர்), புவனேஸ்வர் குமார் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
ஷிகர் தவானுக்கு பதிலாக சேர்க்கப்பட்டுள்ள லோகேஷ் ராகுலுக்கு இது இரண்டாவது டெஸ்ட் போட்டியாகும். அவர் களம் கண்ட முதல் டெஸ்ட் போட்டியில் இரு இன்னிங்ஸிகளிலும் இரட்டை இலக்கத்தை தாண்டவில்லை.
இருப்பினும் ராகுலுக்கு வாய்ப்பு தந்துள்ள அணித்தலைவர் கோஹ்லி, தவானை கழற்றிவிட்டுள்ளார். இதற்கு காரணம், தவான் மீதான கோஹ்லியின் தனிப்பட்ட விரோதம்தான் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.(த)

## அறிவித்தல்

2015 - 01 - 08 ஆம் திகதி இன்று நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களும் அவர்களுக்குரிய தேர்தல் சின்னங்களும் கீழே குறிப்பிட்டுள்ளவாறாகுமென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

| |
|---|
| ஐதுருஸ் மொஹமட் இல்லியாஸ் |
| இப்றாஹில் மிப்லார் |
| பிரசன்ன பிரியங்கர |
| விமல் கிரினகே |
| சிறிதுங்க ஜயசூரிய |
| எம். பி. தெமினிமுல்ல |
| பாணி விஜேசிறிவர்தன |
| துமிந்த நாகமுவ |
| பனர்கொட தொன் பிரின்ஸ் சொலமன் அநுர லியனகே |
| மைத்திரிபால சிறிசேன |
| ருவன்திலக பேதுரு ஆரச்சி |
| அநுருத்த பொல்கம்பல |
| பத்தரமுல்லே சீலரதன தேரர் |
| சரத் மனமேந்திர |
| ஆரச்சிகே ரத்நாயக்க சிறிசேன |
| மஹிந்த ராஜபக்ஷ |
| நாமல் ராஜபக்ஷ |
| சுந்தரம் மகேந்திரன் |
| ஜயந்த குலதுங்க |

02. போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் தொடர் வரிசையையும் தேர்தல் சின்னங்களையும் திரிபுபடுத்தி தயாரிக்கப்பட்ட போலியான வாக்குச் சீட்டுக்களையும் பகிர்ந்தளிப்பதன் மூலம் வாக்காளர்களை குழப்ப நிலைக்கு உட்படுத்துவதற்கு திட்டமிட்ட கூட்டமொன்று முயற்சிகளை மேற்கொள்கின்றமையால் இவ்வறிவித்தல் வெளியிடப்படுகிறது.

03. முன் கூறப்பட்டவாறான அல்லது வேறு வகையான வாக்குச் சீட்டுக்களின் மாதிரிகளை விநியோகிக்க முயற்சியெடுக்கும் ஆள்களை கைது செய்யும்படி பொலிஸ் அலுவலர்களுக்கு அறிவுறுத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

தேர்தல் செயலகம்.
சரண மாவத்தை.
இராஜகிரிய
06.01.2015

மஹிந்த தேசப்பிரிய.
தேர்தல் ஆணையாளர்

## மரண அறிவித்தல்

### V.K.தியாகராஜா

(Retired Labour Officer)



அல்லையம்பதி, துன்னாலையைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது லண்டனில் வசித்துவந்த V.K.தியாகராஜா (ஓய்வுபெற்ற அதிகாரி தொழில் திணைக்களம்) 05.01.2015 திங்கட்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற அன்னபூரணத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வினோதினி (லண்டன்), சுந்தரேசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜோன் அல்பேட்நாதன் (லண்டன்), கோமதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வைஷ்ணவியின் (லண்டன்) அன்புப் பேரனும், சிங்காரம், பரிபூரணம் ஆகி யோரின் அன்புச் சகோதரனும், சீவரத்தினம், காலஞ்சென்ற வர்களான சாம்பசிவம், சிவபாதசுந்தரம் மற்றும் சச்சிதானந்தம், இராஜேஸ்வரி, தியாகராஜா ஆகியோரின் மைத்துனரும், பத்மாவதி,தவமணி, சிவநேசன், மகேஸ்வரி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.01.2015 ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருத்தனிகை,
மாவடி ஆலய வீதி, சங்கானை.

தகவல்:
க.சிங்காரம்
(சகோதரர்)

(55667)(4.7.3)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

LOGIC P.கமல்
A/L 2015 Day அளவாக்கல் கோட்பாடு
ஆரம்பம்: 10-01-2015 சனி 2.00 மணி
NEC ஆனைப்பந்தி, யாழ்நகர்.
பிரத்தியேக கணினி வகுப்பு
*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
*Ms office, Internet & E-mail, DTP, Web Design, Graphic Design, சிறுவர்களிற்கான கற்கைநெறி.
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.
ஆசிரியர்:KRC TP:0779672038

Business Academy
A/L Medium English & Tamil
*வணிகக்கல்வி *கணக்கீடு *பொருளியல்
A/L 2017 மற்றும் துரித மீட்டல் வகுப்பு ஆரம்பம்
10.01.2015 10.00AM
பிரபல ஆசிரியர் குழாம்
மேலதிக விபரங்களுக்கும், பதிவுகளுக்கும்...
Call to : 0767520940
No.19, Stanley Road. Jaffna.


காலை எழுந்திருங்கள்

வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லுங்கள்

நீங்கள் வாக்களியுங்கள்

உங்கள் குடும்ப அங்கத்தவரை வாக்களிக்கச் செய்யுங்கள்

உங்கள் அயலவரை வாக்களிக்கச் செய்யுங்கள்

உங்கள் உறவினர்களை வாக்களிக்கச் செய்யுங்கள்

வாக்களிப்பது உங்கள் ஒவ்வொருவரது கடமையாகும்

வளமான அழகான தேசத்தை கட்டியெழுப்புவோம்.

**வாக்களிப்பது ஒவ்வொருவரது சுதந்திரமாகும்.**

VOTE

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.